கல்கி




KALKI அக்டோபர் 4, 1953

4 அண

நாள் முழுவதும்

காலை வேளையில்



புத்துணர்ச்சி

பிற்பகலில்



அளிக்க...

இரவில்





குளுமையான நறுமணம் கொண்ட

ஹிமாலயா புக்கே பௌடர்களை உபயோகியுங்கள்

இரண்டு நேர்த்தியான அளவில் பௌடர்கள்



ஹிமாலயா புக்கே ஸ்னோ எல்லா சீதோஷ்ண நிலைகளிலும் சருமத்தைப் பாதுகாக்கிறது.

கல்கி

பொருளடக்கம்

மலர் 13 இதழ் 10 — 1953 அக்டோபர் 4 — விஜய புரட்டாசி 18

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 13 } தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் { இதழ் 10

அகில உலகமும் அஞ்சலி செய்கின்றது!

லண்டன் மாநகரிலே சித்திரம் எழுதுவதில் கைதேர்ந்த பெண்மணி ஒருத்தி, பாரத நாட்டின் மாபெரும் தலைவருடைய உருவப்படத்தை வரைந்து கொண்டிருந்தாள்.

அந்தப் பெண்மணியின் அழைப்புக்கு இணங்க நமது தலைவர் அவரது ஜாகைக்கு விஜயம் செய்தார். அப்போது அப் பெண்மணி தாம் எழுதிய உருவப் படத்துக்குக் கீழே கையெழுத்திட்டுத் தரும்படி பாரதத் தலைவரை வேண்டிக் கொண்டாள்.

உலகமே வணங்கும் நமது தலைவரும் அதற்கு இசைந்தார். மேற்படி சித்திர நிபுணரின் கையில் இருந்த 'பிரஷை' வாங்கிக் கொண்டார்.

"நானும் ஒரு சித்திரக்காரனே. நான் சித்திரம் எழுதும் திரை இந்தியாதான்" என்ற வார்த்தைகளைப் பொறித்தார். அதன் கீழ் "எம். கே. காந்தி" என்றும் கையெழுத்திட்டுக் கொடுத்தார்.

காந்தி சகாப்தத்துக்கு முன் பாரத நாடு இருந்த நிலையையும், காந்தி சகாப்தத்துக்குப் பிறகு அதாவது இன்றைய இந்தியாவின் நிலையையும் ஒப்பிட்டுப் பார்ப்பவர்களே காந்திஜியின் மேற்படி வார்த்தைகளில் பொதிந்துள்ள உண்மையை நன்கு உணர்ந்து கொள்ள முடியும்.

இந்தியாவாகிற திரையில் காந்தி மகான் தீட்டியுள்ள படம் அகில உலகத்தையும் அதிசயிக்கும்படி செய்திருக்கிறது.

எதிர்கால ஹிந்துஸ்தானத்தைப் பற்றிக் கவிச் சக்கரவர்த்தி பாரதியார் கண்ட கனவு, இந்தியாவின் முடிசூடாச் சக்கரவர்த்தி காந்திஜியின் காலத்தில் ஜீவ உருப் பெற்று பூர்த்தியாகியது.

ஆதி காலத்தில் மகரிஷிகளிடமிருந்து எழுந்த தவத் தீ பகைவர்களைத் தகித்ததாகக் கூறப்படுகிறது.

அது போலவே, மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக வேள்வியிலிருந்து எழுந்த தீ எட்டுத் திசைகளிலும் பரவியது; பாரத மக்களின் பகைவர்களாக இருந்த மனச் சோர்வு, அன்னியர் ஆட்சியில் மதி மயக்கம், குருட்டு நம்பிக்கை, கோழைத்தனம் முதலியவற்றை ஒழித்தது; அடிமைத்தன அந்தகாரத்தை அகற்றி, சுதந்திரத் தீபம் சுடர் விட்டெரியும்படி செய்தது.

* * * *

பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்ட சதிகளும் புரட்சிகளும் மலிந்துள்ள இந்த உலகில், காந்திஜி காட்டிய வழியைக் கண்டு உலக ராஜ தந்திரிகள் எள்ளி, நகையாடிய காலம் உண்டு.

ஏன், அவ்வழியில் நம்பிக்கை இராதவர்கள் இந்தியாவுக்கு உள்ளேயே ஏராளமாக இருக்கத்தான் செய்தனர்.

ஆனால், காந்திஜியின் ஆத்ம சக்தியும் தர்ம யுத்தமும் இறுதியில் வெற்றி அடைந்ததைக் கண்டு உலகம் முழுவதும் அதிசயத்தில் மூழ்கியது.

இந்தியா வாழ்வதா, வீழ்வதா என்ற மகத்தான பிரச்னையை வெகு நளினமாகத் தீர்ப்பதில் காந்திஜியின் வழி அமோக வெற்றி பெற்றது.

எனவே, உலகத்தை அல்லல்படுத்தும் பிரச்னைகளையும் தீர்க்க அதே வழியை ஏன் பின்பற்றக்கூடாது என்று சர்வ தேச ராஜதந்திரிகள் இப்போது சிந்திக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

சென்ற மகா யுத்தம் உக்ரமாக நடந்துகொண்டிருந்தபோது மகாத்மா காந்தி கூறிய வார்த்தைகள் இன்று அப்படியே உண்மையாகி இருக்கின்றன.

யுத்தத்தின் இறுதியில் வெற்றி பெற்றவர்கள், தோல்வியடைந்தவர்கள் இரு சாராரும் சோர்ந்து விடுவார்கள் என்றார். இரு சாராரும் எளிதில் சமாளிக்க முடியாத எண்ணிக்கையற்ற பிரச்னைகள் முளைக்கும் என்று எச்சரித்தார்.

அந்த மாபெரும் தலைவரின் தீர்க்க தரிசனம் பொய்த்து விடவில்லை; ஒரு சில வருஷங்களுக்குள்ளேயே அது உண்மையாகி விட்டது.

உலகிலுள்ள பெரிய வல்லரசுகளும் சரி, சிறிய நாடுகளும் சரி பற்பல எதிர்பாராத பிரச்னைகளைச் சமாளிப்பதற்குத் திணறிக் கொண்டிருக்கின்றன.

சென்ற சில வருஷங்களுக்குள் உலகில் உள்ள பல நாடுகள் சுதந்திரம் பெற்றுள்ளன.

எனினும், இந்தியாவைப் போல் சுதந்திரம் பெற்ற சில ஆண்டுகளுக்குள் உலகத்தின் நன் மதிப்பைப் பெற்ற தேசம் வேறு ஒன்றுமே இல்லை என்பது நிச்சயம்.

ஆயுத பலமின்றியே இந்தியா வல்லரசுகளையும் மிஞ்சிய செல்வாக்கையும் உயர்ந்த நிலையையும் அடைந்திருப்பது காந்தி கண்ட வழியின் பெருமையே ஆகும்.

சுதந்திரம் பெறுவதைக் காட்டிலும் ஒரு நாடு சமாளிக்க வேண்டிய மாபெரும் பிரச்னை வேறு இருக்க முடியாது.

அப்பேர்ப்பட்ட பிரச்னையைப் போர்த் தளவாடங்களின் உதவியின்றி நட்புடனும் நல்லெண்ணத்துடனும் சுமூகமாகத் தீர்த்த காந்திய வழி, சர்வதேசப் பிரச்னைகளையும் தீர்த்து உலகை உய்விக்க முடியும் என்ற அபிப்பிராயம் நாளுக்கு நாள் பலம் அடைந்து வருகிறது.

அதனாலேயே அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி காந்தி ஜெயந்தி வைபவத்தை அகில உலகமும் கொண்டாடுகிறது; அந்த மகானுக்கு உலக மக்கள் அஞ்சலி செய்கின்றனர்.

ஔவை செய்யும் அரிய தொண்டு

சென்ற சில மாதங்களில் இந்தப் பத்திரிகை இதழ்களில் ஆலய கும்பாபிஷேகக் காட்சிப் படங்கள் சில அவ்வப்போது வெளியாகியிருக்கின்றன. செல்லஞ்சேரி என்னும் தென்னாற்காடு ஜில்லா கிராமத்திலும், பொள்ளாச்சியிலும் நடந்த கும்பாபிஷேக வைபவங்களுக்கு எத்தனை பெருந்திரளான ஜனங்கள் பக்தி பரவசத்துடன் வந்திருந்து தரிசனம் செய்தார்கள் என்பதைப் பார்த்தோம். அம்மாதிரியே இந்த இதழிலும் புதுச்சேரிக்கு அண்மையில் பிரஞ்சு சர்க்கார் அதிகாரத்துக்கு உட்பட்ட கொட்டப்பாக்கம் என்னும் கிராமத்தில் ஸ்ரீ இராமலிங்க ஈசுவரர் ஆலய ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகக் காட்சிகளை வெளியிட்டிருக்கிறோம். எள்ளைப் போட்டால் எள் விழுவதற்கு இடமில்லாமல் லட்சக்கணக்கான ஜனங்கள் இந்த மகா கும்பாபிஷேகத்தைத் தரிசிப்பதற்காகப் பக்தி பரவசத்துடன் வீதிகளில் நெருங்கி நிற்பதைப் படங்களில் பார்க்கலாம்.

தமிழ் நாட்டில் இந்த ஆண்டில் பல ஆலயங்களைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் நடத்தியிருக்கிறார்கள். புதிய ஆலயங்களை நிர்மாணித்தும் கும்பாபிஷேகம் நடத்தியிருக்கிறார்கள்.

நாட்டில் நாஸ்திகப் பிரசாரம் தோன்றும் காலங்களிலேதான் ஆஸ்திகமும் பன்மடங்கு பரவி வளர்வு பெறுகிறது என்னும் உண்மையை இத்தகைய ஆலய கும்பாபிஷேக வைபவங்கள் நிரூபிக்கின்றன. இவை நிற்க.

இதே உண்மையைத் திரைப்பட உலகில் "ஔவையார்" படத்தின் மகத்தான வெற்றி அபூர்வமான முறையில் எடுத்துக் காட்டி நிரூபித்து வருகிறது.

சில காலமாகத் தமிழ்ப் படங்களில் தெய்வ நிந்தனையும் ஹிந்து மத தூஷணையும் அதிகமாக இடம் பெற்று வந்தன. இம்மாதிரி கட்டங்கள் வரும்போதெல்லாம் படம் பார்க்க வந்தவர்களில் ஒரு பகுதியார் கை கொட்டி ஆரவாரித்தார்கள். இம்மாதிரி கருத்துக்கள் உள்ள படங்கள் தான் இனி வெற்றி அடையும் என்ற நம்பிக்கை பட உற்பத்தியாளர் பலருடைய உள்ளத்தில் ஆழ்ந்து வேரூன்றத் தொடங்கியது.

பட உற்பத்தியாளரில் பலர் தெய்வ நம்பிக்கை உள்ள ஆஸ்திகர்கள். படத்தை ஆரம்பிக்கும் போது பிள்ளையார் பூஜை செய்து விட்டுப் பழனி யாண்டவரையும் வேண்டிக் கொண்டுதான் ஆரம்பிப்பார்கள். "விநாயகப் பெருமானே! நீ எல்லாம் அறிந்த தெய்வம். அப்பனே! முருகா! சண்முகா! உனக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. நான் பக்தியுள்ளவன்; எந்தக் காரியத்தையும் உன்னை நினையாமல் தொடங்குவதில்லை. ஆனால் இந்த சினிமாப் படத் தொழிலில் இறங்கி விட்டேன். சினிமா பார்க்க வரும் ஜனங்களின் மனப் போக்கு ரொம்பக் கெட்டுப்போயிருக்கிறது. யாராவது ஒரு தெய்வத்துக்கு ஏதேனும் ஒரு 'டோஸ்' கொடுத்தால்தான் சினிமாப் பார்க்க வருகிறவர்கள் ஆரவாரித்து மகிழ்கிறார்கள். ஆகையால் நானும் படத்தில் அம்மாதிரி சில கட்டங்களைப் புகுத்த வேண்டியிருக்கிறது. ஆனால் என் மனசு உனக்குத் தெரியும். என் உள்ளத்தில் குடி கொண்டுள்ள பக்தியும் உனக்குத் தெரியும். எனவே, படத்தில் ஏதோ உன்னைப்பற்றிச் சிறிது கேவலமாகப் பேசியிருந்தாலும் பொறுத்துக் கொண்டு படம் வெற்றி அடைய அருள் புரிய வேண்டும்" என்று பட உற்பத்தியாளர் பிரார்த்தனை செய்து கொள்வதும் வழக்கமாகி வந்தது.


ஸ்ரீ விநாயகரும் ஸ்ரீ முருகனும் மற்றத் தேவர்களும் இத்தகைய பிரார்த்தனைகளைக் கேட்டுப் புன்னகை புரிந்திருப்பார்கள். இத்தகைய பிரார்த்தனைகளுக்காக அவர்கள் பேசும் படங்களின் வெற்றி-தோல்விகளில் தலையிடப் போகிறார்களா, என்ன! படங்களின் வெற்றி - தோல்வி வேறு காரணங்களைக் கொண்டே ஏற்படும்.

இத்தகைய சூழ்நிலையில் ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் "ஔவையார்" படத்தை மிகப் பிரயாசைப்பட்டு எடுத்து வெளிக் கொணர்ந்தார். அதில் முழுக்க முழுக்க விநாயகரும் முருகப் பெருமானும் காட்சி அளித்தார்கள். ஔவையாரின் வரலாற்றை யொட்டிப் படம் ஆரம்பத்திலிருந்து முடிவு வரையில் ஆஸ்திகப் பிரசாரப் படமாக அமைந்தது. தோத்திரப் பாடல்கள் மயமாகவும் இருந்தது.

1953-ம் ஆண்டில் பல லட்சம் ரூபாய் செலவில் எடுக்கப்பட்ட இத்தகைய படத்தை வெளியிடுவதற்கு மிக்க துணிச்சல் இருந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட துணிவு திரைப்பட உலகில் ஸ்ரீ வாஸன் ஒருவருக்குத்தான் உண்டு என்று கூறுவது மிகையாகாது.

முதல் இரண்டு மூன்று வாரத்துக்குள்ளேயே படம் ஓடாமல் நின்று போய் விடும் என்று பலர் எதிர்பார்த்துச் சோதிடம் கூறினார்கள்; பந்தயம் கட்டவும் தயாரா யிருந்தார்கள்.

பதவி விடவில்லை!



இலங்கைப் பிரதம மந்திரி சேனநாயகா அந்தப் பதவியிலிருந்து விலகிக் கொள்ள விரும்புவதாகப் பலமான வதந்தி உலாவியது. ஆனாலும் அப் பதவி அவரை விடமாட்டேன் என்று ஒட்டிக் கொண்டிருக்கிறது.

இவர்கள் எதிர்பார்த்தபடி நடந்துவிடும் என்றே ஆரம்ப தினங்களில் தோன்றியது. ஏனெனில், சென்ற ஐந்தாறு ஆண்டுகளில் வழக்கமாக ஸினிமாப் பார்த்துப் பழக்கப் பட்டவர்களுக்கு "ஒளவையார்" படத்தில் ரஸிக்கக் கூடியது ஒன்றுமில்லை. தெய்வ நிந்தனைப் பிரசாரம், சாதித் துவேஷப் பிரசாரம், ஹிந்து சமயத்தையும் ஹிந்து நாகரிகத்தையும் இழிவு படுத்தும் ஆவேச மொழிகள் ஒன்றும் இப் படத்தில் இல்லை. 'ஸெக்ஸ் அப்பீல்' இடையிலே கிடையாது. ஆகவே இவ் விதமான கலைகளைப் படங்களில் வழக்கமாக எதிர் பார்த்துப் பழக்கப் பட்டவர்களுக்கு "ஒளவையார்" பெரும் ஏமாற்றமா யிருந்தது. ஸினிமாக் கொட்டகைக்காரர்களும் ஒருவாறு கடையைக் கட்டுவதற்கு மனத்தைத் திடப் படுத்திக் கொண்டார்கள்.

ஆனால் இரண்டு வாரத்துக்குப் பிறகு புதிய ஜனக் கூட்டம் "ஒளவையார்" பார்க்க வரத் தொடங்கியது. ஸினிமா என்றால் பயமும் அருவருப்பும் கொள்ளத் தொடங்கியிருந்த தாய்மார்களும் சகோதரிகளும் பெருந்திரளாக வரத் தொடங்கினார்கள். திரையில் நட்சத்திரங்களின் பெரிய முகங்களைக் கண்டதும் 'விஸில்' அடித்து ஆரவாரம் செய்யும் கூட்டத்துக்குப் பதிலாக ஒழுக்கமுள்ளவர்களும் ஆஸ்திகர்களுமான தமிழ்ப் பெருமக்கள் படம் பார்க்க வரத் தொடங்கினார்கள். இன்னும் வந்து கொண்டிருக்கிறார்கள். "ஒளவையார்"ப் படம் விமரிசகர்களிடையே எப்படி ஒரு முகமான நன்மதிப்பைப் பெற்றதோ, அவ்விதமே பொதுமக்களின் மகத்தான பாராட்டுதலையும் பெற்று வருவதைக் காண்கிறோம்.

ஆலய வழிபாட்டைக் குறித்தும் ஹிந்து தெய்வங்களைக் குறித்தும் வரம்பில்லாத நிந்தனைப் பிரசாரம் நடந்து கொண்டிருந்த தமிழ் நாட்டில்,

"ஆலயந் தொழுவது சாலவும் நன்று
ஒளவையார் பார்ப்பது அனைவர்க்கும் நன்று!"

என்பதாகத் துணிந்து விளம்பரம் செய்யக் கூடிய நிலைமை இன்று தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது!


இவ்வாறு ஆஸ்திகத்துக்கும், ஆலய வழிபாட்டுக்கும், இந்து சமயத்துக்கும், தமிழர்களின் ஒப்பற்ற பண்பாட்டுக்கும் "ஒளவையார்" படம் செய்து வரும் அருமையான தொண்டைப் பெரு மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறோம்.

ஆந்திர ராஜ்ய உதயம்

இந்தியத் தலைவர்கள் ஆசி கூற, ஆந்திர கேசரி ஸ்ரீ பிரகாசம் பிரதம மந்திரி பதவி ஏற்க, ஆந்திர சகோதர சகோதரிகளின் ஆனந்த ஆரவாரம் ஆகாயம் அளாவ, சங்கீத வித்துவான்கள் மங்கல வாழ்த்துக் கூற, அக்டோபர் 1உ ஆந்திர மாகாணம் அங்குரார்ப்பணம் ஆகிவிட்டது.

புதிய ஆந்திர மாகாணம் சுப சூசகங்களுடன் ஆரம்பமாகி இருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்

அவர் நிலைமை!



பிரஜா - சோஷலிஸ்டுக் கட்சியிலிருந்து ஸ்ரீ பிரகாசம் விலகிக்கொண்டு விட்டார். ஆயினும் அவருடைய மந்திரி சபையில் காங்கிரஸ்வாதிகளோடு பிரஜா-சோஷலிஸ்டுகளும் இடம் பெறுகிறார்கள்.

ஆகும். அங்கு மந்திரி சபை அமைப்பு சம்பந்தமாக ஏற்கெனவே ஏற்பட்ட அபிப்பிராய பேதம், எங்கு கவர்னர் ஆட்சியில் வந்து முடிந்து விடுமோ என்று பலரும் கருதினர்.

ஆனால் ஸ்ரீ பிரகாசம் அவர்களின் திடமான மனப் போக்கினால் ஆந்திர மாகாணம் எல்லோரும் போற்றத்தக்க முறையில் திருப்திகரமாக ஆரம்பமாவதற்கு வழி ஏற்பட்டது.

இவ்வளவு சுமுகமாகவும் அமைதியான சூழ்நிலையிலும் ஆந்திர மாகாணம் ஆரம்பமாகும் என்று சில மாதங்களுக்கு முன் யாருமே எண்ணியிருக்க மாட்டார்கள். ஆந்திர மாகாண அமைப்பு விஷயமாக ஏற்பட்ட வாக்குவாதம், மனஸ்தாபம், மாற்சரியம், கோபதாபங்கள் முதலியன மறைந்து திருப்திகரமான நிலைமை ஏற்பட்டது பற்றி அனைவரும் மகிழ்ச்சி அடைவார்கள்.

இந்திய தேசியப் போராட்டத்தின் முன்னணியில் நின்று இணையற்ற தியாகம் செய்தவரும், ஆந்திர ராஜ்ய ஸ்தாபனத்துக்கு அடிகோலியவரும், ஆந்திர மகா ஜனங்களின் பூரண அபிமானத்தைப் பெற்றவருமான ஆந்திரகேசரி டி. பிரகாசம் முதன் மந்திரி பதவி வகித்து ஆந்திர ராஜ்ய நிர்வாகத்தைத் தொடங்குவது மிகவும் பொருத்தமானது என்பதில் ஐயமில்லை.

ஆனாலும், முதன் மந்திரி பதவி வகிப்பதற்கென்று அவர் நேற்றுவரை அங்கத்தினராயும் தலைவராயும் இருந்த அரசியல் கட்சியிலிருந்து விலகும்படி நேரிட்டது அவ்வளவு விரும்பத்தக்க நிலைமை என்று சொல்ல முடியாது.

ஸ்ரீ பிரகாசம் அவர்கள் ஆந்திர ராஜ்ய ஆரம்பத்தில் முதன் மந்திரி பதவி வகிப்பது அவ்வளவு முக்கியமானது என்றால், அவர் பிரஜா - சோஷலிஸ்ட் கட்சியில் இருந்து கொண்டே முதன் மந்திரி பதவி வகிப்பது சாத்தியமாகச் செய்யப் பட்டிருக்க வேண்டும்.

அப்படிச் செய்திருந்தால் குடி முழுகிப் போயிராது; ஆந்திர சாம்ராஜ்யம் கவிழ்ந்து போயிருக்கவும் முடியாது.

பண்டித ஜவாஹர்லால் நேரு ஸ்ரீ ஜயப்பிரகாச் நாராயண் அவர்களைத் தமது மந்திரி சபையில் சேரும்படி அழைத்தபோது, அவர் கட்சியை விட்டு விலகி வரவேண்டும் என்று வற்புறுத்தவில்லையே!

அப்படியிருக்கும்போது, ஆந்திரகேசரி பிரஜா - சோஷலிஸ்டாயிருந்து கொண்டே முதன் மந்திரி பதவி வகித்து, அவருடைய மந்திரி சபையில் பெரும்பாலோர் காங்கிரஸ் வாதிகளாயிருந்தால், நிர்வாகம் எந்த விதத்தில் கெட்டுப் போய்விடும்?...

எப்படியோ, ஆந்திர ராஜ்யம் உதயமாகி விட்டது. ஆந்திர கேசரியும் முதன் மந்திரியாகி விட்டார். இனியேனும் அந்தப் புதிய ராஜ்யத்தில் கட்சிப் பிணக்குகள் பெருகாமலும், கட்சி விட்டுக் கட்சி மாறுதல்கள் நடவாமலும், நல்ல முறையில் அரசியலும் அரசாங்கமும் நடைபெற வேண்டுமென்று விரும்புகிறோம்.

பொதுத் தேர்தல் ஏன்?

திருவாங்கூரில் அடித்த புயல் அந்த ராஜ்யத்தின் மந்திரி சபையாகிற விருட்சத்தையே வேருடன் பறித்து வீழ்த்தி விட்டது!

திருவாங்கூர்—கொச்சி சட்ட சபையில் பிரதமர் ஸ்ரீ ஏ. ஜே. ஜான் கொண்டு வந்த நம்பிக்கைத் தீர்மானம் தோல்வியுற்றது; அதன் விளைவாகத் திருவாங்கூர்—கொச்சி ராஜப் பிரமுகர் சட்ட சபையைக் கலைத்து விட்டார்; புதிய தேர்தல் நடத்தும்படியும் உத்தரவிட்டுள்ளார்.

நம்பிக்கைத் தீர்மானத்துக்குச் சாதகமாக ஐம்பத்தொரு வோட்டுகளும் பாதகமாக ஐம்பத்தாறு வோட்டுகளும் கிடைத்ததால் அது தோல்வி அடைந்தது. திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒன்பது பேர்களும் மேற்படி தீர்மானத்துக்குச் சாதகமாக வாக்குக் கொடுத்திருந்தால், மந்திரி சபை வீழ்ந்திருக்காது.

திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் தேச பக்தியிலோ, காங்கிரஸ் ஸ்தாபனத்திடம் உள்ள விசுவாசத்திலோ யாருக்கும் குறைந்தவர்கள் அல்ல. சென்ற பொதுத் தேர்தலில் அவர்கள் அமோக வெற்றி பெற்றும் கூட, அவர்கள் தனிக் கட்சியாகப் பிரிந்து நிற்கவில்லை. காங்கிரஸ் சர்க்காருடன் ஒத்துழைக்க முன் வந்தார்கள். அவர்களுடைய ஆதரவு கிடைத்திராவிடில், திருவாங்கூர் — கொச்சி ராஜ்யத்தில் காங்கிரஸ் சர்க்கார் ஏற்பட்டிருக்க முடியாது.

சென்ற பதினெட்டு மாதங்களாகக் காங்கிரஸ் சர்க்காரை ஆதரித்து வந்த தி. த. நா. காங்கிரஸ் பிரதிநிதி மந்திரி சபையிலிருந்து விலகி விட்டார் என்பதைக் காட்டிலும், அவர் விலகிக் கொள்ளும்படியான நிலைமையைத் திருவாங்கூர் — கொச்சி ராஜ்யத் தலைவர்கள் சிருஷ்டித்து விட்டார்கள் என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும்.

தி. த. நா. காங்கிரஸ் கட்சியினருக்கும் தி. கொ. காங்கிரஸ் கட்சியினருக்கும் முக்கிய கொள்கையில் சிறிதும் வேற்றுமை இல்லை.

பாஷாவாரி மாகாணக் கோரிக்கை நியாயமானது என்பது தேசிய மகா சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விஷயம். திருவாங்கூரைச் சேர்ந்த தமிழ்ப் பிரதேசங்களை உடனே பிரித்துத் தமிழ் நாட்டுடன் இணைக்க வேண்டும் என்று தி. த. நா. காங்கிரஸ் தலைவர்கள் கேட்கவில்லை. அவர்கள் தனி ஸ்தாபனமாக இருக்க அனுமதிக்க வேண்டும் என்ற தர்ம நியாயமான கோரிக்கை காங்கிரஸின் கொள்கைக்கோ, சட்ட திட்டங்களுக்கோ முரண்படாத சில்லறை விஷயம் ஆகும். அப்படியிருக்க, அதற்குக் கூட இணங்க மறுத்தது ராஜ தந்திரமற்ற செய்கை எனலாம்.

மந்திரி சபையை வீழ்த்தும் அளவுக்கு அவர்களுடைய செய்கை, தி. த. நா. காங்கிரஸ் தலைவர்களிடையே மனக் கசப்பை உண்டாக்கி விட்டது.

இதன் காரணமாக, ஊர் கூடிச் செக்குத் தள்ள வேண்டிய நிலைமையை உண்டாக்கியிருக்கிறார்கள்.

தேர்தல் நடத்துவதாயின் எவ்வளவு கால விரயம், பணச் செலவு முதலியன ஏற்படும் என்பதை தி. கொ. காங்கிரஸ் யோசித்துப் பார்க்கவில்லை.

எது எப்படியாயினும், மேற்படி ராஜ்யத்தில் நடக்கப் போகும் புதிய தேர்தலில் பெருவாரியான மக்கள் காங்கிரஸையே ஆதரிப்பார்கள் என்று நம்புகிறோம். தி. த. நா. காங்கிரஸ் பிரமுகர்கள் காங்கிரஸில் இருந்து கொண்டே தங்களுடைய உரிமைகளைப் பெறத் தொடர்ந்து போராடுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

"சதமானம் பவதி..."



புதிய ஆந்திர மாகாண ஆரம்ப விழாவுக்கு இந்தியாவின் பிரதம மந்திரி நேருஜியும், ராஜாஜியும் மற்றும் பல பிரமுகர்களும் விஜயம் செய்து ஆசி கூறினர்.

நெருக்கடி தீர்ந்தது!

—கொழும்பு செப்டீ 25 உ

இலங்கை அரசியலில் ஏற்பட்டிருந்த மிகப் பெரிய நெருக்கடி பிரதம மந்திரி ஸ்ரீ டட்லி சேனநாயகாவின் விவேகமான தீர்மானத்தினால் தீர்ந்தது. தேச மக்கள் இப்பொழுதுதான் அப்பாடா என்று மூச்சுவிட ஆரம்பித்திருக்கிறார்கள். சென்ற பத்துப் பன்னிரண்டு தினங்களுக்கிடையில் அரசியல் ஜுரம் விஷம் ஏறுவதைப் போல விரு விரு என்று அதிகரித்துப் பிரதம மந்திரி எந்த வினாடியிலும் ராஜீநாமாச் செய்து விடலாமென்று எதிர்பார்க்கப் பட்டது. சென்ற திங்கட்கிழமை பிரதமர் கவர்னர் ஜெனரலைப் பார்த்து விட்டுத் திரும்பிய பின் அடுத்த மூன்று தினங்கள் காரியாலயத்துக்குப் போகாமலும், சகா மந்திரிகள் உள்ளிட்டு எவரும் தம்மைச் சந்தித்துப் பேச அனுமதியாமலும் "டெம்பின் ட்ரீஸ்" என்ற தமது வாசஸ்தலத்திலேயே இருந்து வந்தார்.

இதற்கிடையில், பிரதமர் பதவியைத் துறக்காமலிருக்கையிலேயே அந்தப் பதவிக்கு இரு மந்திரிகளுக்கிடையில் போட்டா போட்டிகள் ஏற்பட்டு அவர்கள் பகிரங்கமாகவே ஆதரவு தேட ஆரம்பித்தார்கள். இதில் சக்தி மிக்க ஒரு அந்நிய வல்லரசும் தனது கை வரிசையைக் காட்டிச் சதி செய்ய வாரம்பித்தது. இலங்கையின் அடுத்த பிரதமர் யார் என்ற போட்டி இந் நாட்டில் இரண்டு அந்நிய வல்லரசுகளுக்கிடையில் யாருக்கு அதிகச் செல்வாக்கு என்ற ஆதிக்கப் போட்டியாக உருவாகியதென்று கூடச் சொல்லலாம். இன்று வெள்ளிக் கிழமை காலை பிரதமர் ஸ்ரீ சேனநாயகா பதவியைத் துறக்கவும் புதிய பிரதமர் பதவி ஏற்கவும் திட்டமிட்ட எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியாகி, கடைசி நிமிடத்தில் ஸ்ரீ சேனநாயகா ராஜீநாமாச் செய்யப் போவதில்லை யென்ற தீர்மானத்தை நேற்றிரவு அறிவித்தார்.

சென்ற ஆகஸ்டு மாதம் நடைபெற்ற ஹர்த்தாலும் அதன் விளைவாக ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகமும் மரணங்களும் மதபக்தியும், மனச்சாட்சியுமுடைய பிரதம மந்திரியை வெகுவாகப் பாதித்து விட்டன. இவையும் வயதுக்கு மீறிய வேலைகளும் பிரதம மந்திரியின் தேக நிலைமையைக்கூடச் சீர்குலைக்க ஆரம்பித்து விட்டன. இதன் பயனாகப் பிரதமர் ராஜிநாமாச் செய்து ஓய்வெடுத்துக் கொள்ளலாமா என்று நினைத்த சமயத்தில் பிரதமர் பதவியைக் கைப்பற்றத் தமது சகாக்களுக் கிடையிலேயே சதி நடப்பது அவர் காதுக்கு எட்டி மனத்தை நோகடித்து விட்டது. பதவியை மட்டுமல்ல, லோகாயத வாழ்க்கையையே துறந்து பௌத்த சந்நியாசியாகிவிடப் பிரதமர் முடிவு செய்து விட்டதாக வதந்திகள் கிளம்பி, உண்மையாக அவ்விதம் செய்யத் தூண்டும் அளவுக்கு நெருக்கடி முற்றியது.

வியாழக்கிழமை இலங்கையின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததும் 2,200 வருடப் பழமை வாய்ந்ததும், புத்த பகவான் விஜயம் செய்த ஞாபகார்த்தமாக அவருடைய பாத தூளிபட்டுப் புனிதமடைந்த இடத்தில் முதன் முதலாகக் கட்டப்பட்டதுமான மஹியங்கனை பௌத்த ஆலயத்தின் புனருத்தாரணத்துக்குப் பிரதமர் சேனநாயகா அஸ்திவாரக்கல் நாட்டினார். அந்தப் பிரசங்கத்தில் பதவியில் தொடர்ந்து இருப்பதா அல்லது பௌத்த பிக்ஷு ஆவதா என்ற தீர்மானத்தை அவர் வெளியிடுவாரென்று தேசமக்கள் ஆவலுடனும் கவலையுடனும் எதிர்பார்த்தனர்.

மஹியங்கனை ஆலய விழாவின் பொழுது பிரதமர் ராஜிநாமாச் செய்யக் கூடாதென்று கண்ணீர் விட்டுக் கோரினர். செனட்டர் சொய்ஸாவும் செனட் சபைத் தலைவர் ஸர் அட்டிகலேயும் பொதுக் கூட்டத்தில் பேசிய பொழுது "இவ்வளவு மனச் சாட்சியும் நேர்மையுமுடைய பிரதமர் பதவியைத் துறந்தால் நாடு நிர்மூலமடைந்து விடும்" என்று சொல்லிக் கதறினர்கள். ஆனால் பிரதமர் அந்தக் கூட்டத்திலும் தமது மனத்தை வெளிப்படுத்தவில்லை. மனித குலத்துக்குப் பௌத்த தர்மத்தைப் பரப்பும் பாக்கியம் தமக்குக் கிடைக்க வேண்டுமென்று விரும்புவதாக மட்டும் சொன்னார். பிரதமர் டட்லி சேனநாயகா பிக்ஷு ஆகப்போகிறாரென்ற வதந்தியை மேலும் இது ஊர்ஜிதப்படுத்தியது.

இரவு மஹியங்கனை புனித ஸ்தலத்திலிருந்து திரும்பிய பிறகுதான், பலருடைய வேண்டுகோளுக்கும் இணங்கிப் பதவியை ராஜிநாமாச் செய்ய மாட்டேன் என்று அறிவித்து, இரண்டு வார காலமாக ஏற்பட்டிருந்த நிச்சயமற்ற நிலைமைக்கும், வதந்திகளுக்கும் அபாயகரமான ஆதிக்கப் போட்டிக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்தார்.

பிரதமர் செய்த முடிவில் இலங்கை இந்தியர்கள் குறிப்பாகத் திருப்தியடைய நியாயமிருக்கிறது. இந்தியப் பிரச்னையில் அவருடைய கருத்து எப்படி யிருப்பினும், அவரது நேர்மையை இந்தியர்கள் ஒருபோதும் சந்தேகித்ததில்லை.

இதற்கு அனுசரணையாக இலங்கை இந்திய காங்கிரஸிடம் செல்வாக்குள்ள மந்திரிகளுக்கு மனமாறுதல் ஏற்பட்டு வரும் அறிகுறிகளும் சில வாரங்களாகத் தென்பட்டு வருகின்றன. ஹர்த்தாலில் கலந்து நாட்டைச் சீர்குலைக்காமலிருந்த இந்திய காங்கிரஸுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்புதான் போக்குவரத்து மந்திரி ஸர் ஜான் கொத்தலாவலை நன்றி தெரிவித்தார். பல மாதங்களாக நீடிக்கும் கந்தலோ தோட்டத் தகராறைத் தீர்ப்பதற்காக இவ்வாரம் நடந்த ஒரு மகாநாட்டில் உணவு மந்திரி ஸர் ஆலிவர் குணதிலகா பேசியபொழுது ஸ்ரீ தொண்டமானின் விவேகத்தை வானளாவப் புகழ்ந்தார். "ஸ்ரீ தொண்டமான் மாத்திரம் பத்து லட்சம் தோட்டத் தொழிலாளரை ஹர்த்தாலில் ஈடுபடுத்தி யிருந்தால் இன்று இந்த அறையில் நாம் அமைதியாக உட்கார்ந்து பேசச் சாத்தியப் பட்டிருக்காது. நாடும் நகரமும் சர்வ நாசமாயிருக்கும். நாட்டை நாசத்திலிருந்து காப்பாற்றிய ஸ்ரீ தொண்டமான் தோட்ட முதலாளிகள் மீது புகார் செய்யும் பொழுது அரசாங்கம் அதை அசட்டை செய்ய முடியாது!" என்று ஸர் ஆலிவர் குணதிலகா தோட்ட முதலாளிகளை எச்சரித்தார்.

* * *

யாழ்ப்பாணத்தில் ஒரு மத்திய நூல் நிலையத்தை நிறுவ யோசனை கூறுவதற்காகவந்த டில்லி சர்வகலாசாலைப் பேராசிரியர் டாக்டர் ரங்கநாதன் பல அரிய சொற்பொழிவாற்றிவிட்டு இப்பொழுது கொழும்பில் பல சங்கங்களின் ஆதரவிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்துகிறார்.

—ரஜனி.



அத்தியாயம் 43

மீண்டும் கொள்ளிடக்கரை

கொள்ளிடத்தின் வடகரையிலுள்ள திருநாரையூர் என்னும் கிராமத்தில் நம்பியாண்டார் நம்பி என்னும் சைவப் பெரியாரின் மடாலயம் இருந்தது. அதன் வாசலில் அரண்மனைப் பல்லக்கு ஒன்றும் பல்லக்குத் தூக்கிகளும் காவல் வீரர்களும் நின்றனர். இவர்களைத் தவிர கிராமவாசிகள் சிறிது தூரத்தில் கூட்டம் கூடி நின்றார்கள். அந்தக் கூட்டத்துக்கு மத்தியில் இரண்டு பேருக்குள் ஏதோ கடுமையான விவாதம் நடந்தது போலவும், அதை அக் கூட்டத்தார் உற்சாகத்துடன் கவனித்துக் கொண்டு வந்ததாகவும் தோன்றியது.

ஜனக் கூட்டத்தைச் சற்று விலக்கிக் கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தோமானால், நமக்கு முன்னே பழக்கமான இருவர்தான் அங்கே நின்று சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள் என்பது தெரிய வரும். அவர்களில் ஒருவன் திருமலை என்ற ஆழ்வார்க்கடியான் நம்பி. மற்றொருவர், நம் கதையின் ஆரம்பத்திலேயே அவனுடன் படகில் விவாதம் தொடுத்த வீர சைவர்; நம்பியாண்டார் நம்பியின் சைவ மடாலயத்தில் பிரதான காரியக்காரர்.

நம்பி ஆண்டாரைப் பார்ப்பதற்காக வந்திருந்த பெரிய பிராட்டி செம்பியன் மாதேவி அந்த மகானுடனே ஏதோ தனிமையில் பேச விரும்புகிறார் என்பதை அறிந்து கொண்டதும் மேற்கூறிய வீர சைவப் பெரியார் வெளியேறி வந்தார். ஆழ்வார்க்கடியானைப் பார்த்ததும் அவருக்கு இயற்கையாகவே ஆத்திரம் பொங்கி வந்தது. முன்னொரு தடவை அந்த வீர வைஷ்ணவ சிகாமணியிடம் விவாதத்தில் தோல்வியடைந்து விட்டோம் என்கிற எண்ணம் அந்த ஆத்திரத்தை மூட்டியது.

"அடே! நாமத்தைப் போட்டு ஊரை ஏமாற்றும் வேஷதாரி வைஷ்ணவனே! இங்கே எங்கு வந்தாய்? எங்கேயாவது பொங்கல் — புளியோதரை கிடைக்குமிடம் பார்த்துக் கொண்டு போவதுதானே?" என்றார்.

"பொங்கல் புளியோதரை வேண்டிய மட்டும் சாப்பிட்டு விட்டுத்தான் வருகிறேன். இங்கேயுள்ள சைவ மடத்தில் நீங்கள் எல்லாரும் சாம்பலைத் தின்று உடம்பு வீங்கிப் போய்க் கிடக்கிறீர்கள் என்று அறிந்து வந்தேன். பாவம்! நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்கள் சிவபெருமான் சாப்பிட அன்னம் கிடைக்காத காரணத்தினாலேதான் விஷத்தை உண்டார்? அப்போது மட்டும் எங்கள் நாராயண மூர்த்தியின் சகோதரி பார்வதி கழுத்தைப் பிடிக்காமலிருந்திருந்தால் உங்கள் சிவனுடைய கதி யாதாகியிருக்கும்?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"அடே வீர வைஷ்ணவனே! நிறுத்து உன் கதையை! உயர உயரப் பறக்காதே! உங்கள் பெருமாள் உயர உய

ரப் பறந்தும் எங்கள் சிவபெருமானுடைய முடியைக் காண முடியாமல் திரும்பி வந்தாரில்லையா?"

"அது என்ன ஐயா கதை? எங்கள் மகாவிஷ்ணு வாமனவதாரம் எடுத்து வந்து பூமியை ஒரு அடியினாலும் வானத்தை இன்னொரு அடியினாலும் அளந்தபோது, உங்கள் சிவனுடைய முடி அந்த அடிக்குக் கீழே தானே இருந்திருக்க வேண்டும்?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"உங்கள் மகாவிஷ்ணு பத்துத்தடவை பூலோகத்தில் பிறந்ததிலிருந்தே அவருடைய வண்டவாளம் வெளியாகவில்லையா? அதிலும், எப்படிப்பட்ட பிறவிகள்? மீனாகவும் ஆமையாகவும் பிறந்தாரே?" என்றார் வீர சைவர்.

"உமக்குத் தெரிந்தது அவ்வளவுதான்! பகவான் மீனாகப் பிறந்தது எதற்காக? கடலில் மூழ்கிப் போன நாலு வேதங்களையும் திருப்பிக் கொண்டு வருவதற்கல்லவோ? ஆகையினாலேதான் எங்கள் ஆழ்வாரும்,

'ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்
தேனார் பூஞ்சோலை திருவேங்கடச்சுனையில் [டேன்
மீனாய்ப் பிறக்கும் தவமுடையேனாவேனே!'

என்று பாடியிருக்கிறார்......!"

"அப்பனே! உங்கள் ஆழ்வார்கள் பன்னிரண்டுபேர்தான்! எங்கள் நாயன்மார்கள் அறுபத்து மூன்று பேர்! அதை ஞாபகம் வைத்துக் கொள்!"

"ஓகோ! இப்படி வேறே ஒரு பெருமையா? பஞ்ச பாண்டவர்கள் ஐந்து பேர்தான்; துரியோதனாதியர் நூறுபேர் என்று பெருமையடித்துக் கொள்வீர் போலிருக்கிறதே!"

"அதிகப் பிரசங்கி! எங்கள் நாயன்மார்களைத் துரியோதனன் கூட்டத்தோடு ஒப்பிடுகிறாயா? உங்கள் ஆழ்வார்களிலேதான் பேயாழ்வார், பூதத்தாழ்வார் எல்லாரும் உண்டு."

"உங்கள் சிவபெருமானுடைய கணங்களே பூதகணங்கள்தானே? அதை மறந்து விட்டீரா ங்காணும்?..."

இப்படி வீர வைஷ்ணவரும் வீர சைவரும் வாதப் போர் நடத்திக்கொண்டிருந்த போது இருதரப்பிலும் சிரத்தையுள்ளவர்கள் இடையிடையே ஆரவாரித்து உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தார்கள். இச் சமயத்தில் மடாலயத்துக்குள்ளிருந்து சிவஞான கண்டராதித்தரின் திருத் தேவியான செம்பியன் மாதேவியும் அவரை வழி அனுப்புவதற்காக நம்பியாண்டார் நம்பியும் வெளியே வருவதைக் கண்டு, அக் கூட்டத்தில் நிச்சப்தம் நிலவியது.

மழவரையன் மகளார் நம்பியாண்டாரிடம் விடை பெற்றுக் கொண்டு வந்து ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, "திருமலை! இங்கேகூட உன் சண்டையை ஆரம்பித்து விட்டாயா?" என்றார்.

"இல்லை, தேவி! நாங்கள் மற்போர் நடத்தவில்லை; சொற்போர்தான் நடத்தினோம். இந்த வீர சைவ சிகாமணி தான் முதலிலே போரை ஆரம்பித்தார்! எங்கள் சொற்போர் இங்கே கூடியிருப்பவர்களுக்கெல்லாம் மிக்க உற்சாகத்தை அளித்தது. அதனாலேதான் மடாலயத்துக்குள்ளே பிரவேசியாமலிருந்தார்கள்" என்றான் திருமலை.

"அப்பனே! தெய்வங்களுக்குள்ளே உயர்வு, தாழ்வு சொல்லி வேடிக்கையாகக் கூட விவாதம் செய்யக் கூடாது. அதனால், சாதாரண ஜனங்களின் உள்ளம் குழப்பத்துக்கு உள்ளாகும்! என் மாமனாராகிய பராந்தக தேவர் தில்லைச் சிற்றம்பலத்துக்குப் பொற் கூரை வேய்ந்தார். அம்மாதிரியே வீரநாராயணபுரத்திலுள்ள அனந்தீசுவரர் கோயிலுக்கும் திருப்பணி செய்து மான்யம் அளித்தார். அவர் காட்டிய வழியிலேயே நாம் அனைவரும் நடக்க வேண்டும்!" என்று கூறினார் செம்பியன்மாதேவி.

பின்னர், தேவியார் சிவிகையில் ஏறிக் கொள்ளவும், சிவிகை மேற்கு நோக்கிச் சென்றது. காவற்காரர்கள் முன்னும் பின்னும் தொடர்ந்தனர். ஆழ்வார்க்கடியான் செம்பியன்மாதேவியின் சிவிகைக்குச் சமீபமாக நடந்து சென்றான்.

சிறிது தூரம் சிவிகை போன பிறகு ஆழ்வார்க்கடியான் பெரிய பிராட்டியைப் பார்த்து, "தேவி! நம்பியாண்டாரை நம்பி வந்த காரியம் என்ன ஆயிற்று?" என்று கேட்டான்.

"என் மனம் கலக்கம் நீங்கித் தெளிவு அடைந்து விட்டது, திருமலை! மதுராந்தகன் சிங்காதனம் ஏறுவதை வேறு வழியில் தடுக்க முடியாவிட்டால், உலகம் அறிய உண்மையைச் சொல்லிவிடுவதே முறை என்று நம்பி ஆண்டார் சொல்லி விட்டார். நானும் அதை மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு உறுதி அடைந்து விட்டேன்!" என்றார் செம்பியன்மாதேவி.

"நம்பியாண்டார் அவ்விதம் கூறுவார் என்றுதான் முதன் மந்திரியும் எதிர் பார்த்தார். ஆயினும் தாங்கள் இந்தப் பிரயாணம் வந்தது மிக நல்லதாய்ப் போயிற்று. தாயே! தாங்கள் இந்த விஷய மாக உடனே முடிவு செய்வதற்கு இன்னும் அதிகமான அவசியம் நேர்ந்திருக்கிறது. கடம்பூரிலிருந்து மிகப் பயங்கர மான செய்தி வந்திருக்கிறது. அது இன்னும் இந்த ஊரில் உள்ளவர்களுக்குத் தெரியாது. தெரிந்தால் இங்கு ஒருவரும் இருந்திருக்க மாட்டார்கள். எல்லாரும் இளவரசரின் இறுதி ஊர்வலத்தைப் பார்ப்பதற்குப் போயிருப்பார்கள்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"திருமலை! இது என்ன சொல்லுகிறாய்? என்ன பயங்கரமான வார்த்தை! எந்த இளவரசர்? என்ன இறுதி ஊர்வலம்!" என்று தேவி கேட்டார்.

"மன்னிக்க வேண்டும், தாயே! சோழ குலத்தில் இதுவரை இம்மாதிரி துர்ச் சம்பவம் நடந்ததில்லை. கடம்பூர் அரண்மனையில் ஆதித்த கரிகாலர் காலமானார். துர்மரணம் என்று சொல்லுகிறார்கள். யாரால் நேர்ந்தது, எப்படி நேர்ந்தது என்று மட்டும் தெரியவில்லை. பலர் பலவாறு சொல்லுகிறார்கள். ஆதித்த கரிகாலர் அகால மரண மடைந்த பிறகு கடம்பூர் அரண்மனை முழுவதும் தீப் பட்டு எரிந்து விட்டதாம். இளவரசரின் சடலத்தைத் தஞ்சைக்கு ஊர்வலமாக எடுத்து வருகிறார்களாம். திருக்கோவலூர் மலையமான் கடம்பூர் சம்புவரையரையும் அவருடைய குடும்பத்தையும் சிறைப்படுத்தி அழைத்து வருகிறாராம். ஊர்வலத்தில் ஒரு லட்சம் ஜனங்களுக்கு மேல் முன்னும் பின்னும் வருகிறார்களாம்! அவர்கள் கொள்ளிடக் கரைக்கு வருவதற்குள் நாம் அந்த நதியைக் கடந்து விட வேண்டும்!"

"திருமலை! நீ சொல்லுவது உண்மையிலேயே பயங்கரமான செய்திதான்! வானத்தில் தூமகேது தோன்றியதின் காரணமாக ஜனங்கள் எதிர்பார்த்த விபரீதம் நேர்ந்து விட்டது! ஆகா! அந்த அஸகாய சூரனின் கதி இப்படியா முடிய வேண்டும்? ஐயோ! சுந்தர சோழருக்கு இது தெரியும்போது என்ன பாடுபடுவார்? நோய்ப்பட்டிருக்கும் சக்கரவர்த்திக்கும் இந்தச் செய்தியினால் ஏதாவது நேராமலிருக்க வேண்டுமே என்று எனக்குக் கவலையா யிருக்கிறது. கருணைக் கடலான சிவ பெருமான்தான் சோழ குலத்தைக் காப்பாற்ற வேண்டும்!" என்றார் மழவரையர் மகளார்.

"தாயே! சோழ குலத்துக்கு நேர்ந்திருக்கும் ஆபத்து ஒருபுற மிருக்கட்டும். இந்தத் துர் நிகழ்ச்சியினால் சோழ சாம்ராஜ்யமே சின்னாபின்னமாகி விடலாம் என்று எனக்குப் பயம் உண்டாகிறது."

"அது ஏன் அந்த எண்ணம் உனக்கு உண்டாயிற்று, திருமலை?"

"சோழ நாட்டுத் தலைவர்கள் — சிற்றரசர்களுக்குள்ளே பெரும் சண்டை மூளலாம். இவ்வாறு சோழ நாட்டில் உள்ச் சண்டையினால் இரத்த வெள்ளம் ஓடிக் கொண்டிருக்கும் போது வெளி நாட்டுப் பகைவர்கள் தைரியம் கொண்டு படையெடுக்கத் தொடங்கி விடுவார்கள்! அதன் விளைவுகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமா, தாயே!"

"திருமலை! சிற்றரசர்கள் — தலைவர்களுக்குள்ளே ஏன் சண்டை மூளும் என்று சொல்லுகிறாய்?"

"தங்களுக்குத் தெரிந்த காரணந்தான், தாயே! சிலர் தங்கள் திருக்குமாரரான மதுராந்தகர் அடுத்தபடி பட்டத்துக்கு வரவேண்டும் என்பார்கள். மற்றும் சிலர் அருள்மொழி வர்மர்தான் சிம்மாசனம் ஏறவேண்டும் என்பார்கள். ஏற்கெனவே, கொடும்பாளூர் வேளாரின் படைகள் தஞ்சைக் கோட்டையைச் சுற்றி முற்றுகை இட்டிருக்கின்றன. இளவரசரின் சடலத்துடன் மலையமான் தஞ்சையை நோக்கிப் போகிறார். பழுவேட்டரையரைச் சேர்ந்த சிற்றரசர்கள் சைன்யம் திரட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், தஞ்சையிலும் தஞ்சையைச் சுற்றிலும் சோழ நாட்டு வீரர்கள் ஒருவரை யொருவர் கொன்று கொண்டு இரத்த வெள்ளம் பெருக்கப் போகிறார்கள். காவேரி முதலிய ஐந்து ஆறுகளிலும் தண்ணீர் வெள்ளத்துக்குப் பதிலாக இரத்த வெள்ளம் ஓடப் போகிறது! மகா அறிவாளியான முதன் மந்திரி அநிருத்தரே கலக்கம் அடைந்திருக்கிறார். விஜயாலயரும் ஆதித்தரும் பராந்தகரும் தங்கள் திருக்கணவரான கண்டராதித்தரும் நிலைநாட்டி அரசு புரிந்த சோழப் பேரரசு நம் நாளில் அழிந்து போய் விடலாம் என்றே பயப்படுகிறார். இதைத் தடுப்பதற்கு அநிருத்தருக்கே வழி ஒன்றும் தோன்றவில்லை!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"திருமலை! இறைவன் அருளால் இந்த மாபெரும் சாம்ராஜ்யத்துக்கு அத்தகைய



விபத்து நேராமல் நான் தடுப்பேன். அதற்கு வழியை நான் அறிவேன். அந்த வழியைக் கடைப் பிடிக்கலாமா என்று என் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு போகத்தான் நம்பியாண்டாரிடம் வந்தேன். மதுராந்தகனுக்கும் அருள்மொழி வர்மனுக்கும் சிங்காதனப் போட்டி ஏற்பட்டால் தானே உள்நாட்டுச் சண்டை மூளும் என்று சொல்கிறாய்?"

"ஆம், தாயே! அத்தகைய சண்டை மூளாமல் எப்படித் தடுக்க முடியும்? ஆதித்த கரிகாலர் பிராயத்தில் சிறிது மூத்தவர் என்ற காரணமாவது இது வரையில் சொல்லக் கூடியதாயிருந்தது! இப்போது அவரும் போய் விட்டார். தங்கள் திருப்புதல்வரைக் காட்டிலும் அருள்மொழி வர்மர் இளையவர். ஆனால் மலையமானும் வேளாரும் சோழ நாட்டு மக்களும் இனி அருள்மொழிவர்மருக்கே பட்டம் என்று வற்புறுத்தப் போகிறார்கள். பழுவேட்டரையர்கள் அதை ஒத்துக் கொள்ளப் போவதில்லை......"

"திருமலை! யார் ஒத்துக் கொண்டாலும் சரி, ஒத்துக் கொள்ளாவிட்டாலும் சரி, மதுராந்தகன் சிங்காதனம் ஏற மாட்டான். அதை நான் பார்த்துக் கொள்வேன். மகா புருஷராகிய என்னுடைய பதியின் விருப்பத்தை நான் நிறைவேற்றுவேன். மதுராந்தகனுக்குப் பட்டம் இல்லையென்று முடிவானால், உள்நாட்டுச் சண்டையும் இல்லைதானே?"

"ஆம்; அன்னையே! சோழ சாம்ராஜ்யம் சர்வநாசம் அடையாமல் இச்சமயம் தாங்கள் காப்பாற்றினால்தான் உண்டு; வேறு வழியே கிடையாது!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"என்னால் ஆவது ஒன்றுமில்லை; மாதொரு பாகனாகிய மகேசுவரன் எனக்கு அத்தகைய சக்தியை அருள வேண்டும்" என்றார் பெரிய பிராட்டியார்.

சிறிது நேரம் இருவரும் மௌனமாகச் சென்றார்கள். கொள்ளிடத்தின் ஓடத்துறை சற்றுத் தூரத்தில் தெரிந்தது.

"திருமலை! சற்றுமுன் ஒரு பயங்கரமான செய்தியைக் கூறினாய். ஆதித்த கரிகாலன் உயிர் இழந்தான் என்றாய். மூன்று உலகையும் ஆளவேண்டிய அந்த வீராதி வீரன் இறந்ததே விபரீதமான செய்திதான். இளவரசன் துர் மரணம் அடைந்ததாகக் கூறினாயே? அது எப்படி? தன் உயிரைத் தானே போக்கிக் கொண்டானா? அல்லது யாராவது அவனைக் கொன்றுவிட்டதாகச் சொல்கிறார்களா?" என்று பெரிய பிராட்டி வினவினார்.

"தேவி! அதைப் பற்றிப் பலவிதப் பேச்சுகள் பரவி வருகின்றன. சம்புவரையர் வீட்டில் இது நடந்தபடியால் அவர்மீது சந்தேகப்பட்டு அவரையும் அவர் குடும்பத்தார் அத்தனை பேரையும் மலையமான் சிறைப் படுத்திக் கொண்டு வருகிறார். சம்புவரையர் மகன் கந்தமாறன் மட்டும் தப்பிச் சென்று விட்டானாம்......"

"சம்புவரையரால் இது நேர்ந்திருக்கும் என்று உண்மையில் எனக்கு நம்பிக்கைப் படவில்லை. எவ்வளவுதான் விரோதமிருந்தாலும், அவருடைய இல்லத்துக்கு விருந்தாளியாக வந்திருந்த சக்கரவர்த்தித் திருமகனைக் கொல்லுவதற்கு யாருக்குத்தான் மனம் வரும்? சம்பு



வரையர் அப்படிச் செய்திருக்க முடியாது. அவர் இதைப் பற்றி என்ன சொல்லுகிறாராம்? இளவரசர் கரிகாலரின் மரணம் எப்படி நேர்ந்திருக்கும் என்று சொல்லுகிறாராம்?"

"தேவி! பழையாறைக்கு முன்னொரு சமயம் வாணர் குலத்து வீர வாலிபன் ஒருவன் வந்திருந்தானே, நினைவிருக்கிறதா? அவனைக் குந்தவைப் பிராட்டியார் ஈழ நாட்டுக்குக் கூட ஓலையுடன் அனுப்பி வைக்கவில்லையா?"

"ஆம், ஆம்; ஞாபகம் இருக்கிறது. அவனைப் பற்றி என்ன?"

"இளவரசரின் உயிரற்ற சடலத்துக்கு அருகில் அந்த வாலிபன்தான் இருந்தானாம். ஆகையால் அவனேதான் கொன்றிருக்க வேண்டும் என்று சம்பு வரையர் சொல்கிறாராம்......"

"திருமலை! அப்படி ஒருநாளும் நேர்ந்திராது. அந்தப் பிள்ளையைப் பார்த்த ஞாபகம் எனக்கு இருக்கிறது..."

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன், தாயே! ஆனால் சந்தர்ப்பங்களும் சாட்சியங்களும் வந்தியத் தேவனுக்கு எதிராயிருக்கின்றன!"

"ஐயோ! பாவம்! இளைய பிராட்டி அந்த வாலிபனிடம் ரொம்ப நம்பிக்கை வைத்திருந்தாள். இந்தச் செய்தி தெரிந்தால் அவள் துடி துடித்துப் போவாள்!"

"தாயே! தங்களிடம் அதைப் பற்றிக் கேட்டுக் கொள்ளலாம் என்று நினைத்தேன். தாங்கள் குடந்தைக்குச் சென்ற

ளும் இளைய பிராட்டியைச் சந்தித்துத் தஞ்சைக்கு அழைத்துக் கொண்டு போவது நல்லது......"

"அதுதான் என் உத்தேசம். இளைய பிராட்டி, எனக்காக அங்கே காத்துக் கொண்டிருக்கிறாள்......"

"மற்றவர்கள் மூலம் பராபரியாக இளைய பிராட்டிக்குச் செய்தி தெரிவதற்கு முன்னால் தாங்களே சொல்லி விடுவதுதான் நல்லது......"

"அப்படியானால் இப்போது நீ என்னுடன் வரப் போவதில்லையா, திருமலை?"

"தேவி! தாங்கள் அநுமதி கொடுத்தால் கொள்ளிடத்தின் தென்கரையில் தங்களிடம் விடை பெற்றுக் கொள்ள விரும்புகிறேன்......"

"எங்கே போகப் போகிறாய்?"

"இளவரசர் கரிகாலரின் மரணத்தில் ஏதோ ஒரு மர்மம் இருக்கிறது. அதைக் கண்டு பிடித்து வருவதற்காகப் போக விரும்புகிறேன்."

"எப்படிக் கண்டு பிடிப்பாய்?"

"தேவி! பாண்டிய நாட்டுச் சதிகாரர்களைப் பற்றித் தங்களுக்கு முன்னமே ஒருமுறை சொல்லியிருக்கிறேன். அச்சதிகாரர்களில் ஒருவனைக் கொள்ளிடத்தின் தென்கரையில் நாம் வரும்போது பார்த்தேன்......" என்றான் திருமலை.

"உடனே நீ ஏன் அவனைப் பின் தொடர்ந்து செல்லவில்லை?"

"கொள்ளிடத்தின் வடகரைக்கு வந்த பிறகுதான் கரிகாலர் மரணத்தைப் பற்றிச் செய்தி தெரிந்தது. அரசி! எனக்கு விடை கொடுங்கள்! சதிகாரர்கள் சாதாரணமாகக் கூடிப் பேசுகிற இடம் எனக்குத் தெரியும்......"

"சரி, போய் வா! இளைய பிராட்டி குந்தவையிடம் என்ன சொல்லட்டும்? அவனை நினைத்தால் எனக்குப் பெருங் கவலையாயிருக்கிறது."

"வந்தியத்தேவன்மீது குற்றம் சாட்டப்பட்டால் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று சொல்லுங்கள். உண்மைக் குற்றவாளியை நான் எப்படியும் கண்டு பிடித்துக் கொண்டு வருவேன் என்று சொல்லுங்கள்!"

"இறைவன் அருளினால் நீ போகும் காரியம் வெற்றி அடையட்டும்!" என்றார் சிவபக்தியில் சிறந்த பெண்மணியான செம்பியன் மாதேவி.

இதற்குள் கொள்ளிடக் கரை வந்து விட்டது. பெரிய பிராட்டி செம்பியன் மாதேவியும் பரிவாரங்களும் ஏறிச் செல்வதற்காகப் படகுகள் காத்திருந்தன.

ஆழ்வார்க்கடியான் வேறொரு சிறிய படகு பிடித்துக் கொண்டு அவர்களுக்கு முன்னால் விரைந்து படகைச் செலுத்தச் சொல்லி, அங்கிருந்து சென்றான்.

அத்தியாயம் 44

மலைக் குகையில்

கொள்ளிடத்தின் தென் கரையை அடைந்ததும் ஆழ்வார்க்கடியான் மேற்றிசையை நோக்கிப் போனான். கொள்ளிடத்தின் உடைப்பினால் எங்கும் வெள்ளக் காடாக இருந்ததைப் பார்த்தான். ஆயினும் கொள்ளிடத்தில் தண்ணீர் மட்டம் குறைந்து வந்ததைப் போல் உடைப்பினால் தண்ணீர் பரவியிருந்த இடங்களிலும் வேகமாகத் தண்ணீர் வடிந்து கொண்டு வந்தது. கடைசியாகத் திரும்புறம்பயத்தை அடைந்தான். அந்த ஊர் மட்டும் அவ்வளவு வெள்ளத்தினாலும் பாதிக்கப்படாமல் இருந்ததைப் பார்த்து வியந்தான். ஆதி காலத்தில் உலகமே பிரளயத்தில் ஆழ்ந்தபோது திருப்புறம்பயம் மட்டும் தண்ணீரில் முழுகாமலிருந்தது என்னும் வரலாறு இதனாலேதான் ஏற்பட்டது போலும் என்று எண்ணிக் கொண்டு பள்ளிப்படைக் காட்டை நெருங்கினான். அங்கே புயலினால் பல மரங்கள் சாய்ந்து விழுந்திருந்த போதிலும் அவன் ஒளிந்து பார்ப்பதற்கு வேண்டிய அடர்த்தி யில்லாமற் போகவில்லை. அவ்விதம் பார்த்தபோது, பள்ளிப்படைக் கோவில் வாசலில் ஆண்கள் மூவரும் ஒரு ஸ்திரீயும் நின்று பேசுவது தெரிந்தது. நன்றாய் உற்றுப் பார்த்தபோது, எல்லாரும் அவனுக்கு முன்னாலே தெரிந்தவர்கள் என்று அறிந்தான். அதே பள்ளிப்படைக் காட்டில் முதன் முதலில் சதியாலோசனைக்காகக் கூடியவர்களில் இந்த மூன்று ஆண் பிள்ளைகளும் இருந்தார்கள். ஒருவன் சோமன் சாம்பவன், இன்னொருவன் கிரமவித்தன், மூன்றாவது ஆள் இடும்பன்காரி. ஸ்திரீ, படகோட்டி முருகய்யனுடைய மனைவி. அவர்களில் இடும்பன்காரி மற்றவர்களுக்கு ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். அச்செய்தி

அவர்களுக்கு உற்சாகத்தை அளித்த தாகத் தெரிந்தது. "சரி! அப்படியானால் நாமும் பச்சை மலை அடிவாரத்துக்கு உடனே புறப்படலாம். போய்ச் சேர இரண்டு நாள் பிடிக்கும்" என்று சோமன் சாம்பவன் கூறியது ஆழ்வார்க் கடியான் காதில் விழுந்தது.

அவர்களுக்கு முன்னால் தான் அங் கிருந்து புறப்பட்டு விடலாம் என்று எண்ணி ஆழ்வார்க்கடியான் திரும்பி னன். அவனுடைய மார்புக்கு நேரே சிறிய கத்தியைக் கண்டு திடுக்கிட்டான். அதைப் பிடித்திருந்த கை பூங்குழலியின் கை என்று தெரிந்ததும் திகைப்பு நீங்கியது. இருவரும் ஒருவரையொருவர் தெரிந்து கொண்டதும் புன்னகையினால் தங்களின் வியப்பைத் தெரிவித்துக் கொண்டார்கள். சமிக்ஞையின் மூல மாக வாய் பேசாமல் சிறிது நேரம் காத் திருக்க வேண்டிய அவசியத்தையும் உணர்த்திக் கொண்டார்கள்.

சதிகாரர்கள் அங்கிருந்து போய் விட் டார்கள் என்று தெரிந்த பிறகு ஆழ் வார்க்கடியான், "பூங்குழலி! தஞ்சா வூரிலிருந்து நீ எப்படி இங்கே வந்தாய்? எதற்காக வந்தாய்?" என்று கேட்டான்.

"பழி வாங்குவதற்காக வந்தேன்" என்றாள் பூங்குழலி.

"என்ன பழி? எதற்காக?"

"இவர்களிலே ஒருவன் என் அத்தை யைக் கொன்றுவிட்டு ஓடிவந்த பாதகன். அப்பாதகனை விடாமல் பின்தொடர்ந்து இவ்விடத்தில் வந்து பிடித்தேன். இங்கே இன்னும் மூன்று பேர் அவனுக்கு முன்னால் வந்திருந்தார்கள். அதிலும் என் அண்ணன் மனைவியை அவர்களுடன் பார்த்ததும் திகைத்துப் போனேன்! அதற்குள் நீ ஒருவன் வந்து குறுக் கிட்டாய்! இப்போது என்ன செய்ய லாம்? நீ எனக்கு உதவி செய்வதா யிருந் தால் இவர்களை விடாமல் தொடர்ந்து போய் என் அத்தையைக் கொன்றவனைக் கொன்று விட்டு வருவேன்!" என்றாள்.

"ஐயோ! பாவம்! உன் அத்தை என்றால், அந்த ஊமை ராணி மந்தாகினி தானே? அவளை எதற்காக இவர்களில் ஒருவன் கொன்றான்?" என்று ஆழ்வார்க் கடியான் கேட்டான்.

"அத்தையைக் கொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொல்லவில்லை. சக்கர வர்த்தியைக் கொல்ல நினைத்து அவர் மேல் எறிந்த வேலை என் அத்தை தாங்கிக் கொண்டாள்!" என்றாள்.

"ஓகோ! அப்படியா? ஊமை ராணி தன் உயிரைக் கொடுத்துச் சக்கரவர்த்தி யைக் காப்பாற்றினளா? இதெல்லாம் எப்படி நடந்தது? சற்று விவரமாகச் சொல், கேட்கலாம்!"

"விவரமாகச் சொல்லுவதற்கு இது தானா சமயம்? அவர்கள் தப்பித்துக் கொண்டுபோய் விடுவார்களே?"

"பூங்குழலி! அவர்கள் போகுமிடம் எனக்குத் தெரியும். எதற்காக யாரைச் சந்திப்பதற்காகப் போகிறார்கள் என் றும் ஊகித்துக் கொண்டேன். வழியிலே அவர்களைத் தடை செய்யாமலிருப்பதே நல்லது. அவர்கள் போகுமிடத்துக்கு நாமும் போகலாம். அங்கே நான் தெரிந்து கொள்ள விரும்புவதைத் தெரிந்து கொண்ட பிறகு நீ உன் பழியை முடித்துக் கொள்ளலாம்" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"அப்படியானால் புறப்படு! போகும் போதே தஞ்சாவூரில் நடந்ததையெல் லாம் உனக்கு விவரமாகச் சொல் கிறேன்!" என்றாள் பூங்குழலி.

* * *

இருவரும் கொள்ளிடத்தைப் படகின் மூலமாகக் கடந்து அக்கரை அடைந் தார்கள். வடமேற்குத் திசையை நோக் கிப் பிரயாணம் செய்தார்கள். மூன்று தினங்கள் இரவும் பகலும் பிரயாணம் செய்த பின்னர், பச்சை மலையின் அடி வாரத்தை அடைந்தார்கள். அந்த அடி வாரத்தில் அடர்ந்த காடு மண்டிக் கிடந்த படியால் இவர்கள் தேடிச் சென்றவர்கள் எங்கே இருக்கக்கூடும் என்பதை இலே சில் கண்டு பிடிக்க முடியவில்லை. இவ் வளவு பிரயாசையுடன் பிரயாணம் செய்து வந்தது வீணாகி விடுமோ என்று மனச்சோர்வு அடைந்தார்கள்.

திடீர் என்று ஆந்தையின் குரல் ஒன்று கேட்டது. பதிலுக்கு மற்றொரு குரல் அதேமாதிரி கேட்டது. ஆழ்வார்க்கடியா னுடைய முகம் மலர்ந்தது. பூங்குழ லிக்குச் சமிக்ஞை மூலமாகப் பேசாமல் தன்னுடன் வரும்படி தெரிவித்தான். ஆந்தைகளின் குரல் கேட்ட இடத்தில் இடைவெளி தென்பட்டது. அங்கே ஏழெட்டுப் பேர் இருந்தார்கள். சிலர் நெருப்பு மூட்டிச் சமையல் செய்து கொண்டிருந்தார்கள். மற்றவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். முன்னமே அங்கு இருந்தவர்களும் புதிதாக வந்து சேர்ந்தவர்களும் ஒருவருக்கொருவர்

ஏதோ வியப்பான செய்தி சொல்லிக் கொண்டிருந்தார்கள் என்று தெரிந்தது.

முன்னமே அங்கிருந்தவர்களில் ரவிதாஸனும் ஒருவன். அவன் அப்போது புதிதாக அங்கே வந்து சேர்ந்தவர்களுக்குச் சற்றுத் தூரத்தில் இருந்த மலைக் குகை யொன்றைச் சுட்டிக் காட்டி ஏதோ தெரிவித்துக் கொண்டிருந்தான். இதை ஆழ்வார்க்கடியான் கவனித்துக் கொண்டான். மெல்லிய குரலில், "பூங்குழலி! நான் தேடி வந்தவர்கள் அந்த குகைக்குள்ளேதான் இருக்க வேண்டும். நான் மெள்ளக் குகைக்குள்ளே நுழைந்து பார்க்கிறேன். இவர்களில் யாராவது குகையை நெருங்கி வந்தால் நீ ஒரு குரல் கொடு!" என்றான்.

"ஆந்தை கத்துவதுபோல் என்னால் கத்த முடியாது. குயில் கூவுவதுபோலக் கூவுகிறேன்!" என்றாள் பூங்குழலி.

மலைக் குகைக்குள்ளே காற்றும் வெளிச்சமும் நுழைவதற்காகச் சில பெரிய துவாரங்கள் செய்யப்பட்டிருந்தன. ஆகையால் உள்ளே நன்றாக வெளிச்சம் வந்து கொண்டிருந்தது.

அந்த வெளிச்சத்தில் ஆழ்வார்க்கடியான் ஓர் அபூர்வமான காட்சியைக் கண்டான். பெரிய பழுவேட்டரையர் காளாமுகச் சாமியார்களைப்போல் புலித்தோல் உடை தரித்திருந்தார். அவர் பக்கத்தில் மண்டை ஓட்டு மாலை ஒன்று கிடந்தது. அவர் உடம்பிலிருந்து இரத்தம் மிகச் சேதமாகி யிருக்க வேண்டும் என்று அவர் முகம் வெளுத்துப் போயிருந்ததிலிருந்து ஊகிக்கும்படி யிருந்தது. தரையிலே படுத்திருந்தவர் அப்போதுதான் சுய நினைவு பெற்று எழுந்து உட்கார முயன்றதாகத் தோன்றியது. ஏதோ பயங்கர சொப்பன உலகிலிருந்து அப்போதுதான் விழித்தெழுந்தவர்போல் காணப்பட்டார். அவருடைய கண்கள் திருதிருவென்று விழித்தன.

அவர் பக்கத்தில் நந்தினி இருந்தாள். அவள் ஆபரண அலங்காரங்கள் களையப் பெற்றுத் தலைவிரி கோலமாக இருந்தாள். ஆயினும் அவளுடைய வசீகர சௌந்தரியம் முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாகப் பிரகாசித்தது. அன்பும் ஆதரவும் பரிதாபமும் பச்சாத்தாபமும் ததும்பிய குரலில், "ஐயா! இந்தக் கஞ்சியை அருந்துங்கள்!" என்று கூறிக்கொண்டே ஒரு மண் பாத்திரத்தை அவரிடம் நீட்டிக் கொண்டிருந்தாள்.

பழுவேட்டரையர் அவளைத் திரும்பிப் பார்த்தார். அவர் முகத்தில் ஒருகண நேரம் எல்லையற்ற இன்பத்துக்கு அறிகுறியான புன்னகை மலர்ந்தது.


"நந்தினி! என் பேரரசி! நீதானா இப்போது பேசினாய்? உன்குரல்தானா இது? நாம் இப்போது எங்கே இருக்கிறோம்? மரணத்தின் வாசலுக்குச் சென்றிருந்த என்னை நீயா திரும்பக் கொண்டு வந்து சேர்த்தாய்? அன்று சாவித்திரி சத்தியவானுக்குச் செய்ததை இன்று நீ எனக்குச் செய்தாயா? எனக்கு நினைவு வந்த போது உன்னுடைய மலர்க் கையினால் என்னுடைய மார்பைத் தொட்டுப் பார்த்துக்கொண்டிருந்ததாகத் தோன்றியதே! அது உண்மையா? மூன்று ஆண்டு காலமாக என்னைத் தொடவும் மறுத்தவள் கடைசியாக மனமிரங்கி விட்டாயா? எங்கே? கொடு! கஞ்சியைக் கொடு! உன் கையினால் கஞ்சி கொடுத்தால் அதுவே எனக்குத் தேவாமிர்தமாகும்!" என்றார்.

இவ்விதம் சொல்லிக் கொண்டே நந்தினியின் கையிலிருந்த மண்பாண்டத்தை வாங்கிக் கொண்டவர் திடீரென்று அவளை வெறித்துப் பார்க்கத் தொடங்கினார்! அடியோடு மாறிப்போன பயங்கரமான குரலில் "அடி பாதகி! ராட்சஸி! நீதானா? என்னைத் தொடுவதற்கு உனக்குத் தைரியம் வந்ததா? என் நெஞ்சில் கத்தியால் குத்தப் பார்த்தாயா? அப்போது நான் விழித்துக் கொண்டேனா? இந்தப் பாத்திரத்தில் இருப்பது உண்மையில் கஞ்சிதானா? அல்லது என்னைக் கொல்லுவதற்கான நஞ்சா? உன் கையால் கொடுப்பது தேவாமிர்தமானாலும் எனக்கு அது விஷமல்லவோ?" என்று கூறிவிட்டு அம் மண்பாண்டத்தை வீசி எறிந்தார். அது தடாலென்று குகைச் சுவரில் மோதிச் சுக்கு நூறாகிச் சிதறி விழுந்தது.

அட்டைப்பட விளக்கம்

ஆந்திர மாகாணத்தின் ஆரம்ப வைபவத்தை நடத்தி வைப்பதற்காக அக்டோபர் மாதம் முதல் தேதி அம் மாகாணத் தலைநகரான கர்னூலுக்கு விஜயம் செய்த பண்டித ஜவாஹர்லால் நேரு இரண்டாம் தேதி சென்னைக்கு வருகிறார்; மூன்று, நாலு தேதிகளில் கோயமுத்தூர், மதுரை முதலிய இடங்களுக்கும் விஜயம் செய்கிறார். தமிழ் மக்கள் நேருஜிக்கு அமோகமான வரவேற்பு அளிப்பார்கள் என்று நம்புகிறோம்.

1 p.m. –



-and time for Tiffin !


நான் தயாரித்த அறுசுவை உண்டியை சூடாக ருசித்துச் சாப்பிட வீட்டிலுள்ளவர்கள் நேரத்திற்கு வராமல் தாமதித்து வந்தால் குடும்பத் தலைவிக்கு என்ன ஏமாற்றம் ஏற்படும்! உங்களிடம் நம்பகமான நேரத்தை அறிவிக்கும் ஓர் 'வெஸ்ட் எண்ட்' கடிகாரம் இருந்தால், அவ்வித ஏமாற்றத்திற்கு நீங்கள் உடந்தையாக இருக்கவில்லை என்ற திருப்தியை அளிக்கும்.

ஒரு நல்ல கடிகாரமானால் அதிகச் செலவு என்ற அவசியமில்லை. சரியான நேரத்தைக் காட்டும் வண்ணம் பரிசோதித்து நவீன விஞ்ஞான ரீதியில் தயாரித்த வெஸ்ட் எண்ட் கடிகாரங்கள் மிகக் குறைந்த விலையிலிருந்து உயர்ந்த விலைவரை உள்ளன. மேலும் ஒவ்வொரு வெஸ்ட் எண்ட் மாடலும் இந்தியாவின் நிலைமைக்கு ஏற்ப விசேஷமாகத் தயாரிக்கப் படுகின்றது.

மினியேச்சர் "K-2"

ரோல்டு கோல்டு ரூ.205

18காரட்கோல்டு ரூ.370



சற்றேறக்குறைய 80 வருஷ நுண்ணிய தொழில் அனுபவத்துடனும் வேலைப்பாடுடனும் தயாரிக்கப்பட்ட ஒரு வெஸ்ட் எண்ட் கடிகாரம் நீடித்துழைப்பதுடன் உறுதியாகவும், கவர்ச்சிகரமாகவும் உள்ளது. அழகு மிக்க புதிய காட்லாக் எழுதிக் கேட்பவர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும். இன்றே எழுதுங்கள்.

The WEST END WATCH CO.

Bombay · Calcutta

தூத்துக்குடியில் நூற்றாண்டு விழா!

பகீரதன்

தூத்துக்குடி எத்தனையோ துறைகளில் பெயரும் புகழும் பெற்ற ஊர். தமிழ் நாட்டுக்குத் தேசியப் புத்துயிர் அளித்த ஸ்ரீ வ.உ. சிதம்பரம் பிள்ளையைப் பெற்றெடுத்துப் பெருமை பெற்ற ஊர். ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளையின் வாழ்க்கைச் சம்பவங்கள் கவியரசர் பாரதியாரின் தேசிய வெறியையும், கவிதா சக்தியையும் தூண்டி விடுவதற்குக் காரணமாக அமைந்தன.

தேச பக்தனைப் பார்த்து ஆங்கிலேயன் "கப்பல் ஏறுவாயோ, அடிமை! கடலைத் தாண்டுவாயோ?" என்று கேட்டதாகவும்,

"சதையைத் துண்டு துண்டாக்கினும்
உன் எண்ணம் சாயுமோ?"

என்று தேச பக்தன் மறுமொழி கூறியதாகவும் ஸ்ரீ வ. உ. சி. யை மனத்தில் வைத்துக் கொண்டுதான் பாரதியார் பாடினர்.

"மேலோர்கள் வெஞ்சிறையில்
வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில்
நோவதுவும் காண்கிலையோ!"

என்று கவியரசர் அலறியதும் கப்பல் ஓட்டிய தமிழர் ஸ்ரீ வ. உ. சிதம்பரனாரைப் பற்றித் தான் என்பது தெளிவு.

பாரதியார் தேசம் முன்னேறுவதற்கான பல துறைகளையும் பற்றிப் பாடியதுபோல் கல்வியைப் பற்றியும் பாடினர்.

"பயிற்றிப் பல கல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்"

என்று விண்ணதிர முரசு கொட்டினர்.

தூத்துக்குடி மக்கள் இந்த உண்மையைச் சுமார் நூறு வருஷங்களுக்கு முன்னதாகவே உணர்ந்து, 'சப்ஸ்கிருப்ஷன் ஆங்கிலோ வெர்னகுலர் ஸ்கூல்' என்ற பெயரில் ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தார்கள். பிறகு அதை 'சரஸ்வதி ஆங்கிலோ வெர்னகுலர் ஸ்கூல்' என்று மாற்றி நல்ல முறையில் நடத்தி வந்தார்கள். எஸ். ஏ. வி. பாடசாலை என்ற புகழுடன் நடந்து வந்த அந்தப் பள்ளிக்கூடத்தின் நூறாவது ஆண்டு விழாவைச் செப்டம்பர் 13உ வெகு சிறப்புடன் கோலாகலமாகக் கொண்டாடினர்கள்.

இந்த விழாவுக்குத் தலைமை வகிப்பதற்காக ஆசிரியர் கல்கி அவர்களையும், நூற்றாண்டு விழா நினைவு மண்டபத்துக்கு அஸ்திவாரக் கல் நாட்டுவதற்காகத் தொழில் மந்திரி டாக்டர் யு. கிருஷ்ண ராவ் அவர்களையும் ஆவலோடு தருவித்தார்கள்.

எஸ். ஏ. வி. பாடசாலைக்கு அருகில் உள்ள திறந்த வெளியில் அழகான மேடை அமைத்து, மேடைக்கு எதிரில் அலங்காரமான பந்தல் போட்டிருந்தார்கள். ஆண்களும், பெண்களும், பிரமுகர்களும், உத்தியோகஸ்தர்களும், பள்ளி மாணவர்களும் குதூகலத்துடன் கூடியிருந்தார்கள். விசாலமாக இருந்த விழாப் பந்தல் நிறைந்து வெளியிலும் ஜனக் கூட்டம் ததும்பி நின்றது.

பெண்மணிகள் இனிமையாகப் பாடிய பிரார்த்தனை கீதத்துடன் நூற்றாண்டு விழா ஜாம் ஜாம் என்று ஆரம்பமாயிற்று.



அஸ்திவாரக்கல் நாட்டிய தொழில் மந்திரி டாக்டர் யு. கிருஷ்ணராவும், எஸ். ஏ. வி. பாடசாலையின் காரியதரிசி ஸ்ரீ ராமசாமி ஐயங்காரும்.

எஸ் ஏ. வி. பாடசாலையின் பழைய மாணவரும் பிரபல வியாபாரியுமான ஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணியம் விழாத் தலைவருக்கும், தொழில் மந்திரிக்கும் விழாக் கமிட்டியின் சார்பாக வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தார்.

பின்னர் நூற்றாண்டு விழாத் தலைவர் ஆசிரியர் கல்கி தமது தலைமையுரையை விரிவாக நிகழ்த்தினர்.

"பள்ளிக்கூடங்களில் பரீட்சையில் தேறுகிறவர்களின் சதவிகிதம் அதிகம் என்பதைக் கொண்டு மட்டும் திருப்தி அடையக் கூடாது" என்று ஆரம்பித்தார். இதற்காகப் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் சிறிது அதிருப்திப்பட்டிருக்கலாம். "வேறு எதற்காகத் தான் திருப்திப் படுவது?" என்று அவர்கள் கேட்டிருக்கலாம்.

பிறகு ஆசிரியர் கல்கி விழாப் பந்தலுக்கு எதிரே நூறு வருஷத்துக்கு மேலாக நிலைபெற்று நின்ற பெரியதொரு மரத்தைச் சுட்டிக் காட்டி,

"இந்தப் பள்ளிக்கூடத்தில் படிப்பு முடிந்து பரீட்சை தேறி வெளியேறும்போது பிள்ளைகள் அந்த மரத்தைப் போல் உடல் உறுதி உள்ளவர்களாக இருக்க வேண்டும். பீமசேனனாகவும், பார்த்தனாகவும் திகழ்ந்து வர வேண்டும்" என்று கூறியதும் சபையோர் சிரித்து மகிழ்ந்தனர். பள்ளிக்கூட உபாத்தியாயர்களும், நிர்வாகிகளும் அதில் கலந்து கொண்டனர்.

இம்மாதிரியே, கல்வித் துறையில் இருக்கும் குறைகளைப் பற்றியும் புதுக் கல்வியின் அவசியத்தைப் பற்றியும் பேசினார். மெக்காலே துரையின்கல்வி முறையை மாற்றி அமைப்பதற்காக ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலே, சுவாமி விவேகானந்தர், காந்தி மகாத்மா முதலிய மகான்களால் நடத்தப்பட்ட இயக்கங்களைப் பற்றியும் விளக்கிக் கூறினார். கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் கேட்டு அடிக்கடி தங்கள் மகிழ்ச்சியை வெளியிட்டுக் கொண்டிருந்தார்கள்.

"ஒன்றே செய்ய வேண்டும்; ஒன்றும் நன்றே செய்ய வேண்



சரஸா நாடகம்

1. கதாநாயகி சரஸா (ஸ்ரீமதி செல்லம்) 2. கதாநாயகன் முரளியும், டாக்டரும் (ஸ்ரீ சீனிவாசராவ், ஸ்ரீ வாதிராஜ்) 3. சரஸா நாடகத்தில் பங்கெடுத்துக் கொள்ள சென்னையிலிருந்து சென்ற கோஷ்டியார். 4. ராதாவும், பத்மாவும் (ஸ்ரீமதி வஸந்தா; ஸ்ரீமதி டி. என். ராஜலக்ஷ்மி) 5. கனபாடிகள் (காமெடியன் ஸ்ரீ நாராயண ராவ்) 6. நாடகத்தைப் பார்த்து அனுபவித்துக் கொண்டிருக்கும் சபையின் ஒரு தோற்றம்.



தூத்துக்குடி வர்த்தகச் சங்கத்தின் தலைவரும், வ. உ. சி. கல்லூரியின் காரியதரிசியுமான ஸ்ரீ ஏ. பி. ஸி. வீரபாகும் பிள்ளை தாயின் மணிக்கொடியை ஏற்றி விழாவைத் தொடங்கி வைத்தார். அவருக்கு ஸ்ரீ முத்துக்குமாரசாமிப் பிள்ளை நன்றி கூறினார்.

டும்'' என்ற கபில முனிவரின் வாக்குக்கு இணங்க சென்ற முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக எஸ். ஏ. வி. பாடசாலையின் காரியதரிசியாக இருந்து, இந்த உத்தமமான கைங்கரியத்தை வாழ்க்கை லட்சியமாகக் கொண்டு அதற்கே தம் வாழ்வை முழுக்க முழுக்க அர்ப்பணம் செய்து வரும் ஸ்ரீ ராமசாமி ஐயங்கார் அவர்களின் புனிதமான சேவையைப் பெரிதும் பாராட்டினார்.

தொழில் மந்திரி டாக்டர் யு. கிருஷ்ண ராவ் அவர்கள் ஆசிரியர் கல்கி கூறிய மேற்கண்ட கருத்தையே ஒரு புதிய கோணத்தில் வற்புறுத்தி விளக்கினார்.

''கல்வித் துறையில் திறமையும் அநுபவமும் வாய்ந்தவர்களின் யோசனையின் பேரிலேயே தான் புதுக் கல்வித் திட்டத்தை ராஜாஜி அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். கிராமங்களில் சர்க்காரைவிட உபாத்தியாயர்களுக்கு அதிக செல்வாக்கு உண்டு. உபாத்தியாயர்கள் புதிய கல்வித் திட்டத்தை அமுல் நடத்தப் பாடுபட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். ''மாணவர்கள் கட்டுப்பாடுடன் இருக்க வேண்டும். அவர்கள் பாட புத்தகங்களுடன், அரசியல் விஷயங்களையும் தெரிந்து கொள்ளலாமே ஒழிய அரசியல் கிளர்ச்சிகளில் நேரடியாகக் கலந்து கொள்ளக் கூடாது'' என்றார்.

எல்லாரும் சேர்ந்து ஒத்துழைத்துப் பொது நலத்துக்குப் பாடுபட்டால்தான் தேசம் முன்னேறும் என்பதை டாக்டர் யு. கிருஷ்ண ராவ் வற்புறுத்தி விட்டு எஸ். ஏ. வி. பாடசாலை நூற்றாண்டு விழா ஞாபகார்த்தக் கட்டிடத்துக்கு அஸ்திவாரக் கல் இட்டார்.

தூத்துக்குடி ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளைக் கல்லூரி காரியதரிசி ஸ்ரீ ஏ. பி. ஸி. வீரபாகு, எஸ். ஏ. வி. கலாசாலைக் காரியதரிசி ஸ்ரீ ராமசாமி ஐயங்காரின் ஊக்கத்தையும் உழைப்பையும், தள்ளாத வயதில் அவர் தளராது சேவை செய்யும் ஆற்றலையும் எடுத்துச் சொல்லிவிட்டு, மேடை மீது திரைபோட்டு மூடி வைத்திருந்த ஸ்ரீ ராமசாமி ஐயங்காரின் உருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

அட்வகேட் ஸ்ரீ முத்துக் குமாரசாமிப் பிள்ளையின் வந்தனோபசாரத்துடன் நூற்றாண்டு விழாவின் ஒரு அங்கம் இனிது முடிந்தது.

நூற்றாண்டு விழாவில் அடுத்த முக்கியமான நிகழ்ச்சி அன்றிரவு எஸ். ஏ. வி. பாடசாலையின் பழைய மாணவர் ''நாரதர்'' ஸ்ரீ சீனிவாச ராவ் அவர்களின் ''சரளா'' என்ற நாடகம் நடத்தப்பட்டதுதான்.

நாடகம் உணர்ச்சி மிக்கதாயும், ஜனரஞ்சகமாகவும், திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்ததாயும், சிறந்த நடிப்புக்குத் தகுந்ததாயும் அமைந்திருந்தது.

இடை இடையே காதலும், காதலர்களும் கோர்ட்டும், கோமாளித்தனங்களும் குறுக்கிட்டுக் கதைக்கும் நாடகத்துக்கும் சுவை அளித்தன. நாடகத்தில் நடித்த எல்லா நடிகர்களுமே சிறப்பாக நடித்தார்கள். கனபாடிகளாக வந்த காமெடியன் நாராயண ராவும், அசட்டு முகுந்தனாக நடித்த பி. டி. சம்பந்தமும், 'காட்டி'யாக நடித்த மனோஹரும் அபாரமாக நடித்து அடிக்கடி சபையோரின் கரகோஷத்தைப் பெற்றனர். சரளா வேஷம் தாங்கிய செல்லம் சீனுவாசன், பத்மாவாக வந்த ராஜலக்ஷ்மி, இளம் கைம்பெண்ணாக நடித்த வஸந்தா ஆகியவர்கள் அந்தந்தப் பாத்திரத்துக்கு உயிர் அளிக்கும் முறையில் நடித்தார்கள். வேலைக்காரனாக வந்த டி.கே. கோவிந்தன் இயற்கையாக நடித்தார்.

கதாநாயகன் வேஷம் தாங்கி, பேசி, பாடி, கண்ணீர் விட்டுச் சபையோரைக் கதற அடித்தார் நாரதர் சீனிவாச ராவ். தான் படித்த பள்ளிக்கூடத்தின்மேல் உள்ள அன்பு காரணமாக எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில் சென்னையிலிருந்து ஒரு பெரிய நாடக கோஷ்டியைத் தூத்துக்குடிக்கு அழைத்து வந்து, நாடகம் நடத்தி, நிதி வசூலித்துக் கொடுத்த ஸ்ரீ சீனிவாச ராவின் சேவையை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம்.

நாடகத்தின் நடுவில் பேசிய ஆசிரியர் கல்கி அவர்கள் ''நாரதர் சீனிவாசராவ் இந்த ஒரு பள்ளிக்கூடத்திலேயே பல வருஷங்கள் தங்கிவிட்டது தவறு. வருஷத்துக்கு ஒரு பள்ளிக்கூடம் வீதம் மாறி மாறிப் போய்ப் படித்திருந்தால் இன்னும் பல பள்ளிக்கூடங்களும் இவரால் நன்மை அடைந்திருக்கும்'' என்றார்.

"நாடகத்தை எழுதுவதே கஷ்டம். நாடகத்தையும் எழுதி, அதில் நன்றாகத் தாமும் நடித்து, இதர நடிகர்களையும் அற்புதமாக நடிக்கப் பண்ணிவிட்டார் நாரதர் ஸ்ரீ சீனிவாச ராவ்!" என்று வ. உ. சி. கல்லூரி பிரின்ஸிபால் பேராசிரியர் ஸ்ரீ அ. சீனிவாச ராகவன் பாராட்டியதை விட, நான் நாடகத்தைப் பற்றி வேறு என்ன கூறப் போகிறேன்.

தூத்துக்குடி எஸ். ஏ. வி. பாடசாலைக்கு டாக்டர் யு. கிருஷ்ணாராவும், கல்கி ஆசிரியர் அவர்களும் சென்றதில் இன்னும் இரண்டு முக்கியமான நிகழ்ச்சிகளை அவசியம் குறிப்பிட்டாக வேண்டும்.


எஸ். ஏ. வி. பாடசாலையின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்ட மாபெரும் கூட்டத்தின் ஒரு பகுதி.

தூத்துக்குடியில் தீவிர தேசிய வாதிகளான இளைஞர்களும் தேசபக்தர்களும் "சேவா தளம்" என்ற ஸ்தாபனம் ஒன்று அமைத்திருக்கிறார்கள். முன்பெல்லாம் காந்திமகான் தலைமையில் நடந்த சுதந்தரப் போரில் ஈடுபடும் வாய்ப்பு இளைஞர்களுக்குக் கிடைத்தது. இப்பொழுது தேசம் பெற்ற சுதந்தரத்தின் பயனை மக்கள் அனைவரும் அடையும் பொருட்டுச் செய்யவேண்டிய சமூகப் பணிகள் எவ்வளவோ இருக்கின்றன அல்லவா? அதற்காக ஸ்ரீ ஏ. பி. ஸி. வீரபாகுவின் தலைமையில் தூத்துக்குடியில் இந்தச் சேவாதள ஸ்தாபனம் செயல்பட்டு வருகிறது. அவர்களுடைய மகாநாடு ஸ்ரீ ஏ. பி. ஸி. வீரபாகுவின் தலைமையில் நடந்தது. சேவாதளத் தொண்டர்களின் சுறுசுறுப்பையும், கட்டுப்பாட்டையும் முகப் பொலிவையும் பார்த்ததுமே அவர்கள் எவ்வளவோ தேசிய ஆர்வம் கொண்டவர்கள் என்பது நன்கு வெளியாயிற்று. அந்தக் கூட்டத்தில் காந்திமகான் திரு உருவப் படத்தை ஆசிரியர் கல்கி அவர்களும், ராஜாஜியின் பெரிய உருவப்படம் ஒன்றை தொழில் மந்திரி டாக்டர் யு. கிருஷ்ண ராவ் அவர்களும் திறந்து வைத்தார்கள்.

இன்னொரு நிகழ்ச்சி தூத்துக்குடி ரயிலடிக்கு அருகில் நடந்த பிரமாண்டமான பொதுக் கூட்டம்தான். மேலூர் ரயிலடியை ஒட்டினாற்போலிருந்த பெரிய வீதியில் எள்ளுப் போட்டால் எள் விழாதபடி நிறைந்து ததும்பிய கூட்டத்தில் மந்திரி கிருஷ்ணராவும், கல்கி ஆசிரியரும் பேசினார்கள்.

"என் தாய்மொழி கன்னடம், நான் படித்தது தெலுங்கு, என் தொழில் வைத்தியம், இப்பொழுது பார்க்கும் உத்தியோகம் தொழில் மந்திரி, உங்கள் முன்னிலையில் தமிழில் பேசப்போகிறேன்" என்று மந்திரி டாக்டர் யு. கிருஷ்ணாராவ் அவர்கள் ஆரம்பித்துமே கூட்டம் களை கட்டி விட்டது.

ராஜாஜியின் ஆட்சி ஏற்பட்ட பிறகு நாட்டில் ஏற்பட்ட நன்மைகளையெல்லாம் எடுத்துச் சொன்னார். கைத்தறித் தொழிலாளர்களுக்கு ராஜாஜி செய்துவரும் உயர்ந்த பணியை உருக்கமாக விளக்கினார்.


ஆசிரியர் கல்கி அவர்கள் பேசும்போது, "தூத்துக்குடி என்றதும் ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளையின் நினைவுதான் வருகிறது. அவருடைய தன்னலமற்ற சேவைதான் இந்த ஊருக்குப் பெருமை யளிக்கிறது" என்று ஆரம்பித்து, தூத்துக்குடியின் புகழுக்குக் களங்கம் உண்டாக்கக் கூடிய முறையில் சில நாளைக்கு முன்பு அங்கு நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் குறிப்பிட்டார். புதுக் கல்வித் திட்டத்தின் உயர்வை எடுத்துக் காட்டினார். வெள்ளைக்காரர்களை வெளியேற்றி தேசம் சுதந்திரம் பெறுவதற்குக் காங்கிரஸ் கையாண்ட முறைகளை இப்போது சில கட்சிகள் கையாளுவதில் உள்ள தவறுகளை, அறியாமையை நன்கு எடுத்துக் காட்டினார்.

கூட்டம் முடிந்த போது "ராஜாஜி வாழ்க" "ராஜாஜி சர்க்கார் வாழ்க!" என்ற வாழ்த்தொலிகள் வானை அளாவின.

இந்தப் பொதுக் கூட்டத்தை நடத்துவதில் முக்கிய பங்கு கொண்டு பாடுபட்ட தூத்துக்குடி நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ பொன்னுசாமி நாடார், தூத்துக்குடி ஸ்ரீ கிட்டு, ஸ்ரீ சோமயாஜுலு ஆகியவர்கள் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி இருந்தார்கள்.

தூத்துக்குடி மக்கள் கப்பல் ஓட்டிய தமிழர் ஸ்ரீ வ.உ. சிதம்பரம் பிள்ளையின் பெருமைக்கு மேலும் மேலும் பெருமை அளிக்கும் வகையில் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நல்ல முறையில் பணி ஆற்றுவார்களாக!

வாழ்க, வ. உ. சி.யின் நாமம்!
வளர்க, எஸ். ஏ. வி. பாடசாலை!



அழகும் அறிவும்

பத்மாஸனி தேசிகன்

என் மடியின்மேல் புஸ்தகம் விரித்தபடியே கிடந்தது. எவ்வளவு முயன்றும் என் கவனத்தை அந்த நாவலில் திருப்ப முடியவில்லை. விவரிக்க இயலாத வேதனையில் மனம் படாதபாடு பட்டுக் கொண்டிருந்தது. 'பட்'டென்று நாவலை மூடி வைத்துவிட்டு ஜன்னலருகில் போய் நின்றேன். 'ஜில்'லென முகத்தில் வந்து படிந்த இளம் காற்று மனோ வேதனையைச் சற்றுக் குறைத்தது. எத்தனை நேரமாக இப்படி நின்றேனோ, எனக்கே தெரியாது. திடீரென்று என் அறையில் கமழ்ந்த மருக் கொழுந்தின் மணம் மரத்து விட்டிருந்த உணர்வுக்கு உயிர்ப் பூட்டியது. அடுத்து, கண்ணாடி வளையல்களின் கலகலத்த ஒலி சிந்தனையைக் கிளறியது. திரும்பிப் பார்த்தேன்.

இடுப்பில் தண்ணீர்க்குடம் ஏந்திக் கொண்டு வேலைக்காரப் பெண் கண்ணம்மா முகத்தில் புன்னகையை வழியவிட்டுக் கொண்டு நின்றிருந்தாள்.

அவளை ஏற இறங்க ஒரு முறை நோக்கினேன். என்றைக்கோ நான் அவளுக்குக் கொடுத்த பழம் பட்டுப் புடவை அவள் உடலை அலங்கரித்துக் கொண்டிருந்தது. இழைய இழைய வாரிப் போடப்பட்ட கொண்டை. கட்டு மருக்கொழுந்தைச் சுமந்து கொண்டிருந்தது. நெற்றியில் காலணா அளவுக்குச் சிவப்புக் குங்குமம் சுடர் விட்டது. கை நிறையப் புதுக் கண்ணாடி வளையல்கள் மின்னியது. மகிழ்ச்சியால் பூரித்தது முகம். அவள் தோற்றத்தில் இருந்த கவர்ச்சியைக் கண்டு நான் ஒரு கணம் அயர்ந்தே விட்டேன். முகத்தில் புன்னகையை வரவழைத்துக் கொண்டு, "என்ன, கண்ணம்மா! அலங்கார மெல்லாம் பிரமாதமாயிருக்கே! என்ன விசேஷம்!" என்றேன்

அவள் வெட்கத்தால் உடலை நெளித்துக் கொண்டு, "எங்க அத்தான் அக்கரைச் சீமையிலிருந்து வந்திருக்காரு மருக்கொழுந்து, வளையல்லாம் வாங்கி வந்தாரு" என்றாள்.

"அது யாரடி அத்தான்! உன் அத்தைக்கு அத்தான் முழுநதையே கிடையாது என்று சொன்னாயே! திடீரென்று எங்கிருந்து வந்து முளைத்தான் இந்த அத்தான்!" என்று அவளிடம் வியப்புடன் கேட்டேன்.

"அவர் சொந்த அத்தான் இல்லை; 'இவி அவர் பெயரை எப்படியம்மா சொல்கிறது! அத்தான் அம்மா, மூன்றும் வருசம் பட்டாளத்திலே போய்ச் சேர்ந்தார் பாருங்க மளிகைக் கடை மருதமுத்துவின் மகன்! அவர் தானுங்க" என்று வெட்கத்தோடு சேலைத் தலைப்பை முறுக்கிக் கொண்டே சொன்னாள் கண்ணம்மா.

"யார், தங்க வேலையா சொல்கிறே! சரியான ஜோடியாகத்தான் பார்த்துப் பிடிச்சிருக்கே! எப்போது கல்யாணம்!" என்று கூறிக்கண்ணைச் சிமிட்டினேன்.

"அடுத்த வெள்ளிக்கிழமை, அம்மா" என்றாள் என்னை ஏறிட்டுப் பார்க்காமல்.

"தாலி கட்டியானதும் புருஷனுடன் இங்கு வரவேணும் தெரியுமா! மாலையும் கழுத்துமா உங்கள் இரண்டு பேரையும் ஜோடியா பார்க்க வேணும்போல் இருக்கு. என்ன கண்ணம்மா! வரையா!" என்று ஆவலுடன் கண்ணம்மாளைக் கேட்டேன்.

"அவரால் இங்கு வர முடியாதம்மா" என்று கம்பிய குரலில் சொன்னாள். கண்களில் நீர் துளித்தது. "வர முடியாதா! ஏன் அப்படிச் சொல்றே!" என்றேன் திகைப்புடன்.

"அவருக்கு ஒரு கால் போயிடுத்து, அம்மா! சண்டையிலே காலை இழந்துட்டாரு" என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறின கண்ணம்மா முகத்தைக் கவிழ்த்துக் கொண்டாள்.

"ஐயோ, பாவமே!" என்று நான் கூவிட்டே விட்டேன். தங்கவேலன் கட்டுமஸ்தான தேகம் உடைய அழகிய இளைஞன். நாலெழுத்துத் தெரிந்தவன். அந்த வட்டாரத்திலேயே கட்டழகி கண்ணமாவுக்கு இணையானவனாக அவன் ஒருவனைத்தான் சொல்ல முடியும். சரியான ஜோடிகளை ஒன்று சேர்த்து வைப்பதென்றால் கடவுளுக்குப் பிடிக்காது போலும். இல்லையெனில் தீராத குறையை ஏன் உண்டாக்க வேண்டும்!

நொண்டிக் காலுடன் தங்கவேலனின் உருவம் என் மனக்கண் முன்னால் தோன்றியது. அவனருகில் கண்ணம்மா கண்ணீரும் கம்பலையுமாக நிற்கும் கோலமும் தெரிந்தது!

தங்கவேலன் நின்ற இடம் திடீரென்று காலியாயிற்று. அடுத்த கணமே அவன் இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டு அவர் தோற்றமளித்தார். கண்ணம்மா இடத்தில் என் உருவம் தெரிந்தது. சகிக்க முடியாத அருவருப்புடன் கண்களை மூடிக் கொண்டேன்.

"என்னம்மா இது; ஒரேயடியா இடிஞ்சுபோய் உட்கார்ந்துட்டீங்க!" என்ற கண்ணமாவின் குரல் என்னை விழிப்படையச் செய்து புறநிலைக்குக் கொண்டு வந்தது. நான் அவளை நோக்கினேன். அவள் முகத்தில் எப்பொழுதும்போலப் புன்னகை தவழ்ந்து கொண்டிருந்தது. நடுவில் என் மனத்தில் தலை காட்டிய சோகம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டிருந்தது.

"ஏன்டி கண்ணம்மா! இந்த நொண்டியையா கல்யாணம் பண்ணிக்கப் போறே! நீயோ பச்சைக்

கிளி மாதிரி இருக்கே உன்னைக் கொத்திக்கொண்டு போக எத்தனையோ கட்டிளங் காளைகள் காத்துக் கொண்டிருப்பார்களே!" என்று அவளிடம் கேட்டே விட்டேன்.


"கால் நொண்டியாகப் போயி விட்டதுன்னு அவங்கமேலுள்ள ஆசை போயிடுமா, அம்மா! இந்த மட்டும் அந்தத் தெய்வம் அவர் காலை மாத்திரம் எடுத்துக்கொண்டு அவர் உயிரை விட்டு வெச்சுதே! அவர் உசிரு போயிருந்தா இந்நேரம் என் உசிரு இருக்குமா அம்மா!" என்றாள் கண்ணம்மா. அவள் மனத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நானும் கண்ணம்மாவின் நிலையில் தானே இருக்கிறேன். என் மனம் வேதனையால் எப்படித் துடிக்கிறது! இவள் மட்டும் ஆனந்தப் பட்டுக் கொண்டிருக்க முடியுமா!

2

ஆம்: அவர் எனக்குச் சொந்த அத்தான் தான். ஒரு காலத்தில் நானும் அவர்மீது கொள்ளை ஆசை வைத்திருந்தேன். சிவந்த நிறமும், சுருண்ட கிராப்பும், அழகிய வதனமும், ஆறடி உயரமும், ஆஜானுபாகுவான தேகமும் கொண்ட அத்தானின் காம்பீர்யம் பொருந்திய அழகில் நான் மயங்கியதில் வியப்பில்லை. அவர் சிரித்துச் சிரித்துப் பேசும்போது முத்தொளி வீசும் அந்தப் பற்களின் அழகில் சொக்கிப்போய் அவரையே பார்த்த வண்ணம் உட்கார்ந்திருப்பேன் நான். இந்தச் சுந்தரன் என்றென்றும் எனக்கே உரியவர் என்று பெருமிதம் கொண்ட நாள் அது.

சிறு பிராயத்தில் ஒன்றாக விளையாடிய நாங்கள் பெரியவர்களான பிறகும் அவ்விதமே சிநேகத்துடன் நெருங்கிப் பழகுவதை எங்கள் பெற்றோர்கள் தடை செய்யவில்லை. நான் பிறந்தன்றையி லிருந்தே எனக்கும் அவருக்கும் முடிச்சுப் போட்டு வைத்திருந்ததனால் நாங்கள் அப்படிப் பழகுவதில் தவறு ஒன்றுமில்லை என்று அவர்கள் சும்மா இருந்தனர். சினிமாவுக்கும், 'பீச்'சுக்கும் கூட நாங்கள் சேர்ந்தே செல்லுவோம். அவர் அருகில் இருப்பதே ஒரு பாக்யமாக நினைத்து மனம் மகிழ்வேன். திடீரென்று என் தந்தைக்கு வேறு ஊருக்கு மாற்றலாயிற்று. அத்தானை விட்டுப் பிரியவேண்டி யிருப்பதை நினைத்து நான் துடித்த துடிப்பை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. "அட, அசடே! இப்படியா அழறது! நம்மைச் சேர்த்து வைக்கும் அந்த நாள் ரொம்ப தொலைவில் இல்லையே! மனத்தைத் திடப்படுத்திக் கொள்" என்று தேற்றினார் அவர். அவரது புத்திமதிகளை அப்படியே ஏற்றுக் கொண்டு, அவர் கைத்தலம் பற்றும் அந்தப் புனித நாளை எதிர் நோக்கி நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கும் போது இடிபோன்ற ஒரு செய்தி என்னை ஒரு கலக்குக் கலக்கியது. கார் விபத்தில் தெய்வாதீனமாக உயிர் தப்பிய அத்தான் கணுக்கால் நரம்பு முறிந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டிருப்பதாகச் செய்தி வந்தது. உடனே நானும் என் பெற்றோர்களும் அவரைப் பார்க்கப் புறப்பட்டோம். காலில் பெருத்த கட்டுடன் ஆஸ்பத்திரி இரும்புக் கட்டிலில் அவர் படுத்திருக்கும் அந்தக் காட்சி என்னை அணு அணுவாகத் துடிக்கச் செய்தது.

ஆறுமாத சிகிச்சைக்குப் பிறகு ஆஸ்பத்திரியை விட்டு வெளி வந்த அத்தான், எங்களைப் பார்க்க வருவதாக எழுதியிருந்தார். என் உள்ளத்தில் குதூகலம் குதி போட்டது. அவருக்காக ஒரு அறையைச் சுத்தப்படுத்தி அழகாக அலங்கரித்தேன். புதிய திரை வாங்கி ஜன்னலுக்குத் தொங்க விட்டேன். அவர் வருவதாக இருந்த அந்தத் தினத்தில் வீடே மகிழ்ச்சியால் நிரம்பி வழிந்தது. அம்மா அத்தானுக்கு அறுசுவையுண்டி தயாரிப்பதில் மும்முரமாக ஈடு பட்டிருந்தாள். அப்பா ஸ்டேஷனுக்குப் போயிருந்தார் அவரை வரவேற்க. அத்தானுக்கு மிகவும் பிடித்தமான ஆரஞ்சு வர்ணக் கதர் ஸில்க்கை உடுத்திக் கொண்டு அஜந்தா முறையில் கொண்டை போட்டுக் கனகாம்பரப் பூவால் அதை அலங்கரித்துக் கொண்டேன். ஓர் இடத்திலும் இருப்புக் கொள்ளாமல் வாசலுக்கும் உள்ளுக்குமாக அலைந்து கொண்டிருந்தேன். வாசலில் வண்டி வந்து நின்றதும் மகிழ்ச்சியால் உள்ளம் 'படக், படக்'கென்று அடித்துக் கொள்ள வாசலுக்கு ஓடினேன். அப்பா இறங்கிய பிறகு அவர் இறங்கினார். என்னைப் பார்த்த அவர் முகத்தில் சோகம் கலந்த ஒரு புன்னகை மலர்ந்தது. அந்தச் சோகப் புன்னகைக்குக் காரணம் அடுத்த கணமே விளங்கி விட்டது. ஒரு காலை ஊன்றி எடுத்து மற்றொரு காலை அவர் ஊன்றும்போது அவர் உடல் வளைந்து நிமிர்ந்தது. வானமே இடிந்து தலையில் விழுவது போல் இருந்தது எனக்கு. அவர் காலை இழுத்து இழுத்து வைத்துப் படியேறிவரும் கண்றாவியைக்



மயிலாப்பூர் அட்வகேட் ஸ்ரீ ஆர். சுவாமிநாதய்யரின் செல்வக் குமாரி சௌ. கல்பகசுந்தரிக்கும் ஸ்ரீ கே. அருணாசல ஐயர் எம். ஏ. அவர்களின் குமாரர் காப்டன் ஏ. பாலசுப்ரமணியம் பி. எஸ்ஸி. பி. இ. அவர்களுக்கும் சென்ற செப்டம்பர் 4-ல மயிலாப்பூர் "சாந்தி" இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. உறவினரும் நண்பர்களும் திரளாக விஜயம் செய்து மணமக்களை வாழ்த்தினார்கள். திருமணத்தை யொட்டி ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள், ஸ்ரீமதி சுசீலா அனந்தராமன் இவர்களின் சங்கீதக் கச்சேரிகளும், கல்லிடைக் குறிச்சி ஸ்ரீராம சாஸ்திரிகளின் "ஸதீ தர்ம" உபந்நியாசமும் கோயமுத்தூர் ஸ்ரீ சி. ஜி. ஆர். பாகவதர் அவர்களின் இராமாயண காலட்சேபமும் நடைபெற்றன.

சிறப்புரை.

சிறுகதைகளுக்கு என்று வகுப்பட்டிருந்த பழைய பாதையை விட்டு விலகி, நல்ல நடையில், மக்களின் வாழ்விற்கான – புதிய – பண்பான பாதையில் தொடர்கிறது, "கல்கி"யின் இன்றைய சிறுகதைகள். இது நாளுக்கு ஏற்படுகிற மறுமலர்ச்சி; வரவேற்கவேண்டிய புதுமை;

செப்டம்பர் 6-ந் தேதிய "கல்கி" இதழில் வெளிவந்துள்ள கதைகளில், "சூடாமணி" எழுதிய "கதவு திறந்தது" "பூமா" எழுதிய "அவன் நண்பன்" "சுபஸ்ரீ"யின் "இலையும் செடியும்", "ஆர். எஸ். ராஜம்பா"வின் "வெய்யிலும் நிழலும்" என்பவை ஒவ்வொன்றும், ஒவ்வொரு தனித்தன்[illegible]; அற்புதமான [illegible] அதிசய [illegible]; போதிக்கப்பட வேண்டிய நல்லறிவை, [illegible] போதிக்கும் இயக்கம்; [illegible]; வாழ்க அவர்கள் தமிழ்த் தொண்டு! [illegible] தமிழ்ச் சிறுகதைகள்!!

அன்புள்ள,

[illegible]

15-9-[illegible]

காணச் சகியாமல் உள்ளே ஓடிவிட்டேன். என் இன்பக் கனவுகள் யாவும் சிதைந்து விட்டதைக் கண்டு இருதயம் வெடிக்கப் புலம்பினேன்.

வீட்டில் என் விவாகப் பேச்சுத் துவங்கியது. அத்தானுக்கே என்னைக் கொடுக்க ஏற்பாடாகி வருவதைக் கண்டு ஆத்திரத்துடன் என் தாயாரிடம் சென்று, "அம்மா! என்னைக் கிணற்றில் வேண்டுமானாலும் தள்ளு. அந்த நொண்டி கிட்டே மாத்திரம் தள்ளாதே" என்று கூறினேன்.

அம்மா கோபத்துடன் விழித்து, "இன்னொரு தரம் அவனை நொண்டி என்று சொன்னால் நாக்கை அறுத்து விடுவேன். அவனுக்கு என்னடி வந்தது! மன்மதன் மாதிரி இருக்கான். காலில் கொஞ்சம் ஊனம் இருந்து விட்டால் என்னவாம்! அவனுடன் அப்போ சினிமாவெல்லாம் சுத்தி விட்டு இப்ப பண்ணிக்க மாட்டேன் என்றால் ஊர் சிரிக்காதா!" என்றாள் கடுகடுப்பாக.

"ஊர் எதுக்குச் சிரிக்க வேண்டும்! அவருடன் சினிமாவுக்குப் போயிருந்தால் என்ன தப்பு இருக்கு! இந்தக் காலத்தில் ஆண்களுடன் பெண்களும் சரிசமமாகப் பழகுகிறார்கள். ஒரு ஆணுடன் ஒரு பெண் சகஜமாகப் பழகினால் அவனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டுவிட வேண்டுமா என்ன!" என்று நான் வாதித்தேன்.

அம்மா எரிந்து விழுந்து என் வாயை அடக்கினாள். என் கண்ணீரும், கதறலும் என் பெற்றோர்கள் உள்ளத்தை உருக்கவில்லை. என் மனம் முறிந்தது. 'நொண்டியின் மனைவி' என்ற பட்டப் பெயருடன் ஆயுள் முழுவதும் வாழ வேண்டுமா! அப்படி என்ன தலைவிதி எனக்கு வந்தது!

இதுவரை என் துரதிர்ஷ்டத்தை எண்ணி மட்டும் துக்கித்துக் கொண்டிருந்தேன். கண்ணம்மாவும் என்னைப் போலவே துரதிர்ஷ்டமுள்ள பெண் என்பதை அறிந்து கொண்டதும் அவளுக்காக என் மனம் பரிதவிக்க ஆரம்பித்தது. பெண் ஜன்மத்திற்குச் சுயேச்சையாக வாழ உரிமை ஏது!

விதிப்படி எல்லாம் நடக்கட்டும் என்று என்னால் சும்மா இருந்துவிடவும் முடியவில்லை. பெற்றோர்களிடம் மன்றாடுவதில் பிரயோஜனமில்லை என்று தெரிந்ததும் அத்தானிடமே என் மனத்தைத் திறந்து விடத் துணிந்து விட்டேன். மெத்தப் படித்த ஒரு மனிதன் ஒரு பெண்ணின் விருப்பத்துக்கு மாறாக அவளை மணக்க உடன்படுவானா! அறிவாளியான அத்தான் இந்த மாதிரி ஒரு காரியத்தைச் செய்ய மனம் இசைவாரா! என் மனோவேதனையை எழுத்திலே வடித்து அவருக்கு அனுப்பிய பிறகு நான் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டேன். உடலிலே பழைய தெம்பும், உள்ளத்தில் உற்சாகமும் என்னை வந்தடைந்தன. வீட்டிலே அடைந்து கிடந்த நான், வெளியில் தலை காட்டத் தொடங்கினேன். எனக்கு நல் வாழ்வு கிடைத்து விடும். ஊனமில்லாதவருடன் வாழலாம். ஆனால் கண்ணம்மாவுக்கு...!

3

அவளுக்கு விவாகம் நடந்து விட்டது. புதுப் புடவை சலசலக்க, கழுத்தில் புத்தம் புது மஞ்சள் சரடு ஒளிர்விட அவள் மட்டும் என் பெற்றோர்களிடம் ஆசி பெற வந்தாள். அவள் முகத்தில் துளிக்கூட வருத்தம் நிழலாடவில்லை. ஒரு தட்டில் வெற்றிலை பாக்கு, புஷ்பம், குங்குமம் இவைகளுடன் ஒரு புதுப் புடவையையும் ஒரு ஜோடி வேஷ்டியையும் வைத்துக் கண்ணம்மாவிடம்கொடுத்து அவளை ஆசீர்வதித் தனுப்பினாள் அம்மா. மணமான பிறகு முன்போல் கண்ணம்மா எங்கள் வீட்டில் ஊர் வம்பெல்லாம் அளந்துவிட்டு நிதானமாக வீடு செல்வதில்லை. துரிதமாக வேலைகளை முடித்துக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டு விடுவாள். "என்னடி கண்ணம்மா! கல்யாணமான பிறகு ஜோக்கி பண்ணிக்க ஆரம்பிச்சுட்டாயே!" என்று நான் கேலியாகக் கேட்டேன்.

"என்னம்மா அப்படிச் சொல்றே! நான் முன்போல இங்கே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தால் அவரை யாரும்மா கவனிச்சுப்பாங்க!" என்று புன்னகையுடன் சொல்லுவாள் அவள்.

என் விவாகத்துக்கு ஏற்பாடெல்லாம் துரிதமாக நடந்து கொண்டிருப்பதைக் கண்டு மீண்டும் மனத்தில் பதைபதைப்பு உண்டாகியது. அத்தான்

ஏன் இன்னும் பேசாதிருக்கிறார்! ஒருகால் இந்த மணத்தை நிறுத்த அவருக்கு மனமில்லையோ! "நொண்டியாகி விட்ட உன்னை மணக்க என் மனம் ஒப்பவில்லை" என்று ஒரு பெண் ஜாடைமாடையாகத் தெரிவித்தும் ஒரு மனிதன் வெட்கங்கெட்டுப் போய் அவளை மணக்கும் நோக்கத்தை ஒழிக்காமலிருந்தால் அவனை என்னவென்று மதிப்பது! மனிதன் என்று மதிக்க முடியுமா!

வாழ்க்கையில் மிகவும் இன்பகரமான கட்டமான விவாகம், என் வாழ்க்கையில் துன்பமயமான ஒரு சடங்காயிற்று. என் வாழ்க்கையை நரகமாக்கிய அவர் முகத்தை ஏறிட்டு நோக்கவும் வெறுத்தேன். பதிலுக்கு அவர் வாழ்க்கையை நரகமாக்கக் கருவிக்கொண்டு இவர் இல்லத்தில் அடியெடுத்து வைத்தேன். அவர் என்றும் போல என்மீது பிரேமையாகத்தானிருந்தார். அவர் உல்லாசமாக என்னிடம் பேச வரும்போது நான் முகத்தைத் திருப்பிக் கொள்வேன். என் வெறுப்பு உணர்ச்சிகளை வெளியிட நான் சற்றும் தயங்கவில்லை. எனது நடத்தையால் அவர் மனம் புண்பட்டவர்போல் காணப்பட்டார். நம்மீது இவ்வளவு ஆசையாக இருக்கும் கணவனை மனம்நோகச் செய்கிறோமே என்ற இரக்க உணர்ச்சி என் மனத்தில் சிறிதும் எழவில்லை. ஒருநாள் அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்று ஊரிலிருந்து கடிதம் வரவும் நான் உடனே புறப்பட்டு விட்டேன். நாட்கள் மாதங்களாகப் பெருகின. அம்மாவுக்கு உடம்பு பூர்ண குணமான பிறகுகூட நான் ஊருக்குத் திரும்பிப் போகவில்லை. அவரும் என்னை வரும்படி கடிதம் எழுதவில்லை.

ஒரு நாள் கண்ணம்மா கேட்டாள்: "ஏன் அம்மா, நீங்க வந்து ஆறுமாசமாகப் போகிறது. மாப்பிள்ளை ஐயா ஒரு தடவைகூட உங்களைப் பார்க்க வரலையே! ஏன் அம்மா அப்படி!"

"எல்லாம் வருவாரு" என்று அலட்சியமாகச் சொன்னேன் நான். அவள் விடவில்லை.

"எப்படி அம்மா அவங்களை விட்டுட்டு உங்களால் இருக்க முடியறது! அவரைப் பிரிஞ்சு வேலை வெட்டிக்குப் போகக்கூட எனக்கு மனசு கேட்க மாட்டேங்கறதே!"

இதற்குப் பதில் சொல்லத் தெரியாது விழித்தேன். ஆனால் கண்ணம்மா என் பதிலுக்காகக் காத்துக் கொண்டிருக்கவில்லை. அவளது நொண்டிக் கணவன்தான் இவள் சுச்ருஷைகளுக்காக அங்கு காத்துக் கொண்டிருப்பானே! இவளுக்கு இங்கு இருப்புக் கொள்ளுமா!

4

அன்று என் மேஜை டிராயரை ஒழித்துக் கொண்டிருக்கும்போது முத்திரையிடப் படாத ஒரு புது கவர் என் கையில் தட்டுப் பட்டது. மேல் விலாசம் எழுதப்படவில்லை. உள்ளே ஒரு கடிதம் அடக்கம் செய்யப்பட்டிருப்பது தெரிந்தது. வியப்புடன் கவரைக் கிழித்துக் கடிதத்தை எடுத்துப் படித்தேன்.

"அன்புள்ள அத்தான்.

நம் காதல் நினைவுகளை ஒரு கனவாக நினைத்து மறந்து விடும்படியான ஒரு காலம் வரும் என்று நான் கனவிலும் கருதியதில்லை. என்ன செய்வது? இந்த ஜன்மத்தில் நமக்குப் பிராப்தமில்லை போலும். என் பெற்றோர்களின் மனதை மாற்ற முடியாது. தங்களைச் சரணமடைகிறேன். தயவு செய்து என்னை மன்னித்து ரட்சியுங்கள்."

என் இதயத் துடிப்பே ஒரு கணம் நின்றுவிட்டது. இவ்வளவு தூரம் துணிந்து எழுதியவளுக்கு இதைத் தபாலில் சேர்க்க எப்படி மறதி ஏற்பட்டது! இது தான் விதியோ! நெற்றிப் பொட்டைப் பிடித்துக் கொண்டு மேஜை மீது தலையைக் கவிழ்த்துக் கொண்டேன். மனத்தைக் குத்திக் குத்தி வதைத்தது. அவர்மீது நான் வெறுப்பு கொண்டிருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால் அவர் எனக்கு ஒரு கெடுதலும் செய்யாதிருக்கும் போது அவருக்கு நான் அளித்துக் கொண்டிருக்கும் தண்டனை நீதியா! ஐயோ! அவரை நான் எப்படித் துன்புறுத்தினேன்! இவ்வளவுக்கும் அவர் வாயைத் திறந்திருப்பாரா! மனச் சாட்சியின் உபத்திரவத்தைப் பொறுக்க மாட்டாது நான் துடித்தேன். வெளியில் சென்றாலாவது மனோவேதனை சற்றுக் குறையலாமென்று கடற்கரையை நோக்கி நடந்தேன்.

அன்று நான் வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது ஒரு குடிசையில் தென்பட்ட காட்சி என்னை மேலே நடக்க விடவில்லை. திண்ணையில் போடப்பட்டிருந்த ஒரு கயிற்றுக் கட்டிலின்மீது ஒரு மனிதன் உட்கார்ந்திருந்தான். ஒரு கால் கீழே தொங்கிக் கொண்டிருந்தது. இன்னொரு கால் தொடைக்குக் கீழ் துண்டிக்கப் பட்டிருந்தது. அவனருகில் ஒரு கழி. ஆம்! தங்கவேலனே தான் அவன். உட்புறமிருந்து ஒரு அலுமினியத் தட்டை ஏந்திய வண்ணம் கண்ணம்மா வந்தாள்.

"அத்தான், சோள அடை தட்டியிருக்கேன். தின்னு பாருங்க எப்படி இருக்குன்னு"—இப்படிச் சொல்லிக்கொண்டே அவன் வாயில் கொஞ்சம் பிட்டுப் போட்டாள் அவள். அவன் ஆனந்தமாகச் சுவைத்துக் கொண்டே, "இந்தத் தங்கக் கையால் பண்ணினது எப்படி இருக்குமாம்!" என்றான் கொஞ்சலாக.

நான் வேகமாக நடக்கலானேன்.

ஆகா! எவ்வளவு ஆனந்தமாக அவர்கள் அளவளாவுகிறார்கள்! இத்தனைக்கும் அவன் நொண்டி. பிறர் உதவியின்றி அவனால் வாழ முடியாது. என் வாழ்க்கையை விடக் கண்ணம்மாளின் வாழ்க்கை எந்த வகையில் சிறந்தது! என்போல அவள் மனம் கசந்தா வாழ்கிறாள்! இவ்வளவு பெருங் குறையை அவள் சிறிதும் லட்சியம் செய்யாமல் அவனுடன் மனமகிழ்ந்து சந்தோஷமாக வாழ்கிறாளே!

அவள் புருஷனைப்போல் என் கணவர் நொண்டியல்ல. பிறர் உதவி அவருக்குத் தேவை இல்லை. அவரால் வேகமாகக்கூட நடக்க முடியும். ஆனால் அழகாக நடக்க முடியாது. இந்தச் சிறு குறையைப் பொறுக்க முடியாது அவரை வெறுத்து ஓடி வந்த என்னைவிடக் கண்ணம்மா எவ்வளவு மேலானவள்! இத்தனைக்கும் அவள் படிப்பு வாசனையற்ற குடியானவ மங்கை. காதலைப் பற்றி அவளுக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் உண்மைக் காதல் அவளிடம் ஒளிர் விடுகிறது. நான் அவரிடம் கொண்டிருந்த கவர்ச்சிக்குக் 'காதல்' என்ற புனிதப் பெயரைச் சூட்ட முடியுமா! எந்த நிலையிலும் மாறாது, எவ்வித இன்னல்களிலும் நிலை குலையாது பட்டைத் தீட்டிய வைரம் போல் ஜொலிக்கும் தூய அன்பல்லவா உண்மைக் காதல்! காதல் நிரம்பி இன்பம் வழியும் கண்ணம்மாளின் தூய வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கச் சிந்திக்க என் அறிவுக் கண் திறந்து கொண்டது. என் அருமைக் கணவர் காலில் விழுந்து மன்னிப்புக் கோர என் மனம் பெரிதும் துடித்தது.

உழைப்பை உயர்த்தும் கல்லூரி

உழைப்பையும் படிப்பையும் ஒன்றாக இணைத்த கல்லூரி என உலகமெல்லாம் பெயர் எடுத்த ஒரு கல்லூரி அமெரிக்காவின் மத்திய மேற்குப் பகுதியில், ஒரு சிறிய நகரில் (யெல்லோ ஸ்பிரிங்ஸ் – ஓஹியோ) இருக்கிறது. பார்த்தால் அதற்கும் மற்ற அமெரிக்கக் கல்லூரிகளுக்கும் தோற்றத்தில் வேற்றுமை தெரியாது. சிறிய கல்லூரிதான். ஆண்களும் பெண்களும் படிக்கிறார்கள். "ஆண்டியாக்" கல்லூரி என்பது அதன் பெயர். ஏட்டுப் படிப்பும் அனுபவப் படிப்பும் இசைந்து செல்லும் அந்தக் கல்லூரிக்கு இப்போது சிறப்புடன் நூற்றாண்டு விழா நடக்கிறது.

அது அரசாங்கக் கல்லூரி அல்ல, தனிப்பட்டவர் நடத்தும் கல்லூரி. மாணவர் ஒவ்வொருவருடைய திறமையையும் முற்றும் விளங்கச் செய்ய முன்னணியில் நின்று பாடுபட்ட கல்லூரி "ஆண்டியாக்" கல்லூரி என அமெரிக்கர் பாராட்டுவார்கள். எந் நிறத்தவரும் எம்மதத்தவரும் ஆடவரும் பெண்டிரும் அந்தக் கல்லூரியில் சேர்ந்து படிக்கலாம்.

"ஆண்டியாக்" கல்லூரியின் கல்வித் திட்டத்தில் சிந்தனைக்கும் செயலுக்கும் படிப்புக்கும் உழைப்புக்கும் சம பங்கு உண்டு. ஆயிரம் மாணவர்கள் அந்தக் கல்லூரியில் படிக்கிறார்கள். ஒரு முறை போய்க் கண்டால் அவர்களைக் கல்லூரிக்குள்ளே காணலாம். இலக்கியம், கலை, விஞ்ஞானம் முதலியன வெல்லாம் வகுப்பறைகளிலே பாடமாகும். மறு முறை போய்ப் பார்த்தால் அவர்கள் கல்லூரிக்கு வெளியே எங்கெல்லாமோ வேலை செய்து வருவதைக் காணலாம். அந்த கல்லூரிப் பயிற்சிக் காலம் ஐந்தாண்டுகள். அந்த ஐந்து ஆண்டுகளில் 90 வாரம் கல்லூரிக்கு வெளியே உலகில் மற்றவர்களைப் போல வேலை பார்க்கும் காலமே. பள்ளிப் படிப்பு புள்ளிக்குதவாது என்பதைப் பொய்யாக்குகின்ற இத்தகைய கல்வித் திட்டம் வெற்றி பெறுமாறு ஆண்டு தோறும் மாணவர்களுக்கு வேலை கொடுத்து ஆதரிக்கிறார்கள் ஐந்நூறு பேர்.

கல்லூரி மாணவர்களில் பாதிப்பேர் வகுப்பறைகளிலேயே பாடம் படித்துக் கொண்டிருப்பார்கள்; பாதிப்பேர் வெளியே வியாபார நிலையங்களிலும், தொழிற் சாலைகளிலும், அரசாங்கத்திலும், மற்றும் பல அலுவல்களிலும் இருப்பார்கள். சிலர் குழந்தைப் பாடசாலைகளில் சொல்லிக் கொடுப்பார்கள்; சிலர் பொருட் காட்சிச்சாலைகளில் விளக்கிச் சொல்வோராய் இருப்பார்கள்; சிலர் நர்ஸுகளாக இருப்பார்கள்; சிலர் அரசாங்க உத்தியோகங்களில் இருப்பார்கள்; சிலர் பெரிய பெரிய கடைகளில் விற்பனையாளராய் வேலை செய்வார்கள். அவர்கள் செய்வது அரைகுறை வேலை அல்ல, அரை நாள் வேலையல்ல; முழு நேர வேலைதான். வேலை செய்யும் மற்றவர்களுக்கும் இவர்களுக்கும் ஒரே சம்பளம் தான்; வேலையில் குறையிருந்தால் பிறருக்குக் கிடைக்கும் பரிசுதான் இவர்களுக்கும்; அவர்களை வேலைக்கு வைத்தவர்கள் எல்லோரையும் போலவே அவர்களையும், திறமை கண்ட இடத்துப் பாராட்டுவார்கள், குறை கண்ட இடத்தில் கண்டிப்பார்கள்; தகுதியினால் உயர்த்துவார்கள், சரியில்லையானால் நீக்கி விடுவார்கள்.

இவ்வாறு எட்டு அல்லது 12 வாரம் வெளியே அலுவல் உலகில் அனுபவம் பெற்ற பின்னர் இவர்கள் வகுப்பறைக்குள் நுழைவார்கள்; வகுப்பறையில் இருந்தவர்கள் வெளியுலகில் நுழைவார்கள். சில மாதங்கள் சென்ற பின், மீண்டும் பழைய வேலைக்கு வருவார்கள், அல்லது புது வேலைகளைக் கொள்வார்கள்.

கல்லூரியில் நுழையும் போதே மாணவர் சிலர் தமது வாழ்க்கைத் தொழில் இன்னதென முடிவு செய்திருப்பார்கள். அவர்களுக்கு இந்தக் கல்வித் திட்டம் மிக்க பயனளிக்கும். இன்னும் சிலர் தமக்கு ஒத்த வேலை இன்னதெனத் தெரியாமல் திணறுவார்கள். அவர்களுக்கும் இந்தத் திட்டத்தால் சிறந்த நன்மை உண்டாகும். ஆசிரியராகலாமா, நர்ஸாகலாமா என்று அலைப்புறுவாள் ஒரு மாணவி; இரண்டையும் செய்து பார்த்துத் தெரிந்து கொள்ள இக் கல்லூரி அவளுக்கு வசதி செய்கிறது. அவள் நர்ஸுக்குத் துணையாக வேலை செய்யலாம், அல்லது டாக்டர் அலுவலகத்தில் குமாஸ்தாவாக இருந்து பார்க்கலாம். ஆசிரியர் வேலை செய்ய முடியா விட்டாலும், பள்ளிக்கூட நூல் நிலையத்தில் உதவி செய்யலாம். பள்ளிப் பிள்ளைகள் விளையாட்டை மேற் பார்க்கலாம்.

ஆண்டியாக் கல்லூரி மாணவர்கள் படிப்பை முடித்துப் பட்டம் பெறும் சமயம், அவர்களில் 100-க்கு 95 பேரும் தத்தமக்குரிய வாழ்க்கைத் தொழிலைத் தெரிந்தெடுத்தவர்களாய் இருக்கிறார்கள். இதுவே அந்தக் கல்லூரிக் கல்வித் திட்டத்தின் சிறப்புக்கு ஒரு சான்று.

ஆண்டியாக்கின் கல்வித் திட்டத்தைப் போன்றே அதன் ஆட்சிமுறையும் பெயர் பெற்றதாகும். கல்லூரியில் உள்ள ஒவ்வொருவருக்கும் வாக்குரிமை உண்டு. ஆசிரியரும் மாணவரும் அவ்வகையில் ஒன்றே. இந்தச் "சமுதாய அரசாங்கத்" துக்கே அந்தக் கல்லூரிப் புத்தகக் கடை சொந்தமாகும்; மாணவர் பதிப்பிக்கும் வெளியீடுகளை அந்த அரசாங்கமே ஒவ்வொருவருக்கும் வழங்குகிறது; படிப்பைத் தவிர மற்றெல்லாக் காரியங்களையும் அந்த அரசாங்கமே கவனமாகக் கண்காணித்து வருகிறது.

ஆண்டியாக் கல்லூரி 1853-ல் பெயர்பெற்ற கல்வியாளர் ஹொரஸ்மான் என்பவரால் தோற்றுவிக்கப் பெற்றது. உழைப்பையும் படிப்பையும் இணைக்கும் அதன் திட்டம் 1921-ல் ஆர்தர் ஈ. மோர்கன் என்பவர் தலைமையில் அங்கு புகுத்தப் பட்டது. அவர் புகழ்பெற்ற ஒரு என்ஜினியர்: பின்பு டென்னஸிப் பள்ளத்தாக்கு நிர்வாகத்தின் முதல் தலைவரானவரும் அவரே. சமீபத்தில் இந்தியாவில் அவர் இந்தியப் பல்கலைக் கழக கமிஷனில் ஒருவராக இருந்து ஏறக்குறைய ஓராண்டு காலம் உழைத்தார்.

பள்ளிப் படிப்பையும் புள்ளிக் கணக்கையும் பாடத்தையும் வாழ்க்கையையும் இணைக்கும் ஆண்டியாக்கின் திட்டத்தை அமெரிக்காவிலுள்ள மற்றக் கல்லூரிகளும் பின்பற்றுகின்றன.

அந்தக் கல்லூரிக் கட்டடத்திலுள்ள கற்கள் அது நிற்கும் இடத்திலிருந்து வெட்டியெடுக்கப் பட்டவைகளே. அக் காலத்தில் அதனைத் தோற்றுவித்த ஹொரஸ்மான் தமது மாணவர்களைப் பார்த்து "மக்களுக்கு நன்மையான ஒரு பணியும் காணாமல் இறப்பது இழிவு என்று உணருங்கள்" என்று சொன்னார். அது இன்றும் அக் கல்லூரி கடைப்பிடிக்கும் பொன் மொழியாக விளங்குகிறது.

அநுமகரத்வஜா

ஷட்குண மகரத்வஜா

சக்தி வாய்ந்தது



சுத்தமான ஷட்குணத் தங்கத்திலால் மிகவும் சிறிய அளவில் ஆனால் பிரமாத சக்தி வாய்ந்ததாக உயர்ந்த முறையில் தயாரிக்கப்பட்டுப் பிறகு மாத்திரை வடிவம் ஆக்கப்பட்டிருக்கிறது. உபயோகிப்பதற்கு மிகவும் சுலபம். மற்ற மகரத்வஜங்களை விடச் சக்தி வாய்ந்தது.

○●○

14 மாத்திரைகள் ஒரு புட்டியில் இருக்கின்றன. (7 முழு அளவுகள்)

பெங்கால் கெமிகல்

கல்கத்தா - பம்பாய் - கான்பூர்

ஏஜண்டுகள் :

என். தேசாய் கேலண்டர் & கோ.

41, பந்தர் தெரு - சென்னை


பூஜைகால சலுகை

பாதி விலைகளுக்கும் குறைவு


பிரக்யாதிபெற்ற ஸ்விஸ் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்ட கைக் கெடிகாரங்கள்

கைக் கெடிகாரம்

பாக்கெட் கெடிகாரம், டயம் பீஸ் ஒவ்வொன்றும் 5 வருஷ உத்தரவாதம்



	ஒரிஜனல் விலை	தற்போது விலை
பாக்கெட் வாட்ச (ஆஸ்ட்ரியா)	24	10/-
அயல் நாட்டு அலாரம் டயம்பீஸ்	30	14/-
உயர் ரகம் அலாரம் டயம்பீஸ்	35	16/-

No 501  Size 7½

15 ஜுவல்ஸ் ரோல்ட் கோல்ட்	75	36/-
15 ஜுவல்ஸ் ,, 20 மைக்ரோன்ஸ்	90	40/-

No. 502  Size 10½

15 ஜுவல்ஸ் வாட்டர்ப்ரூப்	80	38/-
17 ஜுவல்ஸ் வாட்டர்ப்ரூப்	90	44/-
21 ஜுவல்ஸ் வாட்டர்ப்ரூப்	130	60/-

No. 503  Size 6½


5 ஜுவல்ஸ் க்ரோம்கேஸ் ப்ராஞ்சு	42	20/-
5 ஜுவல்ஸ் ரோல்ட் கோல்ட்	52	25/-
15 ஜுவல்ஸ் ரோல்ட் கோல்ட்	70	32/-

குறைந்தவிலையில் பவுண்டன் பேனாக்கள்



ஸ்வான் கோல்ட் நிப் பவுண்டன் பேனா ரூ. 14/-
கோல்ட் கேப் ரூ. 18/- ரினால்ட் பேர்டு ரூ. 13/-
ராஜா (ஜெர்மன்) ரூ. 10/- வெள்ளைப் மாடல் ரூ. 6/-
வில்ஸன் ரூ. 5/-, பார்க்கர் ஜூனியர் மாடல்(ஜப்பான்) ரூ. 7/-

PIONEER WATCH CO.,
Post Box No. 11428, CALCUTTA - 6



12. வருக! வருக!

சங்கீத வித்வானைச் சிறையில் அடைத்த பின் சேனாபதி யோசிக்கலானார்.

'நான் எத்தகைய பைத்தியக்காரன்! ஏதோ முதலில்தான் கனவில் கண்டதை நிஜமென்று நினைத்து ஏமாந்து போனேன் என்றால், மறுபடியும் அதே தவறைச் செய்தேனே? சங்கீத வித்வானுடைய வார்த்தையைக் கேட்டு, என்னுடைய அருமை வீரர்கள் நால்வரைக் காட்டுக்கு அனுப்பி வைத்தேனே! நான் இவ்வளவு பெரிய ராஜ்யத்துக்குச் சேனாபதியாக இருக்கச் சற்றும் தகுதியில்லாதவன்!" என்று தம்மைத் தாமே நிந்தித்துக் கொண்டார்.

அடுத்த கணம் அவருடைய மனத்தில் இன்னொரு எண்ணம் உதித்தது.

'இவ்வளவு ஏமாற்றங்களுக்கும், காரணம் அந்த மந்திரவாதிதான். அந்த மந்திர வாதிதான் ஏதோ சூழ்ச்சி செய்து ஏழு பேர் கனவில் தோன்றிக் காட்டியிருக்கும் அவன் வீடு வரைக்கும் நடக்க வைத்தான். பின்னர் போய் ஒன்றைச் சொல்லியனுப்பி வைத்தான். அதனால் அவனைப் பிடித்துத் தண்டிக்க வேண்டும்! என்னை, முதல் மந்திரியை, ராஜ குருவை ஆகிய நாட்டின் முக்கியஸ்தர்களை யல்லவா ஏமாற்றி விட்டான்! அதனால் அவனைச் சிறைப் பிடிக்க வேண்டும்; அவனைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும்' என்று தம் மனதில் தீர்மானித்தார்.

தமது சேனை வீரர்களில் திறமை மிக்கவர்களாகப் பார்த்துப் பத்துப் பேரைத் தேர்ந்தெடுத்தார். மந்திரவாதியின் அங்க அடையாளங்கள் யாவற்றையும் கூறி, அவனைச் சிறைப் பிடித்துவரும்படி கட்டளையிட்டார். மந்திரவாதியுடன் திரும்பவில்லை என்றால் அவர்கள் தலை போய்விடும் என்றும் எச்சரிக்கை செய்து அனுப்பினார்.

அந்த வீரர்கள், சேனாபதியின் எதிரில் 'சரி' என்று ஒப்புக் கொண்டார்கள். ஆயினும் காட்டில் வழியெல்லாம் சேனாபதியையும், தங்கள் விதியையும் நொந்து கொண்டே போனார்கள்.

"போயும், போயும் மந்திரவாதியைச் சிறைப் பிடித்து வருமாறு யனுப்பி யிருக்கிறாரே! அவன் எளிதில் நம் கைக்கு அகப்படுவானா? அவன் என்ன மந்திரஜால மகேந்திரஜால வித்தைகள்செய்து ஒளிந்து கொள்வானோ? எப்படி யெல்லாம் ஏமாற்றப் பார்ப்பானோ......? சரி, இனி நம் புயங்களின் மீது தலை யிருப்பது நிச்சயமில்லை. அப்படி யிருந்தாலும் ரொம்ப சொற்ப நாட்கள்தான் இருக்கும்!" என்று அவர்களில் ஒருவன் அங்கலாய்த்தான்.

"ஏன்டா, அப்படிச் சொல்லுகிறாய்? மந்திரவாதி கிடைத்தால் சிறைப் பிடித்துக் கொண்டு போவோம். இல்லையென்றால், இந்தக் காட்டைக் கடந்து அடுத்த தேசத்தில் நுழைந்து ஏதாகிலும் வேலை தேடிப் பிழைப்போம்" என்றான் இன்னொருவன்.

இப்படி ஒருவர் மாற்றி ஒருவர் பேசிக் கொண்டே சென்றனர்.

அவர்கள் காட்டை அடைந்து பல நாட்கள் மந்திரவாதியைத் தேடினர். அவன் கிடைக்கவே இல்லை. அவர்கள் சோர்ந்து போய்விட்டார்கள்.

கடைசியாக ஒரு தடவை முயன்று விடுவது, தேடிப் பார்ப்பது என்று தீர்மானித்துக் கொண்டு பத்துப்பேரும் பத்து திசைகளில் சென்று தேடினார்கள்.

முயற்சி யுடையார் இகழ்ச்சியடையார் என்பது முதுமொழி யல்லவா?

* * *

சிறையிலிருந்த சங்கீத வித்வானுடைய நிலையும் நந்தகுமாரனுடைய நிலையும் மிகவும் பரிதாபமாக இருந்தது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்ற வசனப்படியாகி விட்டது. கையில் மாய ஜாலங்களும் மகேந்திர ஜாலங்களும் புரியக் கூடிய மோதிரம் இருந்தது. இருந்து என்ன பயன்? அதைத் தான் பயன் படுத்தக்கூடிய மந்திரம் தெரியவில்லையே! கண்ணிருந்தும் குருடனாக இருப்பது போன்ற நிலைமையல்லவா இது? இதை நினைத்து நினைத்து இருவரும் வருத்தப்பட்டார்கள்? அதுவும் சங்கீத வித்வான் அடைந்த வருத்தம் கொஞ்சமல்ல! 'எவ்வளவோ சாமர்த்தியமாக மந்திர மோதிரத்தைக் கொண்டு வந்தேன். கடைசியில் ஏமாந்து போய்விட்டேனே! கொண்டு வந்தும் பயனில்லாமற் போய்விட்டதே' என்று அடிக்கடி வருத்தப்படுவார்.

சங்கீத வித்வான் வருத்தப்படுவதைக் காண நந்தகுமாரன் மனசு பொறுக்காது. "இதற்காக ஏன் வருத்தப் படுகிறீர்கள். சிறைக்கோ வந்தாகி விட்டது. இங்கேயாகிலும் நாம் ஒருவரை யொருவர் சந்திக்க முடிந்ததே! அதை நினைத்துச் சந்தோஷப் படுங்கள்!" என்று கூறுவான்.

"ஆமாம், நீ சொல்வது ரொம்ப சரி. மந்திர மோதிரமும், அதை உபயோகிக்கும் வித்தையும் தெரிந்து வந்து என்ன பயன், நீ கிடைக்கவில்லை என்றால்? உன்னைப் பார்க்க முடிந்ததே, அதுவே எனக்கு உண்மையில் ரொம்பவும் மகிழ்ச்சி யளிக்கிறது" என்று நந்தகுமாரன் கூறுவதற்கு ஆமோதிப்பார்.

ஒருநாள் நந்தகுமாரன், "குருவே, எனக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கிறீர்களா?" என்று கேட்டான்.

"வேறு எனக்கு என்ன வேலை? உனக்குச் சங்கீதம் சொல்லிக் கொடுப்பதில் நேரத்தைச் செலவழித்தாலாவது இந்தச் சிறைவாசக் கஷ்டமும், மற்ற வருத்தங்களும் சற்று மறக்கலாம்" என்று கூறினார் சங்கீத வித்வான்.

பிறகு சிறையில் சங்கீத வகுப்பு நடக்கலாயிற்று. நந்தகுமாரனுக்குச் சங்கீதம் சொல்லிக் கொடுப்பதில் வித்வான் அளவிலா ஆனந்தம் கண்டார். தான் கற்றுக் கொடுக்கும் சங்கதிகளை யெல்லாம் எவ்வளவு சரியாக நந்தகுமாரன் போடுகிறான் என்பதில் அவருக்கு அளவிலா மகிழ்ச்சி. அப்படியே சங்கீதத்தில் தான் ரொம்ப தூரம் முன்னேற முடிந்ததில், பல அற்புத விஷயங்களைக் கற்றுக் கொள்ள வாய்ப்பு நேர்ந்ததில் நந்தகுமாரனும் சந்தோஷப் பட்டான். இப்படியாக அவர்கள் சிறை வாழ்க்கை சுவர்க்க வாழ்க்கையாகவே மாறிவிட்டது.

ஒரு நாள் சிறைக்கூடத்தை நோக்கிக் காவலர்கள் பலர் வரும் காலடிச் சத்தமும், கைகளுக்கு இடப்பட்டுள்ள விலங்குகளின் சத்தமும் கேட்டன.

நந்தகுமாரன் சிறைக்குப் போடப்பட்டிருந்த இரும்புக் கம்பிகள் வழியாக எட்டிப் பார்த்தான். அப்படியே ஆச்சரியக் கடலில் மூழ்கி விட்டான்!

"குருவே, மந்திரவாதியையும் கைது செய்து அழைத்து வருகிறார்கள்!" என்று கூவினான் நந்தகுமாரன்.

"என்ன?" என்று அவரும் ஆச்சரியப் பட்டுக் கேட்டுக் கொண்டே இரும்புக் கம்பிகள் வழியாக எட்டிப் பார்த்தார். நந்தகுமாரன் கூறியது பொய் அல்ல என்பதை உணர்ந்தார்.

அத்துடன் அவர் உள்ளத்தில் ஒரு மகிழ்ச்சி பொங்கியது. இந்த மகிழ்ச்சிக்குக் காரணம் என்னவென்று ஒரு கணம் யோசித்தார்.

'ஆம், இனி மந்திர மோதிரத்தை உபயோகப் படுத்தும் மந்திரத்தை மந்திரவாதியிடமே கேட்டுக் கொள்ளலாம் அல்லவா?' என்ற எண்ணமே அந்த மகிழ்ச்சிக்குக் காரணம் என்பதை அறிந்தார்! இப்பொழுது அவர் மகிழ்ச்சி இன்னும் அதிகமாகி, நந்தகுமாரனைக் கட்டி அணைத்துக் கொண்டார்.

இப்படி இவர்கள் ஆனந்த சாகரத்தில் மூழ்கி யிருந்தபோது மந்திரவாதியையும் இவர்களிருந்த சிறைக் கூடத்தில் பிடித்துத் தள்ளவே, "வாருங்கள்! வாருங்கள்!" என்று வரவேற்றார் மந்திரவாதியைச் சங்கீத வித்வான்.

மந்திரவாதி சிறைக் கூடத்தில் இப்படி தன் நண்பரான சங்கீத வித்வானைச் சந்திக்கப் போகிறோம் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஆகவே, சங்கீத வித்வா

னைக் கண்டதும் அவன் அடைந்த சந்தோஷம் கொஞ்சமல்ல! "ஆ! சங்கீத வித்வானா? ஆகா! உங்களை இங்கே சந்திக்க நேர்ந்ததில் எனக்கு எவ்வளவு ஆனந்தம் தெரியுமா? உங்களைப் பிரிந்தபிறகு உங்கள் பாட்டைக் கேட்க முடியாமற் போனதிலிருந்து எனக்கு இருப்பே கொள்ளவில்லை! மனம் உங்கள் சங்கீதத்தைக் கேட்டபோது அடைந்த இன்பத்தையும் அமைதியையும் இழந்து விட்டது. மேலும், இன்னொரு துயரகரமான சம்பவமும் நிகழ்ந்து விட்டது .....?" என்று கூறி மந்திரவாதி மேலே தொடராமல் சற்றுத் தயங்கினான்.


"என்ன?" என்று நந்தகுமாரனும் சங்கீத வித்வானும் ஒரே குரலில் கேட்டனர்.

"என்னவென்று சொல்லுவேன், போங்கள்! நீங்கள் என்னிடமிருந்து மந்திர மோதிரத்தைப் பெற்றுக் கொண்டு போனதிலிருந்து பிரபாவின் மனசு நிம்மதியிழந்து விட்டது. என்னை, மந்திர மோதிரம் கொடுத்து விட்டதற்காக ரொம்பவும் கடிந்து கொண்டாள்! இப்படியே சோகம் ததும்பிய முகத்துடன் இரண்டு மூன்று நாள் அலைந்து கொண்டிருந்தாள். நான்காவது நாள் என்னிடம் சொல்லாமல் கொள்ளாமல் எங்கேயோ போய்விட்டாள். நான் காட்டில் எங்கெல்லாமோ தேடினேன்! 'பிரபா! பிரபா!' என்று கூவினேன்! அலறினேன்! பிரபா கிடைக்கவே இல்லை! என் மனம் உடைந்து விட்டது! கையில் மந்திர மோதிரமிருந்தாலாவது நான் பிரபாவைத் தேடிப் பிடித்திருப்பேன்! அந்த மந்திர மோதிரத்தை உங்களிடம் கொடுத்தான பிறகு என்னால் என்ன செய்ய முடியும்? ஒன்றும் கையாலாகாதவனாய், மனம் முறிந்து ஒரு பாறையில் உட்கார்ந்திருந்தேன்! அந்தச் சமயத்தில் என்னை இந்தக் காவலர்கள் கைது செய்து அழைத்து வந்தார்கள்! 'இனி சிறைக்கூடத்திலிருந்தால், என்ன? வெளியிலிருந்தான் என்ன?' என்று வெறுத்து வந்தேன். வந்த இடத்தில் உங்களைச் சந்திக்க நேர்ந்ததில் எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? பாடகரே, தயவு செய்து உங்களிடம் இருக்கும் அந்த மந்திர மோதிரத்தை என்னிடம் ஒரு முறை கொடுக்கிறீரா? என் பிரபாவைத் தேடிப் பார்த்துவிட்டு வருகிறேன்!" என்றான் மந்திரவாதி.

"அதுதான் முடியாது" என்று கண்டிப்பான குரலில் கூறினார் சங்கீத வித்வான்.

"ஏன்?" என்று கேட்டான் மந்திரவாதி.

"ஒருதரம் தானம் கொடுத்து விட்டதை, மறுபடியும் கேட்பது நியாயமல்ல!" என்றார் சங்கீத வித்வான். (தொடரும்)



"மைதிலி! என்மீது ஏன் உனக்கு இவ்வளவு வெறுப்பு? அதிக விலை கொடுத்து ஆசையோடு வாங்கிக் கொண்டு வந்தேன்; இந்தப் பச்சைக் கல் வளைகளை உன் பொன்னிறக் கைகளில் போட்டுப் பார்க்கலாமென்று. அதை அலட்சியமாக வாங்கிக் கீழே வைத்துவிட்டாய்! என்மீது உனக்கு ஏன் இப்படிப் பராமுகம்?'' என்று ஆதுரத்துடன் வினவினான் ராகவன்.

"என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்! கொஞ்ச நேரம் நிம்மதியாக இருக்க விடுங்கள்'' என்று வெடுக்கென்று மொழிந்தாள் மைதிலி.

அவளுடைய முகத்தை அன்போடு பிடிக்கப் போனான் ராகவன். 'சடக்'கென்று பிடித்துத் தள்ளினாள் கணவனின் கரத்தை மைதிலி. அவனும் மனிதன்தானே? அவனுக்கு மாத்திரம் ரோஷம் கிடையாதா? விடுவிடுவென்று வெளியேறினான் ராகவன்.

மைதிலி மேஜைமேலிருந்த அந்த ஜோடிப் பச்சைக் கல் வளைகளையே பார்த்துக் கொண்டிருந்தாள். மின்சார விளக்கின் பிரகாசத்தால் பளபளக்கும் அந்தக் கரும் பச்சை நிறம் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. அந்த வளையல்களை அணிந்துகொள்ள வேண்டும் என்னும் துடிதுடிப்பு இருந்தும் அதை வாங்கிவந்த கணவன்மீதுள்ள வெறுப்பின் சாயல் அவனால் வாங்கி வரப்பட்ட வளைகளின் மீதும் ஏற்பட்டது.

இந்தப் புருஷர்களே இப்படித்தான். சுயநலக்காரப் புலிகள். தன் சுகத்திற்காகப் பிறரை வஞ்சிக்கும் சுபாவமுள்ளவர்கள் என்று மனத்துக்குள் எண்ணிக் கொதித்தாள். தன்னுடைய இன்பத்திற்காக இன்னொரு பெண்ணைப் பலி கொடுக்கிறோமே என்கிற எண்ணம் கொஞ்சம் கூடக் கிடையாது ராகவனுக்கு என்று எண்ணினாள் மைதிலி. அதை நினைக்க நினைக்க அவள் இதயத் துடிப்பின் வேகம் அதிகமாகிக் கொண்டு வந்தது. கண்களில் நீர் திரையிட்டது.

'ஆண்களைக் கண்ணால் கண்டதுமே பெண்களைக் கொண்டுபோய் அவர்கள் கால்களில் தள்ளி விடுகிறார்களே இந்தப் பெற்றோர்கள்! இவ்வளவு காலம் வளர்த்து ஆளாக்கியவர்கள் இன்னும் கொஞ்சம் பொறுத்து வரனின் குணங்களைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொண்ட பிறகு மணம் செய்வித்தால் என்னவாம்? அவர்களிடம் இருக்கிற சூதுவாதுகளைப் பற்றிக் கூடச் சரியாக விசாரிப்பதில்லை. வரதட்சிணை இல்லாமல் ஏதேனும் ஒரு வரன் கிடைத்து விட்டாலோ பிறகு கேட்கவே வேண்டியதில்லை. முன் பின் யோசிக்காமல் பெண்களை அவர்களுக்கு அடிமைப் படுத்தி விடுகிறார்கள். என்ன விந்தை யிது!' என்று மனந் துடித்தாள் மைதிலி.

ராகவனை மணக்கப் போகிறோம் என்று அறிந்ததும் அவள் அடைந்த சந்தோஷத்திற்கு எல்லையே கிடையாது.

பார்ப்பவர் வியந்து, விரும்பும் லட்சணத்துடன், கம்பீரமாயிருந்த அவனுடைய வசீகரத் தோற்றம் அவளைப் பரமானந்தத்தில் ஆழ்த்தியது. அழகும், அந்தஸ்தும் நிரம்பிய ராகவனுக்கு மனைவியாவதில் மைதிலிக்கு மிகவும் பெருமையாகத்தான் இருந்தது. அவனுடைய தாயாருக்கு ராகவன் ஒரே மகன்.

மைதிலியின் தகப்பனார் சொற்ப வருவாயுள்ள ஒரு உத்யோகஸ்தர். அவருக்கு ஐசுவரியத்திற்குப் பதிலாக ஐந்து பெண்களைக் கொடுத்திருந்தார் கடவுள். எப்படியோ சிரமப்பட்டு நான்கு பெண்களைக் கலியாணம் செய்து கொடுத்து விட்டார். ஐந்தாவது பெண்தான் மைதிலி! அவர் இப்போது 'ரிடயர்' ஆகிவிட்டபடியால் சொற்ப வருவாயும் அற்பமாகி விட்டது. இந்த நிலையில் மைதிலிக்குக் கலியாணம் செய்வதெப்படி?

மைதிலியின் தாயார் மட்டும் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பாள், 'அஞ்சாவது பெண் கெஞ்சினால்கூடக் கிடைக்கமாட்டாள். மைதிலி ஐந்தாவது பெண். தவிர அவளுடைய அழகுக்கும் புத்திசாலித் தனத்துக்கும் அவளை அப்படியே ஒரு பணக்கார வீட்டுப் பையன் கொத்திக்கொண்டு போய் விடுவான்' என்று. அவள் அப்படிக் கூறும் போதெல்லாம் மைதிலி தாயாரின் பேராசையைக் கண்டு மனதுக்குள் சிரித்துக் கொள்வது வழக்கம். ஆனால் அவள் கூறியதும் பொய்யாகவில்லை. ஒருநாள் 'திடும்'மென்று தரகர் ரங்கசாமி, "உங்க மைதிலி அதிர்ஷ்டக்காரக் குட்டி என்று எனக்கு அப்பொழுதே தெரியும். அவளுக்குப் போய் இனியான் வரன் பார்க்கச் சொன்னீர்களே! கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும் என்பார்களே, அதுபோலல்லவா நடந்திருக்கிறது!'' என்று சந்தோஷ மிகுதியால் பொழிந்து தள்ளிக்கொண்டே வந்தார்.

"சொல்வதைச் சற்று விளங்கும்படியாகத் தான் சொல்லுங்களேன்! அப்படியென்ன அதிர்ஷ்டம் இடந் தெரியாமல் தவறிப் போய் என் வீட்டிற்கு வந்து விட்டது?'' என்று அலட்சியமாகக் கேட்டார் மைதிலியின் தகப்பனார் கிருஷ்ணசாமி அய்யர்.

"அதிர்ஷ்டம் என்றால் சாமான்ய அதிர்ஷ்டமா? கோடி வீட்டு மங்களத்தம்மாவின் அருமைப் பிள்ளை ராகவன் உங்களுடைய மாப்பிள்ளையாக வரப் போகிறான், ஸார்!''

"என்ன ஐயா, உளறுகிறீர்கள்? மங்களத்தம்மாவின் அந்தஸ்து என்ன? அதிகாரமென்ன? அவர்கள் வந்து அஷ்ட தரித்திரனுன என்னுடன் சம்பந்தம் செய்து கொள்ள விரும்புவார்களா? உங்களுக்கென்ன ஏதாவது மூளை கலங்கி விட்டதா? இல்லாவிட்டால் என்னைச் சும்மா பரிகாசம் பண்ணுகிறீர்களா?'' என்று கேட்டார் கிருஷ்ணசாமி.

"சரி! நான் இப்படியெல்லாம் சொன்னல் உங்களுக்குப் புரியாது. புரியும்படியாகச் சொல்லுகிறேன். மங்களத்தம்மாவின் ஏக புதல்வனன ராகவன் உங்களுடைய மைதிலியைக் கண்டு, அவளுடைய அழகில் சொக்கிப் போய் விட்டான். அதன் விளைவுதான் இன்று மைதிலியைக் கலியாணம் செய்து கொள்ளும் அளவுக்கு வந்து விட்டது. அவர்களுக்குச் சீர்வகைகளோ, எதிர் ஜாமீனே வேண்டாமாம். அவர்களே கலியாணச் செலவையும் ஏற்றுக் கொள்ளுகிருர்களாம். ஜாதகம் ரொம்பப் பொருத்தமாக இருக்கிறது. முகூர்த்தம் எப்போது வைத்துக் கொள்ளலாம் என்று கேட்டுக்கொண்டு வரும்படி என்னை அனுப்பினர் மங்களத்தம்மாள். என்ன சொல்லுகிறீர்கள் இப்போது?'' என்று கூறி விட்டு மறுமொழி எதிர்பார்த்தார் தரகர்.

"என்ன! நிஜமாகவா சொல்லுகிறீர்கள்?'' என்று திகைப்புடன் வினவிய கிருஷ்ணசாமியின் வாய் ஆச்சரியத்தால், மூடாமல் திறந்தபடியே இருந்தது.



இவர்களுடைய சம்பாஷணைகளையெல்லாம் கேட்டுக்கொண்டு புஸ்தகமொன்றில் ஆழ்ந்திருந்த மைதிலியும் மிகவும் ஆச்சரியமடைந்தாள். தான் கேட்பது கனவா நினைவா என்று ஐயமுற்ருள். பிறகு ஒருவாறு மனத்தெளிவடைந்து வியப்பெய்தினள். 'என்ன ஆச்சரியம்! ராகவன் எவ்வளவு பெரிய பணக்காரர்? அவருக்குப் பெரிய பெரிய இடங்களிலிருந்தெல்லாம் பெண்கள் வருமே! போயும் போயும் பரம ஏழையான என்னை விரும்பக் காரணமென்ன? ஒருகால் நாம் நினைத்தது போல் நம்மீது, நம் அழகின் மீது காதல் ஏற்பட்டிருக்குமோ! அப்படியானல் நாம் பெரிய அதிர்ஷ்டசாலியாகத்தான் இருக்கவேண்டும். கோடிவீட்டு மருமகளாவதென்றல் எல்லோருக்கும் சாமான்யமாய்க் கிடைக்கக் கூடியதா? அவர்களுக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது! அடேயப்பா, அவர்கள் எங்கே, நாம் எங்கே?' என்று தாங்க முடியாத வியப்பில் ஆழ்ந்தாள்.

மைதிலி பள்ளிக்கூடத்துக்குப் போகும் போதும் வரும்போதும் ராகவன் தன் வீட்டு வாசற் குறட்டில் நின்றுகொண்டு காட்சியளிக்கத் தவறமாட்டான். கொஞ்ச தூரத்தில் மைதிலியைக் கண்டதுமே அவனுடைய முகம் திடீரென்று விரிந்து கரைகாணு ஆனந்தத்தால் மலர்ந்து விடும். ஆர்வமிகுந்த அவனுடைய பார்வையில் ததும்பி நிற்கும் பிரேமை மைதிலியை ஒரு கணம் தடுமாறச் செய்து விடும். அது பருவத்தின் கொடுமைதான். ஆனல் மறு நிமிஷமே மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு விடுவாள். 'அவர் மலை, நாம் மடு! நம்மிருவருக்கும் இடையில் அந்தஸ்து என்ற இரும்புத் திரை தடுத்து நிற்கிறது. பருவகால உணர்ச்சியின் வசப்பட்டு நாம் நிலை தடுமாறி விடக் கூடாது. இது உனக்குத் தகுதியற்றது. உன் சக்திக்கு மேற்பட்டது. ஈடேற முடியாத ஆசை! வரம்பு மீறுவதுதான் கடைசியில் மிஞ்சும். மனமே அடங்கியிரு' என்று தன் மனத்துக்கு அறிவுறுத்துவாள். பின்னும், பெற்றோர்கள் தேடித் தரும் கணவனையே காதலித்து அன்பு செலுத்துவதே நம்மைப்போன்ற பெண்களுக்கழகு. கண்டபடி மனத்தைச் செல்ல விட்டு விட்டு மனத்தைக் கஷ்டப் படுத்திக் கொண்டு பிறகு அவதிப்படுவதும், இதயம் களங்கமுறுவதும் நம் பண்புக்கு ஏற்றதன்று என்று இதயத்தின் வாயிலில் வந்து நிற்கும். ராகவனின் எழில் உருவத்தை மிகச் சிரமப்பட்டு அகற்றி விட்டு, விடுவிடுவென்று வேகமாய் நடந்து ராகவனின் வீட்டை ஒரு நொடியில் கடந்து சென்று விடுவதும், மைதிலியின் தினசரி வழக்கமாகி விட்டது.

போன வருஷம்தான் எஸ். எஸ். எல். ஸி.யைப் படித்து முடித்தாள் மைதிலி. அதற்குப் பிறகு வெள்ளிக்கிழமை தோறும் தன் தாயாருடன் கோவிலுக்குச் சென்றுவருவாள். அப்படித்தான் போன வெள்ளிக்கிழமையும் தாயாருடன் கோவிலுக்குப் போயிருந்தாள்.

கிண்ணத்திலிருந்த எண்ணெயைத் தீபத்தில் வார்த்து விட்டுக் கிண்ணத்தைக் கீழே வைத்தாள். அப்போது சன்னிதியில் அதிகக் கும்பலில்லை. சுவாமிக்குக் கற்பூர ஆரத்தி ஆயிற்று. பணிவோடு சுவாமியின் முன் இரு கரங்களையும் குவித்துத் தலைவணங்கினள். ஒரு நிமிஷம்தான். கீழே வைத்திருந்த வெண்கலக் கிண்ணத்தைக் கையிலெடுத்துக் கொண்டு ஓடினன் ஒரு காலிப் பயல். திடுக்கிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்துச் செய்வதறியாது விழித்தாள் மைதிலி! அவளுடைய

தாயார் பிரதட்சிணத்திற்குப் போய் விட்டாள். அப்போது கொஞ்சமும் எதிர்பாராத வகையில் அங்கு வந்து கொண்டிருந்த ராகவன் அந்தக் காலிப் பயலை வழி மறித்து, அவன் கையிலிருந்த கிண்ணத்தைப் பிடுங்கிக் கொண்டு, அவனைக் கண்டித்து அனுப்பி விட்டுக் கிண்ணத்துடன் சுவாமி சன்னிதிக்குள் நுழைந்து, கிண்ணத்தின் சொந்தக்காரர் யாரா யிருக்கக் கூடும் என்று நான்குபுறமும் கூர்ந்து நோக்கினான்.

அவனையே கவனித்துக் கொண்டிருந்த மைதிலி, கிண்ணத்தை அவன் கையில் கண்டதும் தன்னையும் அறியாமல் தன் கையை நீட்டி அந்தக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டாள். வெட்கத்தால் அவள் அழகு முகம் குங்குமத்தைப் போல் சிவக்கவே தலையைக் கவிழ்ந்து கொண்டாள். பெண்மைக்குரிய நாணம் அவளை கவ்விக் கொண்டது.



“உன்னுடையது தானா, மைதிலி!” என்று ஆச்சரியத்துடன் வினவிய ராகவன் ஒரு விநாடி அவளை அப்படியே விழுங்கி விடுவது போல் பார்த்து விட்டு அவ்விடத்தை விட்டகன்றான்.

மைதிலி நாணம் நீங்கித் தலையை நிமிர்த்தியபோது அவளுடைய தாயார், “என்னடி மைதிலி! நீ பிரதட்சணத்திற்கு வருவாய் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். இங்கே, என்ன செய்கிறாய்?” என்று கேட்கவே, வாய் பேசாமல் தாயைப் பின்தொடர்ந்தாள். அந்த நினைவுகள் இப்போது தோன்றி மைதிலியின் உள்ளத்தைப் புல்லரிக்கச் செய்தது. அவளை இன்ப வாரிதியில் ஆழ்த்திய அந்த இன்ப நிகழ்ச்சியைச் சிந்திக்கச் சிந்திக்கத் தேனாக இனித்தது அந்தச் சம்பவம். அந்த ஆனந்த மயமான மோன நிலையிலேயே தன்னை மறந்து லயித்துப் போய் விட்டாள் மைதிலி. பெண்ணுள்ளத்தின் இயல்பே இது தானே?

பிறகு கேட்கவும் வேண்டுமா? முகூர்த்தம் வைக்கப் பட்டது. கலியாணத் தன்று மத்தியானம் உடம்பு மிகவும் களைப்பாக இருந்த படியால் கூடத்துப் புறமாக இருந்த அறையில் படுத்துக் கொண்டிருந்தாள் மைதிலி. அப்போது பக்கத்து வீட்டிலிருந்து யாரோ பேசும் குரல் கேட்டது. அதில் தன் பெயர் அடிபடவே அதை உற்றுக் கேட்டாள்.

“என்னடி! பங்கஜம், நம்ம மைதிலிக்கு வந்திருக்கும் அதிர்ஷ்டத்தைப் பாரேன். கோடி வீட்டில் வாழ்க்கைப் படும் படி நேர்ந்ததே! அதிர்ஷ்டம் என்றால் இப்படி வர வேண்டும்?!” என்றாள் பட்டு மாமி.

“அதிருஷ்ட மொன்று மில்லை. ஏழையென்று தெரிந்து ஏமாற்றி விட்டார்கள் பிள்ளை வீட்டுக்காரர்கள். உனக்கெங்கே தெரியப் போகிறது, அந்த ரகசியம்!” என்று பூடகமாகக் கூறினாள் பங்கஜத்து மாமி.

“அதென்னடி ரகசியம்? சொல்லேன் பார்க்கலாம்” என்று ஆவலுடன் வினவினாள் பட்டு மாமி.

“அதுவா? அந்தப் பிள்ளைக்குக் கடுமையான ‘களத்ரதோஷம்’. வந்த வரன்களெல்லாம் தட்டிப்போய் விட்டது. இந்த மைதிலிக்கு வந்தது ஆபத்து! அவளுடைய அப்பாவும் ரொம்ப சிரமதசையில் இருப்பதால் ஒன்றும் யோசிக்காமல் கலியாணத்தை முடித்து விட்டார். மூன்று வருஷத்திற்கு மேல் மைதிலி உயிரோடிருக்க மாட்டாள். நீ வேண்டுமானால் பார்த்துக் கொண்டேயிரு” என்று கூறினாள் பங்கஜ மாமி.

“உனக்கெப்படி இந்த ரகசியம் தெரிந்தது?” என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் பட்டு மாமி.

“ரகசியம் என்ன ரகசியம்! எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான், இது! எங்க அக்கா பெண்ணுக்கு ராகவனின் ஜாதகத்தை வாங்கிப் பார்த்தார்கள், என் நாத்தனாரின் பெண்ணுக்கும் பார்த்தார்கள். தோஷம் ரொம்பக் கடுமையாக இருக்கிறது என்று தான் அவர்கள் இந்த வரன் வேண்டாமென்று விட்டு விட்டார்கள். இல்லா விட்டால் இந்த மைதிலிக்குக் கிடைக்கக் கூடிய வரனா? இது?” என்றாள் பங்கஜ மாமி.

இரண்டு மாமிகளும் பேசிக் கொள்வதைக் கேட்டதும் மைதிலிக்கு உலகமே சுழல்வது போலிருந்தது. மனம் பொருமியது.

‘அப்படியா சங்கதி! சுயநலந்தானா? அட ஈசுவரா! அனாவசியமாக தன்னலத்தின் பொருட்டு ஒரு பெண் பேதையைச் சாக அடிப்பதில் அவர்கள் அடையும் நன்மை தான் என்ன! இத்தகைய கொடிய இதயம் படைத்தவர்களையா நாம் இதுகாறும் பெருந்தன்மை மிகுந்தவர்கள் என்று எண்ணிப் பெருமைப் பட்டோம்! என்ன வஞ்சனையிது! இனி நான் எங்கிருந்தாலும் அவருடைய கிரகபலன்கள் என்னை பாதிக்காமலிராதே! என்ன செய்வது’ என்று தவித்தாள் மைதிலி. கிடைப்பதற் கரிய கணவனைப் பெற்று விட்டோம் என்றெண்ணிப் பெருமிதங் கொண்ட மைதிலி அவனுடைய சுய நலம் மிகுந்த வஞ்சனைச் செய்கையை நினைத்து அவன் மீது வெறுப்புக் கொண்டாள். சுந்தர புருஷனை மணந்து விட்டோம் என்று கர்வத்

தால் பூரித்துப் போயிருந்த மைதிலி அந்த அழகுக்குள் மறைந்து நின்ற ஆலகால விஷத்தைக் கண்டதும், தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அந்த அழகு உருவத்தையே வெறுத்து உதாசீனம் செய்யத் தீர்மானித்தாள்.

மைதிலி நினைத்தது போலவே எல்லாம் நடந்தது. ராகவன் அவள் மீது அன்பை அள்ளிச் சொரிந்தான். 'மைதிலி! மைதிலி!' என்று அவளையே சுற்றிச் சுற்றி வந்தான். வாசலில் காரை வைத்துக் கொண்டு "சினிமாவுக்கு வருகிறாயா? கோவிலுக்குப் போகலாமா?" என்று கெஞ்சுவான்.

மைதிலிக்கு, கணவனின் அத்தகைய கெஞ்சல்களுக்கு முகம் சுளிப்பதே ஒரு விளையாட்டாக இருந்து வந்தது. அவனுடைய அளவு கடந்த ஆசைகளுக்கு உடன் படாமலும், அவனிடம் முகமலர்ச்சியுடன் நடந்து கொள்ளாமலும், அவனுடைய இதயக் காதலின் வேகத்தை உணர்ந்தும், அதை அலட்சியப் படுத்தியும் தன் வெறுப்பை அவனுக்குக் காட்டி வந்தாள். இந்த வெறுப்பின் காரணமாகத் தன்னுடைய இளமையும் இன்பமும் வீணாவதும் அவளுக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை.

அவர்களைப் பார்ப்பவர்களுக்கு அவர்கள் அன்யோன்ய மான தம்பதிகளாகத்தான் தோன்றினார்கள். ஆனால் அவர்கள் உள்ளம் ஒன்றுக் கொன்று வெகு தூரத்தில் நின்று கொண்டிருந்தது. ராகவனின் உள்ளத்தில்



டாக்டர்:—உங்களுக்கு வந்திருக்கும் வியாதியை நன்றாய்ப் பரிசோதித்துப் பார்த்ததில், பற்களில் இருக்கும் கெடுதல் தான் நோய்க்குக் காரணம் என்று தெரிகிறது. உங்கள் பற்களைக் காட்டுங்கள், பார்க்கலாம்!

நோயாளி:—ஆகா! பல்லை எங்கே கழற்றி வைக்கலாம்?

பொங்கி யெழுந்த வேட்கையைத் தன்னுடைய உதாசீனம் என்னும் நெருப்பால் நெருங்க விடாமல் தடுத்து வந்தாள் மைதிலி.

அவர் எந்த ஒரு ஆசைக்காக என்னைப் பலி கொள்ள நினைத்தாரோ அந்த ஆசையை அவரை அனுபவிக்க விடாமல் தடுத்துக் கொள்வது என்ற பழிவாங்கும் உணர்ச்சியை மேற்கொண்டாள். பெண்கள் என்றால் அதுவும் ஏழைப் பெண்ணென்றால் இவ்வளவு அலட்சியமா என்று உள்ளம் பதறினாள். ஒரு ஆணின் உயிருக்கு இருக்கும் மதிப்பு ஒரு பெண்ணின் உயிருக்குக் கிடையாதா என்று உள்ளங் கொதித்தாள் மைதிலி.

அன்று அவன் அவளுடைய கைகளில் அணிவித்துப் பார்த்து மகிழலா மென்று வாங்கிக் கொண்டு வந்த அன்பின் காணிக்கையான பச்சைக்கல் வளையல்கள் கவனிப் பாரற்று மேஜையின் மேலேயே கிடந்தது. ராகவன் அங்கிருந்து வெளியே போய் வெகு நேரம் ஆகிவிட்டது.

சிந்தனையில் சிக்கிச் சுழன்று கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரிய வில்லை. எழுந்திருந்து அந்த ஜோடிப் பச்சைக்கல் வளையல்களை அதன் மதிப்புத் தெரிந்திருந்தும் அதை மதிக்காமல் வெகு அலட்சியமாக எதிர்ப்புறச் சுவரில் இருந்த ஒரு ஆணியில் மாட்டி விட்டுச் சாளரத் தருகில் வந்து நின்றாள் மைதிலி. அவள் கண்களில் கண்ணீர் நிரம்பி வழிந்தது. பூந்தென்றல் மெல்ல மெல்ல அறையினுள் தவழ்ந்து வந்து கொண்டிருந்தது. தோட்டத்தில் மலர்ந்திருந்த மலர்களின் மணம் கம்மென்று வீசியது. தன் கண்களைப் புடவைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டாள் மைதிலி.

"மைதிலி! எங்கே அந்த வளையல்கள்? கொடு இப்படி! திருப்பிக் கொண்டு போய்க் கடையிலேயே கொடுத்து விட்டு வந்து விடுகிறேன். அன்பை அலட்சியம் செய்யும் உனக்கு அந்த வளையல்கள் தான் எதற்கு?" என்று கேட்டுக் கொண்டே வந்த ராகவனின் குரலில் இருந்த கடுமையையும் முகத்திலிருந்த கோபக் குறியையும் கண்டு திடுக்கிட்டுப் பயந்தாள் மைதிலி. உடனே சினமும் ஏற்பட்டது!

"கொல்லுவதற்காகவே மணந்து கொண்ட மனைவிக்கு ஆபரணத்தினால் வேறு அழகு செய்து பார்க்க வேண்டுமா?" என்று கொடுமையாகக் கேட்டாள் மைதிலி.

"என்ன சொல்கிறாய், மைதிலி! கொல்லுவதற்காக மணந்தேனா? ஏதாவது கனவு கண்டாயா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் ராகவன்.

"ஐயோ! பாவம் ஒன்றுமே தெரியாது. கடுமையான 'களத்திர தோஷத்தை' மறைத்து ஒரு பெண்ணை வஞ்சகமாக மணந்து கொள்ளத்தான் தெரியுமோ?" என்று கடுங் கோபத்துடன் நெருப்பைக் கக்குவது போல் வார்த்தைகளைக் கக்கினாள் மைதிலி!


பணத்தை
மிச்சப்
படுத்துங்கள்
சிரமத்தைக்
குறைத்துக்
கொள்ளுங்கள்
துணிகளை அதிக
நாட்கள் நீடிக்கச்
செய்யுங்கள்
501 ஸோப்புகள்
A TATA PRODUCT
எல்லா வீட்டு உபயோகங்களுக்கும்
டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

"ஓகோ! அந்த வினை விளைவித்த பயிர் தானா இந்த வெறுப்பும், உதாசீனமும்? ஐயோ! மைதிலி! ஸர்வதக்தியை நம்பி உன் வாழ்வைப் பாழ் படுத்திக் கொள்ள இருந்தாயே? இந்தச் சந்தேகத்தைக் கலியாணம் ஆனவுடனேயே என்னைக் கேட்டிருக்கக் கூடாதா?" என்றான் ராகவன் மிகவும் சாவதானமாக.

"என்ன சொல்லுகிறீர்கள்?" என்று ஒன்றும் புரியாமல் கேட்டாள் மைதிலி.

"ஆமாம், மைதிலி! உன் மீது ஏற்பட்ட கரை காணாக் காதலினால், உன்னையே மணந்து கொள்ள வேண்டும் என்ற அளவு கடந்த ஆசையினால் நான் செய்த காரியம் தான், என் ஜாதகம் களத்திர தோஷமாக மாறியது. அம்மாவின் பெரிய இடத்துப் பெண் வர வேண்டும், நிறைய சீர் வகையறுக்கள் வீடு நிரம்ப வேண்டும் என்ற பழங்கால ஆசையைக் கிள்ளி எறிய நான் செய்த ஏற்பாடுதான் என்னுடைய களத்திர தோஷம். மைதிலி! உங்கப்பாவிடம் நான் கொடுத்தது என்னுடைய சரியான ஜாதகம் தான். உன்னைச் சிறு வயது முதலாகப் பார்த்து உன் மீது பிரேமையும் கொண்டு விட்டேன். உன் மீது எனக்குள்ள காதலின் ஆழத்தைச் சொல்லி முடியாது. உன்னை நான் மணந்து கொள்ளத் தடையாக இருந்தது ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு தான். அம்மாவுக்குப் பணக்கார இடத்திலிருந்து மருமகள் வரவேண்டுமென்றிருப்பது சகஜமே! ஆனால் எனக்கு உன்னையன்றி இன்னொரு பெண்ணை மணந்து கொள்வதில் கொஞ்சம் கூட விருப்பமில்லை. ஆகையால் என் மனோரதம் நிறைவேறுவதற்கும், அம்மாவின் மனத்துக்கும் வருத்தம் ஏற்படாமலிருப்பதற்கும், சோதிடரின் யோசனையின் மேல், என் உண்மையான ஜாதகத்தை மாற்றிக் களத்திர தோஷமாக எழுதி யார் வந்து கேட்டாலும் அதையே கொடுத்து வந்தோம். எல்லோரும் களத்திர தோஷ ஜாதகம் என்று நிராகரித்து விட்டார்கள். அம்மாவுக்கு ரொம்பக் கவலையாகப் போய் விட்டது. நம் குடும்ப விருத்திக்கும், சொத்துக்களின் வாரிசுக்கும் ஒரு குழந்தை வேண்டுமே, இப்படி இவனுக்குக் கல்யாணமே ஆக மாட்டேன் என்கிறதே என்று மிகவும் வருத்தப்பட ஆரம்பித்தாள்.

"அதற்கும் நாகர் ரங்கசாமியே ஒரு யோசனை கூறினார். அதைக் கூறும்படி செய்ததும் நானே! அவர் யோசனையின் படியே உன்னை மணப் பெண்ணாகத் தேர்ந்தெடுத்தாள் அம்மா! உன் தகப்பனாரிடம் கொடுத்தது உண்மையான ஜாதகத்தின் நகலானபடியால் இரண்டு ஜாதகமும் நன்றாகப் பொருந்தியிருந்தது. என் ஆசையும் நிறைவேறியது.

"நான் என்னுடைய களத்திர தோஷத்தைப் பற்றி முன்பே உனக்குத் தெரிவித்திருக்க வேண்டும்!" என்றான் ராகவன்.

மைதிலி ஓடிப்போய் ஆணியில் மாட்டியிருந்த பச்சைக் கல் வளையல்களை எடுத்துத் தன் கைகளில் போட்டுக் கொண்டு, கணவனருகில் வந்து, "என்னை மன்னித்து விடுங்கள். உங்களை நானும் இதய பூர்வமாகக் காதலித்துத்தான் வந்தேன். உங்களுக்கு என் மீது இத்தகைய காதல் இருக்கிறது என்று தெரிந்து கொள்ளாமல், உங்கள் அன்புள்ளத்தைப் புண்படுத்தி விட்டேன். என்னை மன்னிக்க வேண்டும்" என்று தழதழத்த குரலில் கூறி ராகவனின் கரங்களை அன்போடு பற்றித் தன் கண்களில் ஒற்றிக் கொண்டாள் மைதிலி. உணர்ச்சிப் பெருக்கால் அவளுடைய விழிகளில் கண்ணீர் துளித்தது.

மாட்டுப் பெண்ணின் தலையில் சூட்டுவதற்காகக் கையில் மல்லிகைப் பூவை எடுத்துக் கொண்டு அந்தச் சமயம் அங்கே வந்தாள் ராகவனின் அருமைத் தாயார். மாமியார் வாஞ்சையோடு தலையில் வைத்து விட்டுச் சென்ற மலரின் மணமும், கணவனின் வளைகளும் 'ராணி நாம்தான்' என்ற உள்ளத்தின் பூரிப்புமாகச் சேர்ந்து மைதிலியை இன்ப லோகத்திற்கு இட்டுச் சென்றது. உள்ளம் நிறைந்த பெருமிதத்துடன் கணவனைப் பார்த்துப் புன்னகை பூத்தாள். ராகவன் மைதிலியின் தங்கக் கைகளில் மின்னிக் கொண்டிருந்த பச்சைக் கல் வளையல்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.



பையன் (ரயிலிலிருந்து பெட்டியுடன் இறங்கி வருபவரைப் பார்த்து):—ஸார், ஸார்! பெட்டியை இப்படிக் கொடுங்கள், ஸார்!

அவர்:—வேண்டாம், போ.

பையன்:—உங்களுக்கு இஷ்டமான கூலியைக் கொடுங்கள், ஸார். பெட்டியை இப்படிக் கொடுங்கள், ஸார்!

அவர் (கோபத்துடன்): — பெட்டியை எங்கேயும் எடுத்துக் கொண்டு போக வேண்டாம், போ!

பையன் (அதிசயத்துடன்):— நீங்கள் மாத்திரம் அதை எங்கே எடுத்துக் கொண்டு போகிறீர்கள்?

எங்கு பார்த்தாலும் ஏரிகள்!

ஜெயமணி

பால்டிக் தேசங்களான லிதுவானியாவையும் எஸ்டோனியாவையும் காட்டிலும் லட்வியாதான் பெரியது. கிறிஸ்து சகாப்தத்துக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கூட லட்வியாவில் ஜனங்கள் வசித்துக் கொண்டிருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அங்கிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ள பழைய கால நாணயங்களிலிருந்து, அத்தேச மக்கள் ஒரு காலத்தில் பல ஐரோப்பிய நாடுகளுடன் நட்பும் நெருங்கிய வர்த்தகத் தொடர்பும் வைத்துக் கொண்டிருந்தவர் என்று தெரிகிறது.

உலகிலே கத்தி முனையில் பலாத்காரமாகக் கிறிஸ்துவ மதத்துக்கு மாற்றப் பட்ட ஜனங்களின் கோஷ்டியில் லட்விய மக்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

கிறிஸ்துவ சகாப்தம் ஆரம்பமான ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு லட்வியாவில் ஜெர்மனியின் ஆதிக்கம் ஏற்பட்டது. பின்னர் 1560—ம் வருஷம் வரையில் அத்தேசம் ஜெர்மானியரின் ஆதிக்கத்திலேயே இருந்து வந்தது. அதன் பின் 1621-ல் அந்த நாட்டை ஸ்வீடன் கைப் பற்றிக் கொண்டது. பிறகு 1710—ம் வருஷம் அந்த நாடு ருஷ்யாவின் வசமாகும்படி நேர்ந்தது.

லட்வியா ருஷ்யாவின் ஆதிக்கத்தில் இருந்த போதுதான் ருஷ்யச்சக்கரவர்த்தியான பீட்டர் (Peter the Great) பேரழகியான ஒரு லட்வியப் பெண்ணை மணம் செய்து கொண்டார். அவள்தான் சரித்திரப் பிரசித்தி பெற்ற முதலாவது காதரைன். பீட்டர் சக்கரவர்த்தி காலமான பிறகு 1765 லிருந்து 1767—ம் வரையில் அவளே லட்வியா தேசத்து மக்களை ஆட்சி புரிந்து வந்தாள்.



லட்வியா தேசத்துப் பெண்

* * *

முதலாவது உலக யுத்தத்தின் போது ருஷ்யாவில் போல்ஷிவிக் புரட்சி ஏற்பட்டது அல்லவா? அதுவரையில் லட்வியா ருஷ்யாவின் ஆட்சியிலேயே இருந்து வந்தது.

ஆனால் 1918-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் லட்வியர்கள் தங்கள் நாட்டைக் குடியரசு என்று பிரகடனம் செய்தனர். தங்களுடைய குடியரசையும் சுதந்திரத்தையும் நிலை நிறுத்திக் கொள்வதற்காக அவர்கள் இரண்டு வருஷ காலம் வரையில் ஜெர்மானியர்களையும் போல்ஷிவிக்கர்களையும் ஏக காலத்தில் எதிர்த்துப் போராடி வந்தார்கள்.

குடியரசாக விளங்கி வந்த லட்வியாவுக்கும் ஜெர்மனிக்கும் 1939-ல் அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது.

அதே வருஷத்தில் லட்வியா ருஷ்யாவுடனும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. அந்த ஒப்பந்தத்தின்படி லட்வியாவைச் சேர்ந்த மூன்று துறைமுகங்களைக் கடற்படைத் தளமாக உபயோகித்துக் கொள்ள ருஷ்யாவுக்கு உரிமை கிடைத்தது.

எனினும் 1940-ம் வருஷத்தில் லட்வியா ருஷ்யக் குடியரசுகளில் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது, மூன்று வருஷ காலம் வரையில் ஜெர்மன் துருப்புகள் லட்வியாவை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. பிறகு ருஷ்யப் படைகள் ஜெர்மானியர்களை லட்வியாவிலிருந்து விரட்டி விட்டன.

* * *

பால்டிக் நாடுகளான லிதுவானியாவுக்கும் எஸ்டோனியாவுக்கும் மத்தியில் உள்ள லட்வியாவின் விஸ்தீரணம் இருபத்தையாயிரம் சதுர மைல்களுக்கு மேல் இருக்கிறது.

அந்த நாட்டில் எங்கு பார்த்தாலும் ஏராளமான ஏரிகளும் ஆறுகளும் இருப்பதால், அது மிகச் செழுமை வாய்ந்த பிரதேசமாக இருக்கிறது.

அங்குள்ள ஆறுகள் மிகுந்த வேகம் வாய்ந்தவை. அந்த வேகத்தைக் கொண்டு அபரிமிதமாக மின்சார சக்தி உற்பத்தி செய்யலாம். ஆனால் அவ்விதம் உற்பத்தி செய்வதற்குற்றவாறு அந்த நாடு இன்னும் முன்னேற்றம் அடையவில்லை.

லட்வியாவில் நாலில் ஒரு மடங்குப் பிரதேசம் காடாக இருக்கிறது.

அந்த நாட்டில் வாழும் இருபது லட்சம் மக்களில் பாதிப்பேருக்கு மேல் விவசாயத்தை ஜீவனமாகக் கொண்டிருக்கிறார்கள்.

மீதியுள்ளவர்களில் பெரும்பாலோருக்குப் பால்டிக்கடலில் மீன் பிடிப்பதே பிரதான தொழில்.



லட்வியாவில் உள்ள வீடுகளின் விநோத அமைப்பு

இதற்கு அடுத்தபடியாக லட்வியர்கள் தேனீக்களை வளர்த்து, ஏராளமாகத் தேன் எடுத்து விற்பதை முக்கிய ஜீவனமாகக் கொண்டிருக்கிறார்கள்.

மேற்படி நாட்டில் மாரி காலத்திலே குளிர் தாங்க முடியாது. பூமியெல்லாம் பனிக் கட்டிகளால் மூடப்பட்டிருக்கும். பனிக் கட்டிகள் வீடுகளின் கூரைகளில் விழுந்து அங்கேயே தங்கி விடாமல் இருப்பதற்காக, லட்விய மக்கள் தங்களுடைய வீடுகளின் கூரைகளைப் பெரிதும் செங்குத்தாக அமைத்திருப்பதைப் படத்தில் காணலாம்.

லட்வியாவில் நிலச் சீர்திருத்தம் அமுலுக்கு வந்ததன் பலனாகப் பெரும்பாலான விவசாயிகளுக்கும் நிலங்கள் நியாயமான முறையில் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கின்றன.

* * *

கல்வித் துறையில் லட்வியா மிகவும் முன்னேற்றம் அடைந்து விளங்குகிறது. அந்த நாட்டில் எழுதவும் படிக்கவும் தெரியாதவர்களே இல்லை எனலாம்.

லிதுவானிய பாஷையைப் போலவே லட்விய பாஷையும் ஐரோப்பாவிலே புராதனமான பாஷை என்று கூறப்படுகிறது.

நாலு லட்சம் ஜனத்தொகை உள்ள ரிகா தான் லட்வியாவின் தலை நகர் ஆகும். பால்டிக் பிரதேசத்திலேயே முக்கியமான துறைமுகமும் அதுதான். மேற்படி தலை நகர் ரிகா சிறந்த கைத் தொழில் ஸ்தலமாகவும் விளங்குகிறது.

பால்டிக் நாடுகளில் ஒன்றான எஸ்டோனியா நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக அன்னியர்களின் ஆதிக்கத்திலேயே இருந்து வந்தது. ஆனால் மற்ற பால்டிக் நாட்டு மக்களைப் போலவே எஸ்டோனியா மக்களும் தங்களுடைய பாஷையையோ, வாழ்க்கை முறையையோ கைவிட்டு விடவில்லை; தங்களை ஆட்சி புரிந்த வெளி நாட்டினரின் பழக்க வழக்கங்களைக் கைக்கொண்டு விடவில்லை. தங்களுடைய நாடு சுதந்திரத்தை இழந்தாலும், அவர்கள் தங்களுடைய கலாச்சார சுதந்திரத்தை இழக்காமல் பாதுகாத்து வந்தனர். இந்த உண்மை சரித்திராசிரியர்களால் மிகவும் பாராட்டப் பட்டிருக்கிறது.

எஸ்டோனியாமீது முதலில் டென்மார்க் படையெடுத்து, அதைத் தன் வசப்படுத்திக் கொண்டது. பிறகு அந்த நாட்டின்மீது ஜெர்மானியர்கள் படை யெடுத்தனர். அதன் பின் போலந்து படையெடுத்து மேற்படி நாட்டை ஆக்கிரமித்துக் கொண்டது.

இறுதியாக 1561-லிருந்து 1710-ம் வருஷம் வரையில் எஸ்டோனியா ஸ்வீடனின் ஆதிக்கத்தில் இருந்தது.

பிறகு அந்த நாட்டை ஸ்வீடன் ருஷ்யாவிடம் ஒப்படைத்தது. அதன்பின் 1721-ம் ஆண்டிலிருந்து 1918 வரையில், அதாவது சற்றேறக் குறைய இருநூறு ஆண்டுகள் வரையில் எஸ்டோனியா ருஷ்யாவின் ஆதிக்கத்திலேயே இருந்து வந்தது.

1918-ல் தான் எஸ்டோனிய மக்கள் சுதந்திரப் பிரகடனம் செய்தனர். மேற்படி பிரகடனத்தைப் பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி இந்த மூன்று வல்லரசுகளும் அங்கீகரித்தன.

முதலாவது உலக மகா யுத்தத்தின் போது ஜெர்மானியர்கள் எஸ்டோனியாமீது படையெடுத்தார்கள். ஆனால், மேற்படி யுத்தத்தின் இறுதியில் ஜெர்மனி தோல்வியுற்றதால், எஸ்டோனியாவின் சுதந்திரம் நிலைத்தது.

பிறகு 1920-ம் ஆண்டிலே ருஷ்யாவுக்கும் எஸ்டோனியாவுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி ருஷ்யா அந்த நாட்டின் சுதந்திரத்தை அங்கீகரித்தது.

மறுபடியும் 1938-ல் ருஷ்யாவுக்கும் எஸ்டோனியாவுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி எஸ்டோனியாவில் ருஷ்ய இராணுவத் தளங்களை அமைத்துக் கொள்ள எஸ்டோனிய சர்க்கார் இசைந்தனர். அதன் காரணமாக அந்த நாட்டில் ருஷ்யாவின் செல்வாக்கு அதிகமாயிற்று. இறுதியில் 1940-ம் வருஷம் எஸ்டோனியா சோவியத் ருஷ்யாவுக்கு உட்பட்ட குடியரசாயிற்று.


கவனித்து வாங்குங்கள்..
FLIT
Esso
KILLS
FLIES, ROACHES, MOTHS, MOSQUITOES, BEDBUGS, ANTS, AND MANY OTHER HOUSEHOLD INSECTS
புதிய சிவப்பு, வெள்ளை & நீல நிற டின்னில்
எப்பொழுதையும்விட அதிகச் சக்திவாய்ந்தது
ப்ளிட்
சக்திவாய்ந்த 6 கீடநாசினிகள் சேர்ந்தது
பூச்சிகளால் பரவும் வியாதிகள் விஷயத்தில் மிகுந்த ஜாக்கிரதையாயிருங்கள்! புதிய சிவப்பு-வெள்ளை—மற்றும் நீல நிற டின்னில் கிடைக்கும் ப்ளிட் வாங்குங்கள்—பூச்சிகளைக் கொல்லும் ஆறு சக்தி வாய்ந்த பொருள்கள் ஒன்றுசேர்க்கப்பட்டதாகையால் இந்த கீடநாசினி வியாதிகளைத் தாங்கி வரும் பூச்சிகளை ஒழிப்பதில் எப்பொழுதையும்விட அதிக சக்தியுடன் விளங்குகிறது. புதிய சீர்திருத்தப்பட்ட ப்ளிட்டின் மாரக சக்தி காரக்கணக்கில் நீடித்திருப்பதால் அடிக்கடி தெளிக்கவேண்டிய அவசியமுமில்லை.
ப்ளிட்
அதிக பூச்சிகளைக் கொல்லுகிறது-அதற்குச் செலவழிக்கும் காசு வீண்போகிறதில்லை
ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி (கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)



பயங்கர மனிதன்

துஷ்யந்தன்

சுப்பண்ணு ரொம்ப நல்லவன், அவன் கற்பனைதான் மிக மிகப் பயங்கரமானது. காலையில் எழுந்ததும் நான் செய்யும் பிரார்த்தனை இது தான் : இடிபெருங் காற்றுகளிலிருந்தும், சதிகார மக்களிடமிருந்தும், கடன்காரப் பாவிகளிடமிருந்தும் சுப்பண்ணுவின் பயங்கரமான கற்பனைகளிலிருந்தும் பகவானே, என்னைக் காப்பாற்று !

அப்படியிருந்தும் பகவான் சில சமயங்களில் என்னைக் கைவிட்டு விடுவார். நான் சுப்பண்ணுவின் கையிலகப்பட்டுக் காற்றிலே பறப்பேன், நீரிலே மூழ்குவேன், அல்லது எரிகின்ற தீயிலே விழுந்து சாம்பலாகப் போவேன்.

எப்படி நடக்கும் என்று நினைக்கிறீர்கள்? இதோ, பாருங்கள்! அவன் வருகிறான். அவன் பேசுவதைக் கேளுங்கள், தெரியும் !

“சார், நீங்கள் தெருவில் போய்க் கொண்டேயிருக்கிறீர்கள். திடீரென்று பூமி பிளந்து வழி விட்டால் என்ன ஆகும் !”

சுப்பண்ணுவின் இந்தக் கேள்விக்கு யாரும் பதில் சொல்ல வேண்டியதில்லை. அவனே முழுதும் கற்பனை செய்து பார்த்து விடுவான்.

“முதலில் பூமி பிளந்ததும் ஜலம்தான் பிரவாகமாக ஓடும். நீங்கள் அதிலே விழுந்து தத்தளித்து மூழ்கிப் போவீர்கள். கீழே கீழே போய்க் கடைசியில் பாறைகளின் மேலே விழுவீர்கள். ரொம்பக் கடினமான பாறைகள் சார், அவைகளும் தகர்ந்து வழிவிட்டால் அதன் பிறகு நீங்கள் நேராக அக்கினிக் குழம்பில்தான் விழவேண்டும். அங்கே......” அவன் முடிக்கும்வரை நான் அந்த இடத்தில் காத்திருக்க மாட்டேன். நீரிட்டு நெருப்பிலிட்டு இப்படி ஒருவன் சித்திரவதை செய்தால் நீங்கள்தான் நிற்பீர்களா !

வற்றாத அவன் கற்பனை ஊற்று காவிரியாற்றின் புதுவெள்ளம் போலப் பெருகிக் கொண்டேயிருக்கும். “சார், நீங்கள் கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள். ஒரு நாள் திடீரென்று உங்களுக்கு அழகான இரண்டு சிறகுகள் முளைத்து விடுகின்றன. அப்படியே நீங்கள் ஆகாயத்தில் மேலே மேலே பறந்து போகிறீர்கள். ஆயிரமாயிரம் மைல்களுக்கும் மேலே பறக்கிறீர்கள் ......”

இதற்குப் பிறகு என்ன நேரிடும் என்று எனக்குத் தெரியும். இத்தனை காலம் சுப்பண்ணுவிடம் பழகிய பிறகு அவன் கற்பனை எப்படியிருக்கும் என்று எனக்குத் தெரியாதா ! “சட்டென்று சிறகுகள் ஒடிந்து போகின்றன. அந்த ஆயிரமாயிரம் மைல்களுக்கும் மேலேயிருந்து நீங்கள் தலை குப்புற விழுகிறீர்கள். இந்தக் காட்சி எப்படியிருக்கும் !” என்று கூசாமல் கேட்பான். அவனுக்கென்ன சார்! விழுவது நீங்கள்தானே !

இப்படியாக அவன் கையில் சிக்கி நான் அணு அணுவாகப் பிளக்கப்பட்டு மடிகிறேன். இதற்கு ஏதாவது வழியில்லையா என்று எத்தனையோ நாட்கள் பகலெல்லாம் பரிதவித்து இரவெல்லாம் சிந்தித்து முடிவுகாண முடியாமல் தவிக்கிறேன். ஆனால் கடவுள் அவன் பக்கம் தானிருக்கிறார்.

சுப்பண்ணு இன்னும் உயிரோடிருக்கிறான். அவனோடு கூட அவன் கற்பனையும் வளர்கிறது வளப்பமாக. “கண்ணீர் விட்டே வளர்த்தோம், சர்வேசா! இப் பயிரை...” என்று நான் பாடுகிறேன் மனமுருக. என் கண்ணீரெல்லாம் வற்றிப் போய் விட்டாலும் கூட நட்டவன் தண்ணீர் விடுவான் ! ஆகவே சுப்பண்ணுவும் அவன் கற்பனைப் பயிரும் எந்தக் காலத்திலும் அழியப் போவதில்லை.

எத்தனையோ முறை “இத்துடன் சனி தொலைந்தது” என்று நான் முடிவு கட்டியிருக்கிறேன். ஆனால் தொலையாது அந்தச் சனியன்.

ஒருநாள் நான் அமெரிக்கப் பத்திரிகையொன்றை வைத்துப் புரட்டிக் கொண்டிருந்தேன். வழக்கம் போல அந்தப் பத்திரிகையின் மேலட்டையில் ஒரு ‘டெக்னிகலர்’ பேரழகி ஹாலிவுட் புன்

னகை பூத்துக் கொண்டிருந்தான். அந்தச்சமயத்தில் உள்ளே வந்த சுப்பண்ணா அந்தப் படத்தை வைத்த கண் வாங்காமல் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய கற்பனைக்கு அந்தப் பேரழகியின் புன்னகை தூபம் போட்டதோ என்னமோ!

“ஏன் சார், நாளைக் காலையில் நீங்கள் படுக்கையை விட்டு எழுந்திருக்கிறபோது எதிர்பாராத விதமாக நீங்கள் ஒரு இளம் பெண்ணாக மாறியிருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது நீங்கள் என்ன செய்வீர்கள்! கொஞ்சம் கற்பனை செய்து பாருங்களேன்” என்றான்.

இதுவரை என்னை என்னவெல்லாமோ செய்து பார்த்திருக்கிறான் இந்தக் கல்யாண புருஷன். கடைசியில் பெண்ணாகவும் ஆக்கிவிட்டானே என்ற தாபம் எனக்கு.

“நேராக உன்னைத் தேடி வந்து கல்யாணம் செய்து கொள்கிறேன், போதுமா!” என்று ஆத்திரத்தோடு கேட்டேன். கேட்டுவிட்டு ‘சனியன்’ இனி நம்மிடம் தலை காட்டாது என்ற நம்பிக்கையுடன் நாற்காலியில் சாய்ந்தேன். ஆமாம், அவன் பதில் சொல்லாமல் வாசற்புறம் போனதைப் பார்த்தால் அப்படித்தான் தோன்றியது.

ஆனால் தோல்வியுற்றது நான்தான்.

மறுநாள் காலையில் தினசரிப் பத்திரிகைகளுடன் என் கண் முன்னே வந்து நின்றான் சுப்பண்ணா. ஓங்கி உலகளந்த நெடுமாலைப் போல அவன் நின்றதைப் பார்த்தேன். விசுவ ரூபத்தைக் கண்டு மயங்கி நின்ற பார்த்தனைப் போல மனமுருகி உடல் குறுகி “இனி என்னாலாவ தொன்றில்லை. எல்லாம் நின் செயல்” என்று விரக்தியுடன் பகவானைச் சரணடையும் நிலைக்கு வந்து விட்டேன்.

சுப்பண்ணா ஆரம்பித்தான்: “சார், இன்று தினசரியைப் பார்த்தீர்களா! ரயில் விபத்தாம். எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. இந்தியாவில் ஓடுகின்ற அத்தனை ரயில்களும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சட்டென்று தடம் புரண்டு கவிழ்ந்து விடுகின்றன என்று வைத்துக் கொள்வோம். எத்தனை ஆயிரம் பேர் மரணமடைவார்கள்! எத்தனைபேர் காயம் பட்டு உயிர் பிழைப்பார்கள்! இத்தனை பேருக்கும் வைத்திய உதவி செய்ய எத்தனை டாக்டர்கள் வேண்டும்! கொஞ்சம் கற்பனை செய்து...”

இதற்கு மேல் என்னால் கேட்க முடியவில்லை. மயக்கம் போட்டு விழுந்து விட்டேன். இந்தியாமுழுதுமுள்ள அத்தனை ரயில்களும்......ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கவிழ்ந்து விட்டால்... வேண்டாம் .....வேண்டாம்...இது கற்பனைக்கும் அப்பாற் பட்ட காட்சி. நினைக்கவும் மனம் கூசும் அமானுஷ்யக் கற்பனை.

எங்கே! கொஞ்சம் பதறாமல் நீங்கள்தான் கற்பனை செய்து பாருங்களேன்......ஏன்! பயமாயிருக்கிறதா! இத்தனையும் கற்பனை செய்து பார்த்து ரசித்து விட்டு இதோ நிற்கிறானே மகானுபாவன் சுப்பண்ணா. அவனைப் பாருங்கள்! உண்மையிலே அவன்தான் சார், மனுஷ்யன்!

‘அவசரத் தேவைதான் புதிதாக ஒரு விஷயத்தைக் கண்டு பிடிக்கத் தூண்டுகிறது’ என்று ஒரு வசனமுண்டு. சுப்பண்ணாவிடமிருந்து—அவனுடைய என்றும் எடை குறையா கற்பனையிலிருந்து—மீண்டுவர இரவு பகலாக வழி தேட முனைந்தேன். எத்தனை எத்தனையோ முயற்சிகளுக்குப் பின் ஒருஅற்புதமான யோசனை தோன்றியது. அவ்வளவுதான். சுப்பண்ணா என்னைத்தேடி வரும் வரையில் நான் காத்திருக்கவில்லை. நானே அவனிடம் ஓடிப் போய் என்னுடைய பேஷான யோசனையைச் சொல்லி விட்டு வந்தேன். நிஜமாகவே அது பயன்பட்டது. இரண்டு மூன்று வாரங்கள் வரை சுப்பண்ணா என்னைத் தேடிக் கொண்டு வரவில்லை.

ஆனால் என் சந்தோஷம் அற்பாயுசாகப் போய் விட்டது. நான்காவது வாரம் அவன் வந்து விட்டான். “பிரயோசனமில்லை, சார்! நம்மவர்களுக்கு ரசனையே கிடையாது, சார்! நான் மட்டும் ரஷ்யாவிலோ அமெரிக்காவிலோ பிறந்திருந்தால்......” என்று அலுத்துக் கொண்டான்.

“ரொம்ப சரி, குறைந்த பட்சம் உத்தரப் பிரதேசத்தின் ஒரு மூலையிலாவது உதித்திருக்க வேண்டும். தமிழ் நாட்டில் பிறந்தது துரதிர்ஷ்டம்” என்று ஆறுதல் சொன்னேன். ஆனால் துரதிர்ஷ்டம் எனக்குத்தான் என்று அவனிடம் எப்படிச் சொல்வது!

கடைசியில் “சுப்பண்ணா, பொறுத்திரு. காலம் வரும். உனக்கு நம் தமிழ் நாடு கடமைப் பட்டிருக்கிறது. எப்போதுமே மேதைகளை அது காலந்தாழ்த்தியே கண்டு கொள்வது வழக்கம். உனக்கும்...” என்று இழுத்தேன்.

“ஆமாம், சார்! நான் சொல்கிறேன், பாருங்கள். வானத்திலே அழகாக ஊர்ந்து செல்லும் மேகக்



தமிழ் நாட்டுக்குப் பெருமை!

"கல்கி" 20-9-53 இதழில் வெளியான டி. வி. எஸ். அனுபவத்தைப் பல தடவை அனுபவித்துப் படித்தேன். டி. வி. எஸ். பஸ்களில் எத்தனையோ தடவைகள் பிரயாணம் செய்திருக்கிறேன். ஒரு நாளாவது தாமதமாகவோ – மூன் கூட்டியோ போனது கிடையாது. எத்தனையோ தடவைகள் ரயிலுக்கு டிக்கட் வாங்கி, வண்டி தாமதம் என்று தெரிந்ததும் டிக்கட்டை வாபஸ் செய்து விட்டு டி. வி. எஸ். பஸ்களில் போயிருக்கிறேன். பிரயாணிகளுக்கு நல்ல சௌகரியமான வண்டிகள், ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசமில்லாமல் டிக்கட் கொடுப்பது போன்ற இன்னும் எத்தனையோ நல்ல அம்சங்கள் இவர்களிடம் உண்டு. இந்த மாதிரி ஸ்தாபனம் தமிழ் நாட்டிலிருப்பது, தமிழ் நாட்டுக்கே பெருமை.

டி.வி.எஸ். ஸின் அருந் தொண்டுகளை, செய்திப் படமாக எடுத்து வெளியிட்டால், படிக்கத் தெரியாதவர்களும் அவர்கள் சேவையை நன்றாக அறிந்து கொள்ள ஏதுவாகும்.

திண்டுக்கல்
18—9—53

பி. சுப்பராயலு

கூட்டம் அத்தனையும் கடினமான கற்பாறைகளாக மாறி உங்கள் தலையிலே விழுந்தால் எப்படியிருக்கும்! அதுபோல ஒரு நாளைக்கு என் மேதையைக் கண்டு உலகமே திடுக்கிட்டுப் போகும்" என்று வாய் கூசாமல் சொல்லி என்னைக் கதிகலங்க அடித்து விட்டு அப்பால் சென்றான்.

நிம்மதியுடன் ஒரு பெரு மூச்சு விட்டேன். தலையை ஒரு முறை தொட்டுப் பார்த்துக் கொண்டேன். அது பத்திரமாகத்தானிருந்தது. இந்தச் சமயத்தில் மற்றொரு எண்ணம் தோன்றவே வேகமாக நடை போட்டு "மிளகாய்ப் பொடி" பத்திரிகைக் காரியாலயத்திற்குப் போனேன்.

அதன் ஆசிரியரை எனக்கு நன்றாய்த் தெரியும். "மிளகாய்ப் பொடியைக் கண்ணிலே போட்டால் எப்படி உங்கள் கண்களில் கண்ணீர் வருமோ அப்படி என் பத்திரிகைக் கதைகளைப் படித்தாலும் வரும்" என்று அவர் சொல்வார்.

நான் உள்ளே நுழைந்தபோது தம் முன்னிருந்த காகிதக் குன்றுகளை அலட்சியமாக அப்பால் தள்ளிவிட்டு ஒரு அசட்டுச் சிரிப்புடன் என்னை வரவேற்றார் ஸ்ரீமான் 'மிளகாய்ப்பொடி.'

"இருந்தாலும் இந்தப் பத்திரிகைத் தொழில் ரொம்ப மோசமானது, சார்" என்ற அவர் வார்த்தைகளில் சலிப்பு கால் பாகமும் பெருமை முக்கால் பாகமும் இருந்தது.

தமது சொல்லை நிரூபிப்பது போல, "இதோ பாருங்கள், சார்! இந்தப் பிருகஸ்பதி ஒரு பத்துப் பதினைந்து நாளாகச் சுமார் நாற்பது கதைகள் அனுப்பியிருக்கிறான். எல்லாம் பயங்கரத்தின் எல்லைக் கோட்டில் இருக்கின்றன. இந்தக் கதையில் என்ன எழுதியிருக்கிறான், தெரியுமோ! ஒரு விசித்திரமான நாடாம். அங்கே உள்ளவர்களுக்கு முதுகெலும்பே கிடையாதாம். ஒற்றைக் கண் தானும்..." இதைச் சொல்லி அவர் முடிப்பதற்குள் நான் "ஆமாம், இதை எழுதினது சுப்பண்ணா என்ற பேர்வழிதானே!" என்று கேட்டேன். அவருக்கு நான் அப்படிக் கணக்காகக் கேட்டது ஒரே வியப்பாகப் போய்விட்டது.

"எப்படி சார், தெரியும்!" என்றார்.

"இந்தமாதிரிக் கற்பனை செய்யக்கூடிய ஒரே மனிதன் சுப்பண்ணாதான், சார்!" என்று நான் என் நண்பனுக்காக வக்காலத்து வாங்கினேன். அதன் பிறகு அவர் அதைப்பற்றிப் பேசாமலிருந்து விடவே நான் கிளம்பி விட்டேன். ஒரு சமயம் என்னைப் பிடித்த இந்தச் சனியன் இவரைப் பிடித்துக்கொண்டு விடும் என்ற நம்பிக்கையில் எழுந்த ஆசையாயிருக்கலாம். வேகமாக நடை போட்டு வீடு வந்து சேர்ந்தேன்.

என் யோசனைப்படி சுப்பண்ணா 'முருக்க மரம்' ஏற ஆரம்பித்து விட்டான். இனி அவனுண்டு — பத்திரிகை ஆசிரியர்களுண்டு, எக்கேடாவது கெட்டுப் போகட்டும் என்ற திருப்தி எனக்கு. சுப்பண்ணா இனி என்னிடம் வரமாட்டானல்லவா!

அன்று இரவு நிம்மதியாகத் தூங்கினேன்.

ஆனால் காலையில் என் ஆசைக் கனவுகள் தகர்ந்து பொடியானதைக் கண்டேன். கையில் ஒரு கடிதத்துடன் எம கிங்கரன் போல் என் எதிரே வந்து நின்றான் சுப்பண்ணா. கையிலிருந்த கடிதத்தை என்னிடம் நீட்டினான். 'மிளகாய்ப் பொடி' ஆசிரியர் சுப்பண்ணாவுக்கு எழுதிய கடிதம் அது.

அன்புடையீர்,

நமஸ்காரம். தங்கள் கதைகள் எல்லாவற்றையுமே பரிசீலனை செய்தோம். ரொம்ப உயர்தரம். சாதாரண மக்கள் இதைப் புரிந்துகொள்ள மாட்டார்களே, என்ன செய்வது! அவர்கள் அந்த நிலையை அடையும்போது அவசியம் உங்கள் கதைகளைப் பிரசுரிக்கிறோம்.


தங்கள்,
'மிளகாய்ப் பொடி'

சுப்பண்ணா சொன்னான்:

"பார்த்தீர்களா, சார்! ஆக இன்னும் இருநூறு வருஷங்களுக்குப் பிறகு என் கதைகள் பிரசுரமாகும். இதற்கிடையில் நம்மைச் சூழ்ந்திருக்கும் நீர்ப்பரப்பு முக்காலும் பொங்கி யெழுந்து கால் பாகமே உள்ள இந்தப் பூமியை விழுங்காமலிருக்க வேண்டும். எரி நட்சத்திரங்கள் அத்தனையும் திடீரென விழுந்து பூமியைச் சாம்பலாக்கி விடலாம். அது நேராமலிருக்க வேண்டும். அல்லது இந்தப் பூமியே சுற்றி வரும்போது சற்று நின்று நிலை கலங்கிச் சூரியனோடு மோதிவிட்டால்......!"

ஆமாம். சுப்பண்ணா இப்பொழுது எழுதுவதில்லை. நான் மறுபடியும் என் தினசரிப் பிரார்த்தனையைச் சொல்லிக் கொண்டுதான் வருகிறேன். அந்தப் பிரார்த்தனையுடன் இன்னொரு வேண்டுகோளையும் சேர்த்துக் கொண்டிருக்கிறேன். "சுவாமி, அடுத்த ஜன்மாவில் என்னைப் பிறக்க வைக்கும் போது சுப்பண்ணாவையும் பூலோகத்துக்கு அனுப்பி விடாதே. ஒரு நூற்றாண்டு வித்தியாசமாவது எங்கள் இருவருக்கும் இடை வெளி இருக்கட்டும், அப்பனே!" என்பதுதான் அது.

நான் என்ன பிரார்த்தனை செய்து என்ன! அந்தக் கடவுள் என் பிரார்த்தனையைக் காதில் வாங்கிக் கொண்டால்தானே! நான் தவறினாலும் தவறலாம், சுப்பண்ணா என்னைப் பார்க்க வரத் தவறுவதில்லை; தன் பயங்கரக் கற்பனையைச் சொல்லி என்னைப் பயமுறுத்தத் தவறுவதில்லை. அட! அதோ வருவது சுப்பண்ணாதான் போலிருக்கிறதே! இன்று என்ன பயங்கரக் கற்பனை புரிந்துகொண்டு வந்திருக்கிறானோ, தெரியவில்லையே! கடவுளே, எனக்குச் சுப்பண்ணாவின் பயங்கரக் கற்பனையிலிருந்து கதிமோட்சம் கிடையாதா!


வலியை ஒழியுங்கள்
10 Saridon
BRAND ANALGESIC TABLETS
ஸாரிடன்
'ரோஷ்'



ரமண்லால் வஸந்தலால் தேசாய் :: மொழி பெயர்ப்பு : ரா. வீ.

16. அழுகையும் ஆத்திரமும்

பக்கத்தில் நின்று கொண்டிருந்தவர்களில் இரண்டு பேர் ஓடிப்போய் ஸ்டிரெக்சரைத் தூக்கி வந்தார்கள். பணம் படைத்தவர்களின் பணத்துக்குப் பிரமாதமானதோர் சக்தி இருக்கிறது. அது ஜனங்களை ஊழியம் செய்வதற்கும் ஓடியாடி உதவி செய்வதற்கும் தூண்டி விடுகிறது. ஏனெனில் அந்த ஊழியத்துக்கும் உதவிக்கும் பிரதியாக என்ன வெல்லாமோ அந்தத் தனவந்தர்களிடமிருந்து தாம் பெற முடியும் என்ற நம்பிக்கைதான் அதற்குக் காரணமாயிருக்க வேண்டும்.

ஆனால் மாதவப் பிரஸாதினிடம் பணத்தைத் தவிர நேர்மையான குணமும் நல்ல சுபாவமும் வேறு குடிகொண்டிருந்தன. இந்த இரண்டு இயல்புகளும் பொன்னுக்கு மணம் ஏற்றியதுபோல் அவரிடம் குடி கொண்டிருந்த காரணத்தினால் மக்கள் அவருக்கு மிக்க மரியாதை செலுத்தி வந்தனர்; அவரிடம் மிகுந்த மதிப்புக் காட்டி வந்தனர். மனிதனிடமுள்ள மனிதத்தன்மைக்கு இந்த உலகத்தில் யாரும் மரியாதையும் மதிப்பும் செலுத்துவது இயல்பு தானே?

அதுமட்டும் அல்ல. அவரோ கீழே விழுந்து அடிபட்டுக் கிடந்தார். அம்மாதிரித் துயரம் தரும் சந்தர்ப்பத்தில் பார்க்கக் குழுமி நிற்கும் பலருடைய உள்ளத்திலும் அநுதாப உணர்ச்சி எழுவது இயல்பே அல்லவா? ஜன்ம விரோதியாக இருந்தால்கூட ஒருவன் காயமுற்றுக் கீழே விழுந்து கிடந்தால், அதைக் கண்டு கைகொட்டிச் சிரிக்கும் கல்நெஞ்சக்காரர்கள் இந்தப் பரந்த உலகத்தில் வெகு அபூர்வமாகத்தான் இருப்பார்கள். துயரப்படுபவர்களைக் கண்டு துயரமுறுவதும் அழுபவர்களைக் கண்டு அழுகை வருவதும் மனித சுபாவம். அதுவேதான் உண்மையான மனிதத் தன்மையும் ஆகும்.

சிலபேர் கைகொடுத்துத் தூக்கி மாதவப் பிரஸாதை ஸ்டிரெக்சரில் படுக்க வைத்தார்கள். அவருக்கு அச்சமயம் அவர்களுடைய உதவி சிறிதும் அவசியம் இல்லை தான். இருந்தாலும் அவர் மக்களின் இரக்கத்தையும் தயவையும் வேண்டாம் என்று கூறி உதறித் தள்ளிவிட்டு மனித சுபாவத்தின் அதி சூக்ஷ்மமான, யாரும் லேசில் அறிய இயலாத உணர்ச்சியை அவமதிக்க விரும்பவில்லை. மனித உணர்ச்சிக்கு மனம் தளர்ந்து அடிபணியத்தான் விரும்பினார்.

சுபத்திரா தன் வீட்டுக்கு வரவேண்டும் என்று அவரை எத்தனையோ வற்புறுத்திச் சொன்னாள். ஆயினும் மாதவப் பிரஸாத் அதற்குச் சம்மதிக்கவில்லை. அவர் ஒன்றும் அறியாத அவ்வளவு முட்டாள் அல்லவே! அடிபட்டுக் காயமுற்ற நிலையில் இன்னொருவர் வீட்டுக்குப் போனால் அந்த வீட்டார்களுக்குக் கஷ்டமும் சிரமமும் ஏற்படக்கூடும் என்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தார். அப்படியே இன்னொருவர் வீட்டுக்குப் போக வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டாலும் ராமலால் அவருக்கு உற்றாரா, உறவினரா? சொந்தம் பாராட்டிக் கொண்டு போய்ப் படுப்பதற்கு? ஏதாவது சொந்தம் என்றாலும் போகலாம். ராமலால் அவருக்கு நெருங்கிய நண்பர்தான். அந்தப் பாந்தவ்யம் பாராட்டிக் கொண்டு போகலாம், தவறில்லை. என்றாலும், தம் வீட்டில் உள்ள வசதிகளும் சௌகரியங்களும் ராமலாலின் வீட்டில் ஏது? ராமலாலோ குடும்பம் நொடித்துச் சாப்பாட்டுக்கே சிரமப் பட்டுக் கொண்டிருந்தார். அப்படியிருக்கும் பொழுது அவருடைய வீட்டுக்குப் போய்த் தங்குவதற்கு மாதவப் பிரஸாதுக்குப் பைத்தியமா, என்ன?

எனவே, அவர் உள்ளேவர முடியாது என்று மறுத்துக் கொண்டு, "இல்லை, இல்லை! என் ஆட்கள் வந்து விட்டார்கள். நான் என் வீட்டுக்கே போய்க் கொள்கிறேன். உங்களுக்கு எதற்காக வீணில் சிரமம் கொடுக்க வேண்டும்?" என்றார்.

"இதென்ன இப்படிப் பேசுகிறீர்களே? எங்களுக்கு என்ன சிரமம்? இந்த வீடு வேறு அன்னியருடையதா? உங்கள் சொந்த வீடு போலத்தானே?" என்றாள் சுபத்திரா. அவளுடைய அந்தப் பேச்சில் பெருந்தன்மை,

எளிமை, பாந்தவ்யம் ஆகிய பாவங்களெல்லாம் அநாயாசமாகத் தொனித்தன.

"அது உண்மைதான். இருந்தாலும் என் வீட்டில் எல்லாவித வசதிகளும் சௌகரியங்களும் இருக்கின்றன. வேண்டிய வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். அதனால்தான் வீட்டுக்குப் போகிறேன் என்கிறேன்!" என்றார் மாதவப் பிரஸாத்.



அதைக் கேட்ட சுபத்திராவின் முகத்திலே ஒரு சிணுக்கமும் சுருக்கமும் ஏற்பட்டன. "இங்கேயும் தங்களுக்கு எவ்விதமான அசௌகரியமும் ஏற்படாது; வேண்டிய வசதிகளுக்கும் குறைவிராது. ஆனால் உங்கள் வீட்டைப் போல் சொன்ன சொல் கேட்க இங்கே ஊர்ப்பட்ட வேலைக்காரர்கள் இல்லை என்பது உண்மைதான். ஆனால் அதற்குப் பதிலாக நாங்கள் இருக்கிறோம். அவர்களுக்கு எவ்விதத்திலும் குறைவில்லாமல் தங்களை எங்களால் கவனிக்க முடியும் என்றும் நாங்கள் நிச்சயமாக நம்புகிறோம்!" என்றாள்.

அப்பொழுதுதான் மாதவப் பிரஸாதுக்குத் தாம் பணச் செருக்கில் ஆழ்ந்து அன்பே வடிவான பெண்ணின் உள்ளத்தில் உண்டாகும் மென்மையே உருவான உணர்ச்சியை வேரோடு களைய முற்பட்டு விட்டோம் என்பது தெரிந்தது. முற்பட்டு விட்டோம் என்பது மட்டும் அல்ல, இருதயத்தையே பிளக்கும்படியாகப் பேசி விட்டோம் என்பதும் விளங்கியது. அவருக்கு மிகவும் வருத்தம் உண்டாகவே, தம்மைத் தாமே நொந்து கொண்டார். கெட இருந்த காரியத்தைக் கெடாமல் செய்ய முயற்சிப்பவர் போல், உடைந்த பொம்மையை ஒட்ட வைப்பவர் போல, "இல்லை, இல்லை! அதற்குச் சொல்லவில்லை. உங்கள் வீட்டில் தங்குவதினால் எனக்கு எவ்விதமான வசதிக் குறைவோ சௌகரியக் குறைவோ ஏற்படாது என்பதை நான் அறிவேன். ஏன்? என் வீட்டைக் காட்டிலும் அதிக வசதியும் சௌகரியமும் இங்கே கிட்டும் என்பதையும் நான் அறியாமல் இல்லை. ஆனால் வீட்டில் தாயற்ற குழந்தைகள் ஒண்டியாக இருக்கின்றன. குழந்தை குட்டிகளைப் பார்த்துக் கொள்வதென்றால், இந்த வேலைக்காரர்களால் ஒன்றும் ஆவதில்லை. வேலைக்காரர்களிடம் கவனித்துக் கொள்ளும்படி விட்டு விட்டால், குழந்தைகள் தாயற்றதோடு மட்டுமல்ல, நாதியற்றவையாகவும் ஆகி விடுகின்றன. அதனால்தான் சொன்னேன். அதோடு நீங்கள் எல்லாம் என்ன தொலையாத தூரத்தில் இருக்கிறீர்களா? நினைத்தபொழுது கூப்பிட்டுக் கொள்கிறேன்? அல்லது நீங்கள்தான் நினைத்த பொழுது..." என்று மூச்சு விடாமல் தம் பாட்டுக்குச் சொல்லிக்கொண்டு போனார்.

அம்மாதிரி நிலையில் அதிக நேரம் மாதவப் பிரஸாத் பேசிக் கொண்டே போவது சுபத்திராவுக்கு உசிதமாகப் படவில்லை. பலவீனம் அதிகரித்து விட்டால் என்ன ஆவது என்று யோசனையாக இருந்தது. மனோரமா அத்தனை நேரமும் தன் தாயாருடன் அருகில் தான் நின்று கொண்டிருந்தாள். 'தம்மெதிரேயே மனோரமா நின்று கொண்டிருக்க மாட்டாளா?' என்று மாதவப் பிரஸாதுக்குத் தோன்றியது. அதே போல அப்பொழுது மனோரமாவுக்கும் மாதவப் பிரஸாத் தன் பார்வையை விட்டு அகலக்கூடாது என்று தோன்றிற்று. ஏனெனில் அந்தத் துர்ச்சம்பவம் நிகழ்ந்ததற்குத் தான்தான் காரணம் என்று அவள் எண்ணிக் கொண்டிருந்தாள். அந்த எண்ணமேதான் அவளை அப்படி நினைக்கச் செய்தது.

மாதவப் பிரஸாதும் என்ன ராமலாலைப் பார்ப்பதற்காகவா குதிரையின் மீது ஏறிக் கொண்டு வந்திருந்தார்? மனோரமாவைப் பார்ப்பதற்காகத்தானே வந்திருந்தார்! அதனால்தான் அவருக்கு அவள் அங்கே தம் மெதிரே நின்று கொண்டிருப்பது பிடித்திருந்தது. அத்தனை பேரோடு சுபத்திராவும் வேலைக்காரர்களும் தம்மைச் சூழ்ந்துகொண்டு நிற்கும்பொழுது அவரால் அவளை நிறைந்த கண் கொண்டு பார்க்க முடியவில்லை. எத்தனைதான் அடக்கமற்ற ஆண் பிள்ளையாக இருந்தாலும் அச்சமா யிராதா? அவளை ஆசை தீரப் பார்க்கமுடியா விட்டாலும், 'மனோரமா தம்மெதிரே நின்று கொண்டிருக்கிறாள், தாம் கீழே விழுந்து காயம் பட்டுக் கொண்டதற்காக மனத்துள் வருந்திக் கொண்டிருக்கிறாள்' என்பதை எண்ணிப் பார்க்கும்பொழுது மாதவப் பிரஸாதுக்குப் பாதி வலி குறைந்து போய் விட்டது போலவே தோன்றிற்று. அவளைப் பார்த்துக் கொண்டே யிருந்தால் மிகுந்த பாதி வலியும் போய் விடுமோ என்றுகூடத் தோன்றிற்று. ஆனால் இனி வீட்டுக்குப் போகாமல் எப்படியிருக்க முடியும்? இவ்வளவு தூரம் முன்னேறி 'உங்கள் வீட்டுக்கு வரமாட்டேன்' என்று கூறி மறுத்து விட்ட பின் சுபத்திராவின் வீட்டுக்குப் போவது என்றால், அது முட்டாள்



தனத்துக்கும் மேலான முட்டாள் தனமாக அல்லவா முடியும்? ஆகவே, அரை மனத்துடன் மாதவப் பிரஸாத் மக்களின் உதவியுடன் தம் வீட்டுக்குப் புறப்பட்டார்.

மனோரமாவும் சுபத்திராவும் தங்கள் வீட்டுக்குத் திரும்பினார்கள். ஜனங்கள் மிகுந்த மரியாதையுடன் பின் நகர்ந்து, அவர்கள் போவதற்கு வழிவிட்டனர். இருவரும் வீட்டுக்குள் சென்று விட்டனர்.

இதே சமயம் வெளியே போயிருந்த ராமலால் வீடு திரும்பி வந்தார். வீட்டு வாசலில் கூட்டம் கூடியிருப்பதையும், சிலர் சேர்ந்து ஏதோ பேசிக் கொண்டிருப்பதையும் கண்ட அவர் ஜனங்களை நெருங்கி வெகு சகஜமாக ஸௌஜன்யத்துடன், "என்ன விசேஷம்? ஏன் இந்தக் கூட்டம்?" என்று கேட்டார்.

"அவர் விழுந்து விட்டார்!" என்று யாரோ பதில் சொன்னார்கள்.

"எவர்?"

"அவர்தான் ஐயா, மாதவப் பிரஸாத்!"

"மாதவப் பிரஸாதா? எங்கே விழுந்தார்? எப்படி விழுந்தார்? எங்கிருந்து விழுந்தார்?" என்று படபடப்புடன் கேள்விகளுக்கு மேல் கேள்விகளாகக் கேட்டார் ராமலால்.

"குதிரையிலிருந்து விழுந்து விட்டார். ஜனங்கள் இப்பொழுது தான் அவரை ஸ்டிரெக்சரில் தூக்கிக்கொண்டு போனார்கள்!" என்று பதில் அளித்தார் யாரோ ஒருவர்.

"எங்கே கொண்டு போனார்கள்?"

"அவருடைய வீட்டுக்கு!"

இதைக் கேட்டதும் ராமலால் தம் வீட்டுக்குள் நுழையாமல் நேரே மாதவப் பிரஸாதின் வீட்டுக்குப் புறப்பட்டார். மாதவப் பிரஸாத் குடியிருந்த வீடு ஒரு காலத்தில் அவருடைய சொந்த வீடாயிருந்தது. எனவே, விற்பனையாகி விட்ட தமது பழைய வீட்டின் பக்கம் போவதென்றாலே ராமலாலுக்கு மனத்தை என்னவோ செய்தது. விற்பனையானபின் அவர் அந்த வீட்டுப் பக்கம் காலடி எடுத்து வைத்ததில்லை. வீடு விற்பனையானது அவருடைய குற்றமா? அவருடைய பாக்கியத்தின் குற்றம் அல்லவா? மாதவப் பிரஸாத் அந்த வீட்டை விலைக்கு வாங்கிக் கொண்டார். அதற்காக அவரை எப்படிக் குற்றம் கூற முடியும்? அவர் சரியான சந்தர்ப்பத்தில் முன் வந்து படுமோசமாக விலை போக இருந்த அவருடைய சொத்தை நியாய விலை கொடுத்து வாங்கிக் கொள்ளவில்லையென்றால் ராமலால் இன்று இருக்கும் நிலையில் கூட இருப்பது ஏது?

ராமலால் மனத்தை ஒருவிதமாகத் தேற்றிக் கொண்டு தம்முடைய பழைய வீட்டுக்கு—இன்று மாதவப் பிரஸாதுக்குச் சொந்தமாகி விட்ட அதே பழைய வீட்டுக்குச் சென்றார்.

வீட்டில் ஏகக் களேபரமாக இருந்தது. ஆட்கள் பரக்கப் பரக்க இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள். வேலைக்காரர்கள் கன கடுமையாக வேலை செய்வதுபோல் பாவனை செய்து கொண்டிருந்தனர். எஜமானரின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்கு—எஜமானரிடம் தங்களுக்குள்ள நன்றி, விசுவாஸத்தைக் காட்டுவதற்கு அதைக் காட்டிலும் நல்ல தருணம் வாய்ப்பதரிது என்பது போல் ஓடியாடிக் கொண்டிருந்தனர். குழந்தைகள் ஒரு புறம் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தன. ஒருவன் நாட்டு வைத்தியரை அழைக்கலாம் என்று யோசனை கூறினால் இன்னொருவன் டாக்டரை அழைக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தான். ஒருவன் நாட்டு மருந்து மூலிகைகளைக் கொண்டு வந்து கட்டுக் கட்டலாம் என்று ஆலோசனை கூறினால் இன்னொருவன் பேடண்ட் பிளாஸ்திரியைச் சிபாரிசு செய்து கொண்டிருந்தான். எல்லோரும் ஒன்றும் புரியாமல் தலைக்கு ஒன்று சொல்லிக் கொண்டு இங்கும் அங்குமாகச் சுற்றிக் கொண்டிருந்தனர். மாதவப் பிரஸாதின் அருகில் லக்ஷ்மி மட்டும் தான் உட்கார்ந்திருந்தாள்.

"நான் இன்னும் சாகவில்லையே! எதற்காக இப்படிக் குய்யோ முறையோ என்று கூச்சலிட வேண்டும்? குழந்தைகள் அழுது கொண்டிருக்கின்றனவே! யாராவது காதில் வாங்கிக் கொண்டு குழந்தைகளைச் சமாதானப் படுத்தினால்தானே?"-மாதவப் பிரஸாத் ஆத்திரமும் வேதனையும் தாள மாட்டாமல் படபடக்கும் குரலில் தம்மையும் மீறி உரக்கக் கத்தினார்.

"கொஞ்ச நேரம் போனால் குழந்தைகளின் அழுகை தானாக ஓய்ந்துவிடும். ஆனால் உங்களுக்குத்தான் எத்தனை பெரிய காயம் ஏற்பட்டு விட்டது! ஒரு உழக்கு ரத்தத்துக்கு மேல் அல்லவா வெளி வந்திருக்கும் போலிருக்கிறது! நீங்கள் கொஞ்சம் பேசாமல் களைப் பாறுங்கள். மருந்து வாங்கி வர ஆள் போயிருக்கிறான்!" என்றாள் லக்ஷ்மி வெகு ஆத்மீகம் கொண்டவள் போல.

"நீங்கள் எல்லோரும் என்னைச் சாந்தியாகச் சும்மா இருக்க விட்டால் அல்லவா நான் களைப்பாறுவதற்கு? நீ போய்க் குழந்தைகளைக் கவனித்துக் கொள். என்னைச் சற்றுத் தனிமையாக இருக்க விடு!" என்றார் மாதவப்பிரஸாத். அவருடைய சொல்லில் சிறிது கடுமை தொனித்தது.

அதைக் கண்ணுற்ற லக்ஷ்மி பேசாமல் எழுந்து சென்று விட்டாள். அவளுக்கு மேலே பேசினால் ஏதாவது அனர்த்தமாக முடியுமோ என்ற பயம். அவள் சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் ராமலால் அந்த அறைக்குள் நுழைந்தார். அவரைக் கண்ட மாதவப்பிரஸாதின் மனத்துக்குச் சற்று ஆறுதலாயிருந்தது.

"வாருங்கள், அண்ணா! நான் கீழே விழுந்து விட்டேன். நல்ல வேளை! அதிகமாகக் காயம் ஒன்றும் பட வில்லை. பிழைத்தேன்!" என்றார் மாதவப் பிரஸாத்.

மாதவப் பிரஸாதுக்கு ஏராளமான சொத்து இருந்தது. ஆனால் அதைக் கவனித்துக் கொள்ளத்தான் இரண்டாமவர் யாரும் இல்லை. சொத்துக் குடையவரான வீட்டு எஜமானரே நோய் வாய்ப்பட்டு விட்டால், வீட்டில் ஏற்படும் அலங்கோலத்தைப் பற்றிக் கேட்பானேன்? சம்பந்தா சம்பந்த மில்லாதவர்கள் தலைக்குத் தலை ஆட்சி செலுத்தத் தலைப்பட்டு விட்டால் வீட்டின் நிலைமை எப்படியிருக்கும்? ராமலாலுக்கும் அந்த வீட்டைக் கவனித்து நடத்த ஒரு எஜமானியம்மாள் இல்லாதது ஒரு குறையாகத்தான் பட்டது. வீட்டைக் கவனித்துக் கொள்ள ஒரு எஜமானி இருந்து விட்டால், வீடு இப்படி அலங்கோலமாகக் காட்சி அளிக்குமா? வீடு வீடாக இருக்க வேண்டுமானால் வீட்டுக்கு ஒரு கிருஹ லக்ஷ்மி - அதாவது எஜமானி அம்மாள் அவசியம் தேவை என்பதை அவருடைய உள்ளம் நன்கு உணர்ந்தது.

ராமலால் மாதவப் பிரஸாதுக்கு எவ்வளவோ ஆறுதல் சொன்னார். எத்தனையோ வைத்தியர்களும் டாக்டர்களும் மாதவப் பிரஸாதுக்கு நன்றாக அறிமுகமானவர்கள் தாம், பழக்கப் பட்டவர்கள்தாம். சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் கூட டாக்டர்கள் வந்து விடுவார்கள். ஜலதோஷம், தும்மல், இருமல், தலைவலி என்றால் உடனே டாக்டர்கள் வரவழைக்கப் படுவதுதானே பெரிய வீட்டார்களுக்கு இயல்பான அங்கம்? வீட்டில் இருந்த மருந்துப் புட்டிகளுக்கு ஒரு

மாறுதல் வேண்டும்!

ஆகஸ்ட் 23-ம் தேதி கல்கி இதழில் "தலைமை நீதிபதியின் சாட்சியம்" என்ற கட்டுரைத் துணுக்கைப் பார்த்தேன். அதில் பொதிந்திருந்த உண்மைகளைக் கண்டு மகிழ்ந்தேன். கேள்வி ஞானமே சிறந்த ஞானம் என்று போற்றிய நாட்கள் கடந்து, நெட்டுருச் செய்யும் கல்வியே சிறந்த கல்வி என்று போற்றும் நாட்கள் நம் நாட்டில் உண்டாகி யிருப்பது வியக்கவும், வெறுக்கவும் தக்கதே. குழப்பக் கடலில் ஆழ்ந்திருக்கும் மாணவனை, பாடங்களை உருப்போட்டு வைக்கத் தூண்டும் தற்கால ஆசிரியர்களும், "நோட்ஸ்" போடுபவர்களும், பசித்துத் துடிக்கும் சிறு குழந்தையைக் கொலைக்களத்திலிட்டுச் செல்லும் பணியைச் செய்கிறார்களே யன்றி, அவர்களுடைய மயக்கத்தைப் போக்க உதவுவதில்லை. இவ்வகையான "ஏட்டுச் சுரைக்காய்" கல்வி எதற்கும் உதவுவதுமில்லை. ஆதலால் நம் நாட்டுக் கல்வி முறையில் புரட்சிகரமானதொரு மாறுதல் ஏற்பட வேண்டும். இல்லாவிட்டால் நம் நிலைமை உயர்வதரிது. இம்மாறுதல் ராஜாஜியின் புதிய கல்வித் திட்டத்தில் ஏற்படும் என்று நம்புகிறோம்.

மதுரை
21—8—53 ப. கிருஷ்ணமூர்த்தி

கங்குகரை கிடையாது. எல்லாவற்றையும் சேர்த்து வைத்தால் ஒரு சின்ன மருந்துக் கடையே திறந்து விடலாம். மாதவப் பிரஸாதின் மனைவி நோய் வாய்ப்பட்டிருந்த காலத்தில் பல பிரபல டாக்டர்கள் அழைக்கப் பட்டார்கள். அவர்களுடன் மாதவப் பிரஸாதுக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. காரணம், அவர் பெரிய பணக்காரர். பணக்காரர்களுடன் நெருங்கிய தொடர்பு பூணுவதென்றால் இந்த உலகத்தில் யார்தான் விரும்ப மாட்டார்கள்?

சமாசாரம் தெரிந்ததும் டாக்டர்களும் வைத்தியர்களும் மாதவப் பிரஸாதின் வீட்டை நோக்கிப் படையெடுத்து வந்தார்கள். விலையுயர்ந்த மருந்துகள் எழுதிக் கொடுத்ததுடன், விலைமதிக்க முடியாத உபதேசங்கள் பல செய்து விட்டு, வந்து பார்த்ததற்குப் பீஸாகப் பணத்தையும் வாங்கிக் கொண்டு போய்ச் சேர்ந்தார்கள்.

அவர்கள் போனதும் சின்னப் பெண் அழுது கொண்டே அப்பாவைத் தேடிக்கொண்டு அவருடைய அறைக்கு வந்து சேர்ந்தாள். லக்ஷ்மி வேகமாக விரைந்து வந்து அவளைத் தூக்கிக் கொண்டு வெளியே போகலானாள்.

“மாட்டேன், நான் வரமாட்டேன்! அப்பாவிடம்தான் போவேன்!” என்று முரண்டு பிடித்து அழுதாள் அந்தச் சின்னப் பெண்.

மாதவப் பிரஸாதுக்குக் குழந்தைகள் என்றால் வெகு பிரியம். குழந்தை பிடிவாதம் பிடித்து அழுவதைக் கண்ட அவர் லக்ஷ்மியைப் பார்த்து, “குழந்தையை என்னிடம் விட்டுப் போ!” என்றார். ஆனால் லக்ஷ்மி குழந்தையைப் பலவந்தமாகத் தூக்கிச் செல்ல முயன்று கொண்டிருந்தாள். அதைக் கண்டதும் ராமலாலின் மென்மையே உருவான இருதயம் இளகியது. “குழந்தையை எதற்காக இப்படிப் பலவந்தப் படுத்தித் தூக்கிக் கொண்டு போகிறாய்? இவரிடம்தான் விட்டுவிட்டுப் போயேன்!” என்றார்.

நன்றாக வாழ்ந்த காலத்தில் ராமலாலின் உத்தரவை யாரும் மீறியதில்லை. ஏன்? தாழ்ந்து வாழ்க்கை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட இந்தக் காலத்தில்கூட அவர் சொல்லுக்கு வேறு சொல்வது என்பது வெகு குறைவாகவேதான் இருந்து வந்தது. அவர் எல்லாம் தெரிந்தவரானபடியால், கூடுமானவரை யாரிடமும் எதுவும் சொல்வதில்லை. எதுவுமே சொல்லாதவர் வற்புறுத்தி ஏன் சொல்லப் போகிறார்? ஆனால் அவர் எப்பொழுதாவது ஏதாவது ஒரு விஷயத்தை அழுத்திச் சொல்வதென்று நிர்ப்பந்தம் ஏற்பட்டுச் சொல்லி விட்டால், அதை ரூபாய்க்குப் பதினாறு அணா உண்மை யென்று மதித்து மரியாதை கொடுத்து மக்கள் அதன்படி மாறு எதுவும் சொல்லாமல் நடந்து வந்தனர்.

ஆனால் லக்ஷ்மிக்கு ராமலால்-மாதவப் பிரஸாத் இருவரும் இப்படி நெருங்கிப் பழகுவது சிறிதும் பிடிக்க வில்லை. அவள்

தமிழுக்குக் கௌரவம்

தமிழர்கள் கலை ஆர்வம் மிக்கவர்கள். கலைஞர்களைக் கௌரவிப்பதில் தமிழர்களுக்கு ஈடு தமிழர்கள்தான்.

ராஜாஜி அவர்கள் எழுதிய “ராமகிருஷ்ண உபநிஷதம்” என்ற நூலுக்குப் பரிசளித்திருப்பது தமிழ் அன்னைக்கே செய்த கௌரவம் ஆகும். விஜய வருடம் பிறந்ததிலிருந்து பல அற்புதங்கள் நிகழ்ந்தன; நிகழ்கின்றன. குறிப்பாகத் தமிழ் நாட்டில் பல நன்மையான காரியங்கள் ராஜாஜி அவர்கள் இம் மாகாணத்தில் தலைமை ஏற்றதிலிருந்து நடைபெறுகிறது. ஆறு வருடமாகப் பெய்யாத மழை இவ்வருடம் பொழிந்து தள்ளியது. மேட்டூர் நீர்த் தேக்கம் நிரம்பியிருக்கிறது. இந்தப் புதிய விஜய வருடத்தில் தமிழிசை வெற்றிக்கு அறிகுறியாக விளங்கும் அண்ணாமலை மன்றம் ராஜாஜி அவர்களால் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. முன் எப்போதும் கண்டிராத அளவு ஆஸ்திக உணர்ச்சி மக்களிடையே வலுப்பெற்றுள்ளது. இத்தனைக்கும் மேலாக ராஜாஜி அவர்கள் எழுதிய ராமகிருஷ்ண உபநிஷதத்துக்குப் பரிசுத் தொகை கொடுத்திருப்பது தமிழ் நாட்டுச் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களில் பொறிக்க வேண்டியதாகும்.

தமிழர்கள் பெருமைப்படும்படி இந்த ஆண்டில் மூன்று அரிய பெரிய காரியங்கள் நடந்திருக்கின்றன. அவையாவன: (1) தமிழிசை வளர்ச்சிக்காக அண்ணாமலை மன்றம் செயல்படத் துவங்கியது. (2) ஸ்ரீ எஸ். எஸ். வாசன் அளித்த “ஔவையார்”. (3) ராஜாஜியின் ராமகிருஷ்ண உபநிஷதத்துக்கு அளித்த கௌரவம்.

தேவகோட்டை
26—8—53 ஜெ. ராமமூர்த்தி

சமயா சமயங்களில் ராமலாலுக்கு எதிராக ஏதாவது இட்டுக் கட்டியாவது சொல்லி வந்தாள். மலைபோல் வளர்ந்து விட்ட பெண் மணமாகாமல் நிற்கிறாள் என்னும் இந்த விஷயத்தை நிலைக்களனாகக் கொண்டு இல்லாத பொல்லாத சிறுமைத் தனமான வார்த்தைகள் எல்லாம் பேசி வந்தாள். அவளும் ஒரு பெண் ஆகையால் மாதவப் பிரஸாதுக்கும் ராமலாலுக்கும் ஏற்பட்டுள்ள அந்தத் தொடர்பு நெருக்கமாவதற்கு மிக முக்கியமான காரணம் மனோரமாவாகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்தாள். அத்தகைய முக்கியமான காரணமாக மனோரமா திகழ்வதை நினைத்தாலே அவள் மனம் வேம்பாகக் கசந்தது. உண்மையில் மனத்துள் அவளைக் கரித்துக் கொட்டினாள். அவளோ ஒரு வேலைக்காரி. அவள் மனோரமாவிடம் அசூயை கொள்வதில் அர்த்த மில்லைதான். இருந்தாலும் மாதவப் பிரஸாதைத் தன் கைக்குள் போட்டுக் கொண்டு வீட்டில் தன் ஆட்சியை நிலைநாட்ட விரும்பிய அவள் அப்படி அசூயை காட்டிக் கரிப்பது இயல்புதானே?

எனவே, அவள் ராமலாலின் வார்த்தையை வெகு அலட்சியப் படுத்திவிட்டுப் பெண்ணைத்

வெற்றியின் ரகசியம்!

ஒரு பணக்காரக் கிழவரிடம் ஒரு வாலிபன் சென்று, "தங்களுடைய வெற்றியின் ரகசியம் என்ன?" என்று கேட்டான்.

"பொறுமையும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருப்பதும்தான்! இவற்றின் உதவியைக் கொண்டு உலகத்தில் ஆகாத காரியங்களும் ஆக்கிக் காட்டலாம்" என்றார் கிழவர்.

வாலிபனுக்கு ஒரு குறும்புத்தனம் தோன்றியது. "நீங்கள் சொல்லும் வகையில், நான் சொல்லும் காரியத்தை உங்களால் ஒரு நாளும் செய்ய முடியாது!" என்றான்.

"அப்படி முடியாத காரியம் என்ன?"

"சல்லடையில் தண்ணீரை நிரப்பிக் கொண்டு போக வேண்டும். உங்களால் முடியுமா?"

"ஏன் முடியாது! கட்டாயம் முடியும். தண்ணீர் உறைந்து பனிக்கட்டி ஆகும் வரை பொறுமையுடன் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் அதுவும் நடக்கும், அப்பா!" என்றார் கிழவர்.

தூக்கிக் கொண்டு வெளியே சென்றான். மாதவப்பிரஸாத் அதைக் கண்டதும் ஆத்திரத்துடன் உரத்த குரலில், "ஏ ஜடமே! அண்ணு சொல்வது காதில் விழ வில்லையா?" என்றார்.

ராமலாலின் பேச்சை அலட்சியப் படுத்தலாம். ஆனால் எஜமானரின் உத்தரவை அலட்சியப்படுத்தி மீறி நடக்க முடியுமா? லக்ஷ்மி மனத்துள் முணுமுணுத்துப் பொருமியவாறே உள்ளே வந்து கையிலிருந்த பெண் குழந்தையை மாதவப் பிரஸாதின் அருகில் விட்டுச் சென்றான்.

அன்றிரவு ஒரு நாள் நிகழ்ந்த சம்பவத்துக்குப் பிறகு மாதவப் பிரஸாத் லக்ஷ்மியிடம் பேசுவதையே பெரும்பாலும் நிறுத்திக் கொண்டிருந்தார். அவளிடம் அவருக்கு ஏதோ இனந் தெரியாத பயமும் திகிலும் இருந்து கொண்டே யிருந்தன.

பெண் குழந்தை தந்தையின் அருகில் உட்கார்ந்து கொண்டு, "அப்பா! கீழே விழுந்ததில் உங்களுக்கு ரொம்பக் காயம் பட்டு விட்டதா, என்ன?" என்று கேட்டாள்.

"இல்லை, இல்லை! சின்னக் காயம்தான். சீக்கிரம் ஆறிப் போய் விடும்!" என்று பதில் அளித்தார் மாதவப் பிரஸாத்.

தகப்பனும் பெண்ணும் பேசத் தொடங்கவே, ராமலால் வீட்டுக்குப் போகும் எண்ணத்துடன், "சரி, நான் போய் வரட்டுமா?" என்று கேட்டார்.

"சரி, போய் வாருங்கள். வீட்டின் நிலைமை இப்படி யிருக்கிறது. என்ன செய்வேன்? மன்னியை நடு நடுவே இந்தப் பக்கம் அனுப்பி வையுங்கள். இங்கேதான் வீட்டைக் கவனித்துக் கொள்ள யாரும் நாதி கிடையாது. உங்களைத்தான் நம்பி யிருக்கிறேன்!" என்றார் மாதவப் பிரஸாத், தம் வீட்டைக் கவனித்துக் கொள்ள யாரும் இல்லாமையையும் தம்மால் இயலாமையையும் குறிப்பாகத் தெரிவித்துக் கொள்ளும் பாவனையில்.

"சுபத்திராவை அனுப்புகிறேன். நானும் அடிக்கடி வந்து கவனித்துக் கொள்கிறேன். பயப்படவேண்டாம். அவசியம் ஏற்பட்டால் நான் வேண்டுமானால் இங்கேயே தங்கிவிடுகிறேன்!" என்றார் ராமலால்.

"வேண்டாம், வேண்டாம்! அவ்வளவு சிரமம் வேண்டாம். வீடு இருக்கிற நிலைமை தான் உங்களுக்குத் தெரிந்திருக்கிறது. குடித்தனம் ஒரு ஒழுங்கு முறையாக நடந்தால் அல்லவா?" என்றார் மாதவப் பிரஸாத்.

ராமலால் விடை பெற்றுக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டார். லக்ஷ்மி கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டாள். வழி நெடுக 'மாதவப் பிரஸாதின் குடும்பம் கெட்டு இப்படிக் குட்டிச் சுவராகிக் கொண்டிருக்கிறதே! என்ன செய்வது?' என்று சிந்தித்தவாறே ராமலால் நடந்தார்.

அந்தச் சிந்தனையைத் தொடர்ந்தாற் போலவே, அவருக்கு மனோரமாவின் நினைவு வந்தது. 'மாதவப் பிரஸாதுக்கு மனோரமாவை மணம் செய்து வைத்து விட்டால் என்ன கெடுதல்?' என்று எண்ணினார் அவர். வீடு போகும்வரை அந்தக் கேள்வி அவரையே சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

வீடு வந்து சேர்ந்ததும் சுபத்திராவிடம், "மனோரமாவை மாதவப் பிரஸாதுக்குக் கல்யாணம் செய்து வைத்து விட்டால் என்ன?" என்று கேள்வியை வியக்தமாகக் கேட்டே விட்டார் ராமலால்.

"நானும் வெகு நாட்களாக இதைத்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் அவர் சம்மதிப்பாரா? பணம் படைத்த பெரிய மனிதராயிற்றே!" என்றாள் சுபத்திரா.

அதைக் கேட்ட ராமலாலின் முகம் ஒரேயடியாக உலர்ந்து களையிழந்து விட்டது. "நாமும் ஒரு நாள் பெரிய மனிதர்களாகத் தானே இருந்தோம்? விதி வசத்தால் இப்பொழுது இல்லா விட்டால் என்ன? நான் சொன்னால் அவர் மறுதளிக்க மாட்டார் என்று தான் எண்ணுகிறேன்" என்றார்.

"எனக்கு நம்பிக்கை உண்டாக வில்லை. சந்தேகமாகத்தான் இருக்கிறது. எத்தனையோ பெண்கள் கல்யாணத்துக்கு வந்தன. மாட்டேன் என்று சொல்லி விட்டார். நமக்கு மட்டும் எப்படிச் சம்மதம் தெரிவிப்பார்?" என்று கேட்டாள் சுபத்திரா.

"மனோரமாவையும் கேட்டு அவள் மனத்தைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?"

"கட்டாயம் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும். அவள் விசித்திர சுபாவம் படைத்த பெண். அவள் சரி என்று சம்மதம் தெரிவிப்பாளா? மாட்டேன் என்று மறுப்பாளா? யார் கண்டார்கள்?" என்றாள் சுபத்திரா.

தாயும் தகப்பனும் பெண்ணின் கல்யாண விஷயத்தில் கவனத்தைச் செல்ல விட்டுப் பலவிதமாக மூளையைக் குழப்பிக் கொள்ளலாயினர். மனோரமாவின் மனம் அவர்களுக்குப் பிடிபட்டால் தானே? (தொடரும்)

யோகாசன சிகிச்சை

வி. என். குமாரஸ்வாமி

4. தீராத வியாதிகள் தீருகின்றன

ஜுரங்களுக்கு ஆசனம் உபயோகமாகாது. அம்மை வந்தால் பிரயோஜனப்படாது. காலரா போன்ற தொத்து நோய்களுக்கும் பயனில்லை. தலைவலி, வயிற்று வலி, காது வலி, கண் வலி போன்ற வலிகள் இருக்கும் போதும் ஆசன சிகிச்சை கூடாது. எதிர்பாராத விபத்துக்கள் நடந்தாலும் ஆசனத்தை அண்ட முடியாது. பிறவிக் குறைகள் நீங்காது. பின் எதற்குத்தான் ஆசனம் உபயோகமாகப் போகிறது! என்னமோ மிகப் பிரமாதமாக ஆசன சிகிச்சையை நாடுங்கள்; யோகாசன சிகிச்சைதான் மற்றெல்லா சிகிச்சையைக் காட்டிலும் மிக சிரேஷ்டமானது என்று இதுவரை சொல்லி வந்து இப்பொழுது மெது வாய்க் கைநழுவ விடுகின்றீரே என்று சிலர், ஏன் அநேகர் நினைக்கலாம்.

உண்மையை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியிருக்கின்றது. ஜுரம் வந்து காயும்போது 'யாராவது ஆசனம் செய்யுங்கள். எல்லாம் பறந்துவிடும்' என்று சொன்னால், அவர்களைப் பைத்தியக்காரப் பட்டியலில் சேர்க்க வேண்டியதுதான். எதெதற்கு எந்தச் சமயத்தில் எது தேவையோ அதைச் செய்வது தான் நியாயமும், புத்திசாலித் தனமுமாகும். ஏற்கெனவே ஆசனங்கள், பிராணாயாமம், ஆகார நியமங்கள் ஆகியவற்றை அனுசரித்து வந்திருந்தால் இம்மாதிரி நோய்கள் எல்லாம் வரவே வராது. அப்படி ஏதாவது சிறிது அஜாக்கிரதையினால் வந்தாலும், மற்றவர்களைப் படுத்துவதைப் போலப் படுத்தாமல், மிக லேசாய், சுலபமாய் ஏதோ சொற்ப மருந்துப் பிரயோகத்தில் விலகி விடும். சிலருக்கு மருந்தேகூட அவசியமிருக்காது. சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டாலே போதுமானதாய் இருக்கும்.

ஆனால் ஆசனங்களே செய்து அறியாதவர்களுக்கு இம்மாதிரி நோய்கள் வந்தால், மருந்தினால் முதலில் குணமாக்கிக் கொண்டு, பிறகும் இம்மாதிரி அடிக்கடி வராமல் இருக்கவும், ஏற்கெனவே உண்ட, பிரயோகித்த மருந்துகளினால் வேறு நோய்கள் வராமல் இருக்கவும், யோக ஆசன சிகிச்சையைக் கைக் கொள்ளலாம். என்றும், எப்பொழுதும், எந்த நோய்களும் வராமல் சுகமாய், ஆனந்தமாய், அவரவர்களின் காரியங்களை அவரவர்கள் செய்து கொண்டு போகலாம். அது வந்து விடுமோ, இது வந்து விடுமோ, என்ற பயமே கிடையாது. சாதாரணமாய் எவ்வளவு காரியங்களை இவர்கள் ஏற்கெனவே செய்து வந்தார்களோ, அதைவிட இரண்டத்தனை—ஏன்! பன்மடங்கு செய்ய முடியும். சோர்வு, களைப்பு என்பதே இவர்கள் அகராதியில் காணக் கிடைக்காது. எதிலும் ஒரு சுறுசுறுப்பு, தெளிவு, ஊக்கம் ஆகியவைகளுடன் காரியம் செய்யத் தூண்டும். இவைகள்தான் யோக சிகிச்சையின் பலன். யோகாசன சிகிச்சையானது வெறும் நோய்களை மட்டும் தடுப்பதில்லை; வராமல் பாதுகாப்பதோடு மட்டும் நிற்பதில்லை. அது மனத்திற்கும், அதன் மூலம் ஆன்மாவிற்கும் குணமளிப்பதால்தான் இம்மாதிரி அபூர்வமான பலன்கள் உண்டாகின்றன. வெறும் மருந்தை மட்டும் சாப்பிடுவதால் இது கிட்டுவதில்லை. தவிர, மருந்தை எல்லோரும் விரும்பியா சாப்பிடுகின்றனர்! வேண்டா வெறுப்பாக, 'என்ன செய்வது! சாப்பிட்டுத்தானே ஆக வேண்டும்!' என்றே சாப்பிடுகிறார்கள். அப்பொழுது முதலில் மனம் கெட்டு விடுகின்றது. மற்றும் ஊசிகள், மருந்துகள் சதா உபயோகிக்கிறவர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அவர்கள் மனம் எச்சிலையில் இருக்கும்! உலகில் வாழவே விருப்பம் இருக்காது. யார் பேரிலும் எரிந்து விழுவார்கள். மனமே இப்படி என்றால், இவர்கள் ஆன்மா எப்படி யிருக்கும்! எனவே, மருந்தை மருந்தாகத்தான் உபயோகிக்க வேண்டுமென்று சொல்லுகிறோமே தவிர, மருந்தே கூடாது என்று சொல்லவில்லை. சதா அதனுடன் வாழுவது சரியல்ல. 'மற்ற யோகாசன சிகிச்சை அந்தச் சமயம் பலனளிக்காது, மருந்துதான் உபயோகிக்க வேண்டும்' என்ற நிர்ப்பந்தமான நிலை யேற்பட்டாலொழிய மருந்தை நாடக் கூடாது. அம் மருந்தும் ஒரு கால அளவிற்குள் சாப்பிட்டு முடித்து விட்டு, பிறகு யோகாசன சிகிச்சைக்கே திரும்பி விட வேண்டும். அப்பொழுதுதான் வாழ்க்கையில் கரையேற முடியும். இல்லையானால் மருந்தானது கரையேற முடியாமல் அமிழ்த்தி விடும்.

மேற்சொன்ன வியாதிகளெல்லாம் மிக மிகச் சாதாரணமானவை. மிகச் சுலபமாய் மருந்துகளினால் போக்கடித்துவிடக் கூடியவை. ஆனால் எத்தனை மருந்துகளை உபயோகித்தாலும் எத்தனை ஊசிகளைப் போட்டுக் கொண்டாலும், எந்த வைத்தியத்திற்கும் அடங்காமல், குணமாகாமல் சில சமயம் குணமாவதுபோல் ஆகிப் பிறகு முன்னைவிட அதிகமாகத் தன் சொரூபத்தைக் காட்டும் மிகக் கொடுமையான நோய்கள் பல இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் சரியான மருந்துகள் இன்னமும் கண்டுபிடிக்கப் படவில்லையென்னும் உண்மையை ஒப்புக் கொள்ளும் டாக்டர்களாகட்டும், வைத்தியர்களாகட்டும், மற்றும் யாராகட்டும் இதனை ஒப்புக் கொண்டுதான் தீருவார்கள்.

ஆஸ்துமா என்ற நோயை எடுத்துக்கொள்ளுவோம். இதை முற்றிலும் மருந்துகளினால் குணமாக்க முடியாது. மருந்துகளினால் தற்கால சாந்தி அளிக்கலாம். உடற் பயிற்சியினால்தான் பூரண குணமளிக்க முடியும் என்பது 1925-ம் வருஷத்தில் லண்டன்மா நகரில் கூடிய ஆஸ்துமா பரிசோதனைக் கமிட்டியார் தீர்மானம் அளித்துவிட்ட ஒரு பழைய விஷயம். இவ் வியாதி யோக சிகிச்சையில் மிக எளிதாய்ப் போய்விடுகிறது என்பதற்கு எத்தனையோ சான்றுகள் காட்ட முடியும்.

நீரிழிவு வியாதி வந்தவர்கள் தங்கள் மீதி வாழ் நாட்களையெல்லாம் சதா இன்ஸுலின் ஊசிகளைக் குத்திக் கொண்டும், வாயை அடக்கிக் கொண்டும் இருக்க வேண்டுமென்று இன்றைய நாகரிக வைத்தியம் சொல்லுகிறது. ஆனால் யோகாசன சிகிச்சை முறையினால் இதை ஒரு சிறு பிள்ளையைப்போல அடக்கிவிட முடியும். சில நாட்களில், சில மாதங்களில் மிக எளிதாய்க் குணமாக்கிவிட முடியும். ஆல்புமின் (நீரில் உப்பு) என்பதும் அவ்வாறே அடங்கிவிடக் கூடியதுதான்.



'' என் பையனை எந்த வேலைக்கு அனுப்பினாலும் அங்கு ஒட்டிக்கொண்டே இருக்க மாட்டேன் என்கிறான். வந்து விடுகிறான்.''

'' அப்பொழுது அவனைக் கோர்ந்துத் தொழிற்சாலைக்கு அனுப்பிப் பாருமே...''

'' அங்கும் அனுப்பிப் பார்த்தேன். அங்கிருந்து பிய்த்துக் கொண்டு வந்து விட்டான்.''

பாரிச வாயு, கீல் வாதம் முதலியவைகளைப் பற்றி எல்லோரும் அறிந்ததே. ஆங்கில வைத்தியம் முடிந்தவரை பார்த்துப் பிறகு கைவிட்டு விட்ட கேஸுகள் அநேகம். நாட்டு வைத்தியத்தினால் ஆரம்ப நோய்களைக் குணமாக்க முடிகின்றதே தவிர முற்றினவைகளுக்கு ஒன்றும் செய்ய முடிவில்லை. எத்தனையோ பேர்கள் நடமாட முடியாமல், படுத்த படுக்கையிலேயே தங்கள் மீதி வாழ்நாட்களைச் சீக்கிரம் முடிக்கும்படி கைவிடப் படுகிறார்கள். யோகாசன சிகிச்சையினால் அவர்களுக்குக் குணமளிக்க முடிகின்றது.

க்ஷயம் :—இன்றைய உலகத்தில் அதுவும் நமது நாட்டில் இது பெரிய தீராப் பிரச்னை. பல அற்புத மருந்துகள் வருகின்றன, போகின்றன! ஆனால் பணக்கார வியாதியாகிய இதனை மற்றவர்கள் எப்படிப் போக்கடிக்க முடியும்! ஒரு ஊசி மருந்து ரூ. 15, 20 கொடுத்து போட்டுக் கொள்ள வேண்டுமே! அப்படியும் பூரண குணம் என்று சொல்லுவதற்கில்லை. A. P. ஊசி (பிராணவாயுப் பிரயோகம்) ஸ்டெப்டோமைஸின் முதலியவையெல்லாம் நடக்கும் பூரண பலன் காணமுடியாமல், ஒரு பக்கம் பயங்கரமாய்ப் பரவி வருகின்றது. இவைகளுக்கு யோக சிகிச்சை தஞ்சம் அளிக்கின்றது. தடுக்கும் முறையில் யோக சிகிச்சையைவிடச் சிரேஷ்டமானது, உத்தமமானது வேறு ஒன்று இருக்க முடியாது என்று உத்தரவாதமளிக்க முடியும்.

குஷ்டம் :-இதைப்பற்றி என்னத்தைச் சொல்ல! நினைக்கவும் முடியவில்லை! துக்கம் நினைவைத் தடுத்துத் தடை செய்து விடுகின்றது. எத்தனையோ மருந்துகள், ஊசிகள், லேபனங்கள், சல்பர் மருந்துகள் இத்தனைக்கும் இந்த வியாதி ஏமாற்றி வருகின்றது. ஏதோ ஒரு சிறிதளவு பலனே தவிர, முற்றிலும் நீங்கினபாடில்லை. யோக ஆசன சிகிச்சையினால் எத்தனையோ பேர்கள் குணப்படுத்தப்பட்டுப் புது மனிதனாக்கப் பட்டிருக்கிறார்கள். போதிய சந்தர்ப்பமும், வசதியும் இருந்தால் யோக சிகிச்சையினால் இவைகளை ஒழிக்கலாம். மேலும் பரவாமல் தடுக்கலாம்.

கல்லீரல், மூத்திரக்காய், மண்ணீரல் கோளாறுகளுக்குச் சரியான மருந்தில்லையென்று வைத்திய உலகம் கைவிரித்து விட்டது. ஆனால் யோக சிகிச்சையில் இது குணமாகின்றது.

டான்ஸில், அடினாயிட்ஸ், அப்பெண்டிஸிடிஸ், அல்சர், மூலநோய் ஆகிய இவைகளுக்கு ஆப்பரேஷனே கதி என்று நிச்சயமாய் விட்டது. ஆனால் ஆப்பரேஷனில்லாமல் எவ்வளவு கடினமான நிலைமையிலும் யோக சிகிச்சை அளித்தால் குணமாக விடுகின்றது என்பது கண்கூடாய்க் கண்ட விஷயம்.

இருதயக் கோளாறுகள், இரத்த அமுக்கம் ஆகிய இவை மிக அபாயமானவை; மிக ஜாக்கிரதையாய்க் கவனிக்கப்பட வேண்டிய வியாதிகள் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளுகின்றார்கள். ஆனால் எச்சரிக்கையும், ஜாக்கிரதையும் அளிக்கப் படுகின்றனவே தவிர. நோய் விலகச் சரியான மார்க்கம் தெரியாமல் தடுமாறுகின்றனர். ஏனெனில் எப்பேர்ப்பட்டவர்களையும் இந் நோய்கள் ஏமாற்றி விடுகின்றன. ஆனால் யோக சிகிச்சையில் நேர்ப் பார்வையில் சிகிச்சை அளித்தால் எத்தனையோ நோயாளிகளை மீட்டு விடலாம்.

வாதங்களில் பலவிதம். எல்லாம் அந்தந்த பாகங்கள் வழக்கப்படி வேலை செய்ய மறுத்தலே காரணம். மருந்து என்னும் சாட்டையினால் அடித்தடித்து விரட்டப் பார்க்கிறார்கள். மருந்து வேகம் இருக்கும் வரை சிறிது குணம் போலக் காண்கிறது. பிறகு முன்னிலும் சண்டித்தனம் செய்கின்றது. ஆனால் யோக சிகிச்சை அப்பாகங்களுக்கு உகந்தபடி இயற்கை சிகிச்சையளித்துப் புத்துயிர் கொடுக்கிறது.

மலட்டுத் தனத்தை நீக்கும் மருந்து இருப்பதாகத் தெரியவில்லை. மேக வியாதிகள், எக்ஸிமா, ஆண்மை அழிவு, தாது பலமின்மை இவைகளுக்கு நிரந்தரமான பலன் அளிக்கக் கூடிய வைத்தியம் இருக்கிறது என்று சொல்ல முடியாது. எல்லாம் மருந்து உபயோகத்தில் இருக்கும் வரைதான் குணம்போலத் தோன்றும். மற்ற சிகிச்சைகளனைத்தும் எப்பொழுதும் மருந்துகளையே சாப்பிடும்படி சொல்லுகின்றனவே தவிர வேறு மார்க்கம் காட்டுவதில்லை. மக்கள் விழுங்கவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். யோக மார்க்கம் அவர்களைக் கைகாட்டி அழைக்கின்றது, நிச்சயம் பலன் அளிக்க முடியும் என்ற உத்தரவாதத்துடன்.

நீராத் தலை வலிகள், மலச் சிக்கல், அஜீரணம், வயிற்றுக் கடுப்பு, கிளாண்ட் கோளாறுகள், கிளாண்ட் கட்டிகள், செவிட்டுத் தனம், தூரப் பார்வை, இளம் பிள்ளைவாதம் முதலியவைகளுக்கு மற்றச் சிகிச்சைகளை விட யோக சிகிச்சையை நாடுபவர்களுக்கு விமோசனமுண்டு.

பெண்களுக்கு உண்டாகும் கர்ப்ப சம்பந்தமான கோளாறுகள், வீட்டு விலக்கு சம்பந்தமான கோளாறுகள் முதலியவைகளுக்கு யோக சிகிச்சை தான் நேரான மார்க்கம்.

மற்றும் ஹிஸ்டீரியா, காக்காய் வலி, சில மூளைக் கோளாறுகள் முதலியவைகளுக்கு யோக சிகிச்சை போதிய பாதுகாப்பாகும். (தொடரும்)



அம்மாவும் நானும் விரும்புவது....

உலகத்திலேயே குழந்தைகளுக்கேற்ற ஆகாரங்களைத் தயாரிப்பதில் கைதேர்ந்தவர்களான நெஸ்ல்ஸால் தயாரிக்கப்பட்ட லாக்டோஜனே யாகும். என் தாயார் அதை விரும்புவதற்குக் காரணம் அதில் விடமின்களும், இரும்புச் சத்துக்களும் சேர்ந்திருப்பதேயாகும். விடமின் 'A' சரீரத்தை கிருமிகளிலிருந்து பாதுகாப்பதற்கும், விடமின் 'D' நல்ல பற்கள் வளருவதற்கும், இரும்புச் சத்துக்கள் இரத்த புஷ்டிக்கும், சிறந்தது.

நான் லாக்டோஜனை விரும்புவதற்குக் காரணம், அது ருசியுள்ளதாயிருப்பதுடன், எளிதில் ஜீரணமாகி விடுகிறது. மேலும் இதை சீக்கிரமாக தயாரிக்க முடிவதால், பசித்தவுடன் சாப்பிட முடிகிறது. என் சிநேகிதர்கள் எல்லோரும் லாக்டோஜனை விரும்புகிறார்கள். இந்த ஒரு விஷயத்தில் தான் அவர்களுடைய தாயார்களும், அவர்கள் சொன்னதை சரி என்கிறார்கள்.



NESTLÉ'S **LACTOGEN**

குழந்தைகளுக்குச் சிறந்த ஆகாரம்.

எங்களுடைய இலவச லாக்டோஜன் புஸ்தகத்தை படியுங்கள். இந்த கூபனில் உங்களுடைய பெயரையும், முழு விலாசத்தையும் எழுதி

நெஸ்ல்ஸ் பிராடக்ட்ஸ் (இந்தியா) லிட்.,
தபால் பெட்டி 180, மதராஸ்.

என்ற விலாசத்திற்கு இன்றே போஸ்ட் பண்ணுங்கள்.

பெயர்...

விலாசம்...

....



நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர்

5

அந்த உணவு விடுதியில், இலவச உணவு பெற்றவர்களைப் பற்றிய உண்மை இதுதான். அதாவது கட்டுமஸ்தான தேகங் கொண்டவர்களாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்து அவர்களை வாடகைக்கு ஏற்பாடு செய்திருந்தனர். இவர்களுக்கே தினம் உணவு பரிமாறப்பட்டு வந்தது. மூன்று நாட்களுக்கு ஒரு தடவை இவர்களை வெவ்வேறு கூட்டத்தினருடன் புகைப்படங்கள் எடுத்துத் தேசத்திலுள்ள பல பத்திரிகைகளுக்கு அனுப்பப் பட்டு வந்தன. அப்படி அனுப்பும்போது, 'இத்தகைய தர்மப் பிரபு இல்லையென்றால், இன்னும் எத்தனை கோடிக் கணக்கான மக்கள் பட்டினியால் மடிந்திருப்பார்களோ, அதைத் தடுத்த புண்ணியவான் இவர்தான்' என்று ஒரு குறிப்பும் அப்படங்களுடன் பிரசுரிப்பதற்கு எழுதி வைப்பார்கள்.

இதைக் கேள்வியுற்ற போது கிருஷ்ண மூர்த்தியின் நெஞ்சம் துடித்தது! ஏற்கெனவே இந்தப் பயங்கர உற்பாதத்தைக் கண்டு, தன்னால் ஒன்றும் செய்ய முடியவில்லையே என்ற ஏக்கம் கொண்டிருந்தான். அதனிடையில் இது வேறு என்றால் கேட்க வேண்டுமா? "தினந்தோறும் என் சகோதரர்களும் சகோதரிகளும் மடிந்து வருகின்றனர். என் கண் எதிரில் பிணங்கள் கல்கத்தா தெருக்களில் விழுந்த வண்ணம் இருக்கின்றன. என்னால் இதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லை. நான் கடவுளை இறைஞ்சி வேண்டிக் கொண்டு விட்டேன். ஒரு பலனையும் காணவில்லை. இதைவிட பெரிய கஷ்டம் வேறு ஒன்றும் எனக்கு நேருவதற்கில்லை!" என்று கதறினான்.

அந்தச் சமயத்தில், இதோ எழுதியிருந்த கடிதத்தைத் தபால்காரர் கொடுத்து விட்டுப் போனார். கிருஷ்ணமூர்த்தி அதைத் திறந்து படித்தான். "ஆ! தெய்வமே!" என்று கத்தி விட்டு மூர்ச்சையாகி விழுந்து விட்டான்.

ஹரி, "ஒன்றுமில்லை ஹரேன்! ஓய்வு ஒழிவின்றி அப்பா வேலை செய்ததினால் ஏற்பட்ட இரத்த அழுக்கத்தின் விளைவு" என்று சொல்லிக் கொண்டே தந்தையின் அருகில் சென்றான்.

"இல்லை, அந்தக் கடிதத்திலிருந்த விஷயம் தான் அப்பாவை அப்படி மயக்கமடையச் செய்திருக்கிறது! அந்தக் கடிதத்தில் என்ன எழுதி யிருக்கிறதென்று பார்ப்போம்" என்றான் ஹரேன்.

இருவரும் கீழே விழுந்து கிடந்த கடிதத்தை எடுத்துப் படிக்கலானார்கள்:

அன்பே,

நீங்கள் இதுவரை அனுபவித்திராத அதிர்ச்சியை இக் கடிதம் அளிக்கும். நம் பிரேமா, சங்கரனைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று பகிரங்கமாகக் கூறி விட்டாள். அவன் நல்ல பையன்தான். ஆனால் அவன் ஹரிஜனப் பையன். என் தாயாரின் ஜோசியம் உண்மையாகி விட்டது. என்னால் இதைத் தாங்க முடியவில்லை. நான் பிரேமாவுக்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்தாகி விட்டது. அவள் பிடிவாதமாக இருக்கிறாள். சங்கரனைத்தான் கல்யாணம் செய்து கொள்வாளாம். காட்டுத் தீ போல் இச்செய்தி எங்கும் பரவி விட்டது. அம்மா ஒரே அடியாய்க் கத்திக் கொண்டிருக்கிறாள். அப்பாவோ, தாங்க முடியாத கோபத்தினால் வாயை இறுக்கி மூடிக் கொண்டிருக்கிறார். எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தற்கொலை செய்து கொள்ளாத குறைதான்! எனக்குப் பிறகு உங்களைக் கவனிப்பார் யார்? சீக்கிரம் நீங்கள் புறப்பட்டு வாருங்கள். ஹரியையும் ஹரேனையும் அழைத்து வராதீர்கள்!

இந்தக் கடிதத்தைப் படிக்கப் படிக்க அவர்கள் நெஞ்சில் ஏதோ பாரம் அழுத்துவது போலிருந்தது. கடிதம் படித்து முடித்தான பிறகு தந்தையைத் தெளியச் செய்யும்

நல்ல திட்டம்

புதிய கல்வித் திட்டமானது எங்கள் பள்ளியில் விரும்பத்தக்க மாறுதலை ஏற்படுத்தியுள்ளது. எங்கள் ஊர் முஸ்லிம்கள் மிக்கது. அவர்களில் சிலர் கொடிக்காலில் வேலை செய்வதால் பிள்ளைகள் பள்ளிக்கு வருவது மிகவும் தடைப் பட்டது. வீட்டு வேலை காரணமாக ஆஜர் குறைவாக இருந்தது. ஆனால் ராஜாஜி அவர்களின் புரட்சிகரமான புதிய கல்வித் திட்டம் வந்தது முதல், எல்லாப் பையன்களும் பாதிவேளை கொடிக்கால் வேலை, வீட்டு வேலைகளைக் கவனித்து விட்டுப் பாதிவேளை தவறாமல் பள்ளிக்கு வருகின்றனர்.

நாட்டின் பொருட்டுத் தள்ளாத வயதில் ராஜாஜி தலைமை தாங்கி அரசாட்சி நடத்தும்போது கேவலம் ஒரு மணி அதிக உழைப்புக்கு ஆசிரிய இனம் ஒருநாளும் பின்வாங்காது என்று ஆசிரியர்களின் சார்பிலே கூற விரும்புகிறேன்.

சங்கரம் பந்தல் எஸ். கே. ஸ்ரீநிவாஸன்.
11—9—53 (பள்ளி ஆசிரியர்)

காரியத்தில் ஈடுபட்டனர். கிருஷ்ணமூர்த்தி நினைவு வந்ததும் கூறிய மொழிகள் இவை தான்: "ஹரா, நான் வருகிறேன். என் வார்த்தையைக்கூடப் பிரேமா கேட்க மாட்டாள் என்று நினைக்கிறாய்?"

"அப்பா, சங்கரனுக்குப் பிரேமாவைக் கொடுத்தால் என்ன தவறு? நீங்கள் என்ன, எல்லாப் பிராமணர்களும் சங்கரனைவிட மேலாக இருப்பதாகவா நினைக்கிறீர்கள்?" என்று கேட்டான் ஹரேன்.

"இல்லை; அவன் எத்தனையோ பிராம் மணர்களைவிட மேலானவன் தான். இது எனக்குத் தெரியும். ஆயினும், இத்தகைய சம்பந்தத்தை அலட்சியமாகப் பார்க்கும் அளவுக்கு என் மனம் இன்னும் பக்குவப்பட வில்லையே" என்றான் கிருஷ்ணமூர்த்தி.

"அப்பா, நீங்கள் எவ்வளவோ முன் னேற்ற மடைந்தவர்கள் என்று கருதினோம். நீங்கள் சாதி சமய மத இன வேறுபாடுகளைப் பொருட்படுத்த மாட்டீர்கள் என்று நினைத் தோம்" என்று இருவரும் ஒரே குரலில் கூறினார்கள். மேலும், "ஏன், நீங்கள் போன வருஷம்கூட, அந்தப் பிராமண அமங்கலி, அந்த பிராமணரல்லாத மில் முதலாளியை விவாகம் செய்து கொண்ட போது அந்தக் கல்யாணத்திற்குக் கூடப் போயிருந்தீர் களே?" என்றார்கள்.

"ஆமாம்; என்னைப் பற்றி ரொம்பவும் முற்போக்கானவன் என்று எல்லோரும் நினைத்தார்கள். வாஸ்தவம். நான் கூட என்னைப் பற்றி அப்படித்தான் ஒருசமயம் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் இப் பொழுதுதான் எனக்குக் கடும் சோதனைக் காலம் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சோதனையில், என்னை வைதிக சநாதன கோஷ்டியாரை விட்டு அப்படியொன்றும் அதிகமாக நான் முன்னேறி விடவில்லை, ஒரு மயிரிழைதான் முன்னேறியிருக்கிறேன் என்பதை யுணர்ந்து கொண்டேன்" என்றான் கிருஷ்ணமூர்த்தி.

"அம்மா!" என்றான் ஹரேன்.

"அவன் என்னைவிடக் குறுகிய மனப் பான்மை கொண்டவள். ஆனால் எல்லாப் பெண்களுமே அப்படித்தான். மனித குலத் தின் தாய்மார் என்ற வகையில், அவர்கள் அவ்வாறு இருப்பதில் அதிசயமில்லை. என் நம்பிக்கை யெல்லாம் சங்கரனிடம் தான் வைத்திருக்கிறேன். 'பிரேமாவை நீ கல்யா ணம் செய்து கொள்ளாதே' என்று நான் சொன்னால் அவன் கேட்பான் என்றுதான் நம்பி இருக்கிறேன்" என்றான்.

"இப்படிச் சொல்வது கேவல மில்லையா, அப்பா? அவன் பெரியாண்டியின் பேரன், அவன் நம்முடைய கம்பனிக்குப் பல ஆண்டு களாக இருந்திருக்கிறான். அவனை நாம் உள்ளும் புறமும் அறிந்திருக்கிறோம். அவன் உங்கள் வார்த்தையைக் கேட்பான். ஆனால் அவன் அவளைக் காதலிக்கிறான் என்பதையும் நாம் அறிவோம். இந்நிலையில் அவனை நாம், பிரேமாவைக் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது என்று வாக்களிக்கச் சொல்வது அவனுக்கு ரொம்பவும் கஷ்டமாக இருக்கும்" என்று கூறினான் ஹரி.

"அர்ஜுனன் வில்லாளிகளில் சிறந்தவனாக விளங்க வேண்டும் என்பதற்காக, துரோணர் ஏகலைவனின் கட்டை விரலைக் கேட்டார். நானும் என் ஹிதாவைக் காப்பாற்றுவதற் காகச் சங்கரனை, பிரேமாவைத் தியாகம் புரியச் சொல்லிக் கேட்கிறேன்......போதும் இத்துடன் இந்தப் பேச்சை நிறுத்திக் கொள் வோம். இல்லையெனில் மறுபடியும் இரத்தக் கொதிப்பு ஏற்பட்டு மூர்ச்சையாகி விழுந் தாலும் விழுந்து விடுவேன்!" என்றான்.

"அப்பா, உங்களுக்கு இரும்பு நெஞ்சம் இருப்பதாக அல்லவா இதுவரையில் நினைத் திருந்தேன்?" என்றான் ஹரேன்.

"எனக்குப் பஞ்சு இதயம்கூட இல்லை. ஹிதா எனக்குப் பக்கபலமாக நிற்கவில்லை என்றால் அந்நாட்களில் சநாதனிகள் புரிந்த எதிர்ப்பில் எனக்குப் பைத்தியம் பிடித்திருந்தாலும் அதிசயமில்லை. அவளுடைய உதவியினா லேயே என் லட்சியத்தில் நான் திடமாக இருக்க முடிந்தது. இப்பொழுது நான் என்ன பார்க்கிறேன் என்றால் அவள் எனக்கு உதவி புரிந்து, புரிந்து அவளுக்கு நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டு விட்டது. நான் எப்படி அவளுக் குத் தைரியம் கூறி நேராக நிற்கச் செய்யப் போகிறேன்? சந்திரன் எப்பொழுதாகிலும் சூரியனிடமிருந்து தான் பெற்ற ஒளியைத் திருப்பிக் கொடுத்ததாகக் கேள்விப் பட் டிருக்கிறீர்களா? கிடையாது. எனினும் முதலில் நான் ஊருக்குப் போய் அவள் பக்கத்திலாகிலும் இருக்கிறேன்" என்றான்.

"அப்பா, எங்களை ஏன் வர வேண்டாம் என்று எழுதி யிருக்கிறான், அம்மா?" என்று கேட்டான் ஹரேன்.

"ஒரு வேளை உங்களுக்கெல்லாம் இந்தக் கஷ்டத்தை யளிப்பானேன் என்று எண்ணி யிருக்கலாம்..." என்றான் கிருஷ்ணமூர்த்தி.

"ஒருவேளை நாங்களும் பிரேமா—சங்கரன் கட்சியில் சேர்ந்து பேச ஆரம்பித்தாலும் ஆரம்பிக்கலாம் என்ற எண்ணம் இருக்கலாம், இல்லையா?" என்றான் ஹரி.

"அப்படியும் இருக்கலாந்தான்" என்று கூறினான் கிருஷ்ணமூர்த்தி.

மறுநாள், கிருஷ்ணமூர்த்தி சொந்த ஊருக்குத் திரும்பிப் போக, தன் அருமைக் ஜோதாவினிடம் போக, ரயில் ஏறி விட்டான்.

அங்கே ஜோதா நரம்பு தளர்ந்து அப்படியே படுத்த படுக்கையாகக் கிடப்பதைப் பார்த்தான். ஆச்ரமம் களையிழந்து காணப்பட்டது. கிருஷ்ணமூர்த்தி பிரேமாவுடன் சங்கரனை மணக்க வேண்டாம் என்பதற்காகச் சற்று தர்க்கம் புரிந்து பார்த்தான். ஒரு பயனுமில்லை. "மனிதன், மனிதன்தான்! அதை விட உயர்ந்த நிலை என்ன இருக்க முடியும்?" என்று கிருஷ்ணமூர்த்தி முன்பு கூறி வந்த அடிப்படைக் கொள்கையை அவனுக்கே திருப்பிச் சொன்னாள் பிரேமா.

சங்கரனிடம் தன் மனத்தை வெளியிட்டான் கிருஷ்ணமூர்த்தி. பிரேமாவின் பெற்றோர்கள் அவள் கல்யாணத்துக்குச் சம்மதம் தெரிவிக்கும் வரையிலோ, அல்லது பெற்றோர்கள் உயிர் துறக்கும் வரையிலோ சங்கரன் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொண்டான். சங்கரன் இதற்கு ஒப்புக் கொண்டான். பிரேமாவினிடம், "வாழ்க்கை என்பது நீண்டதோர் தியாகம்" என்றான் சங்கரன்.

பிரேமாவுக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது. கண்களில் கண்ணீர்த் துளிகள் திரையிட்டு நின்றன. "உங்கள் வாழ்க்கை மட்டுமா, பிறர் வாழ்க்கையும் கூடவா?" என்று கேட்டாள்.

"தியாகம் நடக்கையிலே எது நம் வாழ்க்கை, எது பிறர் வாழ்க்கை என்று பிரித்துக் கூறுவது மிகவும் சிரமம்; அப்படிப் பிரிக்க முயல்வது அனாவசியமும் கூட!" என்றான் சங்கரன்.

ஜோதா பரிபூரணமாக உடல் தளர்ந்து விழுந்து விட்டாள். அவளை ஒரு மாதிரியான நிலைக்குக் கொண்டு வரக் கிருஷ்ணமூர்த்தி ஒரு மாதம் சிசுருஷை செய்ய வேண்டியதாகப் போய் விட்டது. அவள் சதா பிரேமாவைப் பற்றியும், ஹரி, ஹரேனைப் பற்றியும் கவலைப்படலானாள். தன் கணவருக்கு இவ்வளவு கஷ்டம் கொடுக்கிறோமே என்றும் கவலைப் பட்டாள்.

உடம்பு கொஞ்சம் தேறிய பிறகு ஒரு நாள் அவள், "அன்பே, உண்மை மனைவி என்பவன் கணவனுக்குத் துயரம் நேர்ந்த காலத்தில் ஆறுதல் கூறவேண்டும்; நோயுற்ற காலத்தில் பணிவிடை செய்ய வேண்டும்; தனிமையில் துணையாக இருக்க வேண்டும் என்று கூறினேன். ஆனால் நான் இப்பொழுது இம்மூன்று பணிகளையும் உங்களுக்குச் செய்ய முடியாத நிலையிலிருக்கிறேன். நீங்கள்தான் இம்மூன்றும் எனக்குச் செய்கிறீர்கள்" என்றாள் நாத் தழுதழுக்க.

இதற்குக் கிருஷ்ணமூர்த்தி, "அதனால் என்ன? நான் செய்வதுதான் சரி. நீ அன்று கூறியபொழுது, 'உண்மை மனைவி அல்லது கணவன்' என்று கூறியிருக்க வேண்டும். அவ்வளவு தூரம் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வதில்தான் இல்லற இன்பம் இருக்கிறது. ஒருவருடன் ஒருவர் ஒத்துப் போவதில்தான் மனித வர்க்கத்தின் நலன் இருக்கிறது" என்றான்.

அப்போது தந்திச் சேவகன் வந்து ஒரு தந்தியைக் கொடுத்து விட்டுப் போனான்.

"இதைத் திறந்து படி" என்று கூறிக் கொடுத்தான் கிருஷ்ணமூர்த்தி சங்கரனிடம்.



சங்கரன் தந்தியைப் பிரித்தான்; படித்தான்; அப்படியே சிலையாய்ச் சமைந்து விட்டான். கன்னங்கள் வழியே கண்ணீர் அருவியாகப் பெருக்கெடுத்து ஓடியது. கிருஷ்ணமூர்த்தி அவனிடமிருந்து தந்தியை வாங்கிப் படித்தான்.

"பஞ்ச நிவாரண வேலையாகப் பத்மா நதியைக் கடந்து கொண்டிருந்த போது, படகு கவிழ்ந்து ஹரியும் ஹரேனும், இன்னும் பன்னிரண்டு பேரும் மூழ்கி உயிர் துறந்தனர்" என்றிருந்தது தந்தியில்.

"அடகடவுளே!" என்று கூறி அப்படியே கிருஷ்ணமூர்த்தி கீழே விழுந்தான். ஏற்கெனவே சோகத்தின் உருவமாகத் திகழ்ந்த கீதா, "கடவுள்கூட இருக்கிறாரா?" என்று கூறிக் கொண்டே அவன் மேல் சாய்ந்தாள்.

"இருக்கிறார். அவர் ஒருவர்தான் நமக்கிருக்கும் ஒரு கொழு கொம்பு. அவரையும் உதறி எறிய வேண்டாம்" என்று கூறினான்.

அவன் எழுந்திருந்து உட்கார்ந்தான். கீதாவையும் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டான். "பிரேமாவைக் கூப்பிடு. அவள் சங்கரனைக் கல்யாணம் செய்து கொள்ள அனுமதி யளிப்போம். நாம் இருவரும் ருஷிகேசத்துக்குச் சென்று, கடவுளையும் அமைதியையும் தேடுவோம்" என்றான்.

"நீங்கள் எது சொன்னாலும் நான் கேட்கத் தயார்" என்றாள் கீதா.

"இல்லை, நீங்கள் இங்கேயே இருங்கள். இனி உங்களைத் தொந்தரவு செய்யாமல் நான் இதை விட்டுப் போய் விடுகிறேன்" என்றான் சங்கரன்.

"முடியாது! முடியாது! நீ மிக உயர்ந்த மனிதன். உன்னை வேண்டிய அளவு கஷ்டப் படுத்தியாகி விட்டது. இனி, நாங்கள் நிர்மாணித்து விட்டோம். எங்கே பிரேமாவைக் கூப்பிடு" என்றான் கீதாவினிடம்.

கீதா சென்று, பிரேமாவினிடம் அவள் சகோதரர்களுக்கு ஏற்பட்ட துர்க்கதியைத் தெரிவித்தாள். அத்துடன் தானும் அவள் அப்பாவும் அவள் விஷயமாகச் செய்துள்ள முடிவையும் கூறினாள். இதைக் கேட்டவுடன் பிரேமாவின் கண்களில் கண்ணீர் பெருகிக் கண்கள் சிவந்து விட்டன. "நான் ஏன் பிறந்தேன்? குலத்தைக் கெடுக்க வந்த கோடாலிக் காம்பாக நான் ஏன் பிறந்தேன்!" என்று கூறி அழுதாள் பிரேமா.

கிருஷ்ணமூர்த்தி, "அந்தமாதிரியெல்லாம் சொல்லாதே, பிரேமா! எத்தனையோ நாட்களுக்கு முன் செய்திருக்க வேண்டிய காரியத்தைத்தான் இன்று செய்கிறோம். அழாதே!" என்று கூறினான்.

பிறகு அவள் கரத்தைப் பிடித்துச் சங்கரனுடைய கையில் வைத்து "எங்கள் ஆசிகள்! முதலில் சிவில் கல்யாணச் சட்டப்படி கல்யாணம் செய்து கொள்ளுங்கள். பிறகு வேத மந்திரங்களுடன் ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த ராமநாராயண பண்டிதர் கல்யாணம் செய்து வைப்பார். என்றென்றும் சந்தோஷமாக இருங்கள்" என்று ஆசி கூறினான்.

கீதாவும் தன் ஆசி மொழிகளைக் கூறினாள்: "குழந்தைகளே, நீங்கள் எங்களைப் போல் இருங்கள். பரஸ்பர காதலோடு வாழுங்கள். எங்களைவிடச் சந்தோஷமாக வாழுங்கள்."

சங்கரனும், பிரேமாவும் அவர்கள் பாதங்களில் விழுந்து வணங்கினார்கள். "எங்கள் கல்யாணம் வரையிலாகிலும் நீங்கள் இங்கு இருந்து விட்டுப் போக மாட்டீர்களா?" என்று கேட்டார்கள்.

"முடியாது. அழைப்பு வந்து விட்டது. நாங்கள் போகிறோம். ராமன் காட்டுக்குச் செல்லும் போது தசரதன் மரணத் தறுவாயிலிருந்தான். இருந்தாலும் ராமன் தந்தையை விட்டுக் காட்டுக்குச் சென்றான்.

ரகுபதி ராகவ ராஜா ராம்
பதித பாவன ஸீதா ராம்."

"நீங்கள் சென்று விட்டீர்களானால் இந்த ஆச்ரமத்தை யார் பார்த்துக் கொள்வார்கள்?" என்று கேட்டான் சங்கரன்.

"ஏன், நீயும் பிரேமாவுந்தான்" என்று கூறி விட்டு ஆசிரமத்தைச் சேர்ந்தவர்களையும் ஆசிரியர்களையும் கூப்பிட்டுத் தங்கள் முடிவைத் தெரிவித்தார்கள். பிறகு, "சங்கரனும் பிரேமாவும் இந்த ஆசிரமத்தை நடத்துவார்கள். எங்கள் மீது எவ்வளவு அன்பு வைத்து ஒத்துழைத்தீர்களோ, அப்படியே இவர்களுடனும் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்!" என்றான்.

"அப்பா, நானும் காஷாயம் தரித்துப் பால யோகினியாக வந்துவிட வேண்டும் போல் தோன்றுகிறது" என்றாள் பிரேமா.


கிருஷ்ணமூர்த்தி அவள் தலையை மெதுவாகத் தட்டிக் கொண்டே "சே, அப்படிச் செய்யவே கூடாது. அதற்குச் சமயம் இன்னும் வரவில்லை. உன் கணவனுடன் சில ஆண்டுகள் வாழ்ந்து இல்லற வாழ்க்கையின் இன்பம் நுகர்ந்தபின் உனக்கும் இம்மாதிரியானதோர் உள்ளுணர்வு ஏற்படும். அப்பொழுது எங்களைப் போலவே நீயும் புறப்படலாம்" என்றான்.


மறு நாள் கிருஷ்ணமூர்த்தியும் கீதாவும் ஹிமாலயத்துக்கு யாத்திரை புறப்படும் போது வழி யனுப்ப, ஆச்ரமச் சிறுவர்கள், சிறுமிகள், ஆசிரியர்கள், உள்ளூர் வாசிகள் —இப்படி ஒரு மாபெரும் கூட்டமே கூடிவிட்டது ரயில்வே பிளாட்பாரத்தில்.

சங்கரன் கிருஷ்ணமூர்த்தியின் அருகில் சென்று, "ஐயா, தாங்கள் எல்லாச் சுமையும் இறக்கி வைத்து விட்ட உணர்ச்சி பெற்று விட்டீர்களா?" என்று கேட்டான்.

"ஆமாம்" என்றான் கிருஷ்ணமூர்த்தி.

அப்பொழுது ரயில் 'கூ......' என்று நீளமாகக் கத்திவிட்டுப் புறப்பட்டது. (முற்றும்.)


1
2
3
4
5
6



புதுவையை அடுத்த நோட்டப்பாக்கம் கிராமத்தில் பிரஞ்சிந்திய விவசாய அமைச்சர் ஸ்ரீ முத்துக் கோமரப்பா ரெட்டியார் முதலிய பிரமுகர்களின் முயற்சியால் செப்டம்பர் 14உ நடைபெற்ற ராமலிங்க ஈஸ்வர ஆலய மகா கும்பாபிஷேக வைபவக் காட்சிகள்.

1. கும்பாபிஷேகம் நடக்கிறது. 2. தங்கவாசல் கோபுரத்துக்கு அபிஷேகம். 3. திரு ஓ. பி. ராமசாமி ரெட்டியாருக்கு வரவேற்பு. 4. கோவிலுக்குள் எழுந்தருளியிருக்கும் சுப்பிரமணியப் பெருமானுக்குத் தீபாராதனை நடக்கிறது. 5. புதிதாக நிர்மாணித்த கோபுரங்களில் ஒன்று. 6. கும்பாபிஷேகத்தின் போது கூடியிருந்த பக்தர்களின் கூட்டம். 7. கும்பாபிஷேகத்துக்கு வந்த திரு சுத்தானந்த பாரதியாருக்கு வரவேற்பு. 8. பிரஞ்சிந்திய கவர்னரும் அவர் சகாக்களும் வருகின்றனர். 9. தீர்த்த கலசம் பிரகாரத்தை வலம் வருகிறது. 10. பந்தல் முகப்பில் தீபாலங்காரம். 11. இராமலிங்கேஸ்வரருக்கு திரு சுத்தானந்த பாரதியாரின் அஞ்சலி. 12. ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் தம் கோஷ்டியுடன் கச்சேரி செய்தார்.





வட்ட மேஜை

கல்கி 20—9—53 இதழில் வெளியிட்டிருந்த "சோஷலிஸம் ஏன் வேண்டும்?" என்ற முதற் பரிசுக் கட்டுரையைப் படித்தேன்.

'சோஷலிஸம் ஏன் வேண்டும்' என்று கூறுவதற்கு முன்பு, பொதுவுடைமையும், முதலாளித்துவமும் ஏன் வேண்டாம் என்று கூற முற்பட்டிருக்கிறார் கட்டுரை ஆசிரியர். பொதுவுடைமைக் கொள்கைகளிலும், சோஷலிஸக் கொள்கைகளிலும் உள்ள அடிப்படை வேற்றுமை பற்றியும், அதனை அவர்கள் சாதிப்பதற்காகக் கொண்டுள்ள முறைகள் பற்றியும் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

பொதுவுடைமை அரசாங்கத்தில் மக்கள் குறைந்த ஊக்கத்துடனேயே உழைக்க முற்படுவார்கள் என்று அவர் கூறியிருப்பது முற்றிலும் சரியல்ல. பொதுவுடைமைத் தொழிற்சாலையில், சிப்பந்திகள் மேலதிகாரிகள் உத்தரவுப்படி நடக்க நேரிடுமே தவிரத் தங்கள் சுயபுத்தியுடனும், சுயமனோ தர்மத்தைக் கொண்டும் ஒன்றும் செய்வதற்கு வசதியிருக்காது என்ற கூற்று ஒப்புக்கொள்ளக் கூடியவாறு இல்லை. பொதுவுடைமைச் சமுதாயத்தில் தங்கள் திறமையையும், அறிவாற்றலையும் புலப்படுத்த மக்கள் எல்லோருக்கும் சரிசமமான வாய்ப்பளிக்க முடியும். ரஷ்யா போன்ற பொதுவுடைமை நாடுகளில் ஹென்றி போர்டுக்குச் சமமான மேதாவிகளைப் பற்றியும், சிறந்த இராஜ தந்திரிகளைப் பற்றியும், பிரபல விஞ்ஞானிகளைப் பற்றியும் கேள்விப் படாமலா இருக்கிறோம்! அவர்களில் எத்தனையோபேர் மிகச் சாதாரண குடும்பங்களிலிருந்தே வந்திருக்கிறார்கள்.

ஹென்றி போர்டைப் போல் சொந்தத் தொழிற்சாலை ஸ்தாபிக்கா விட்டாலும், தம் திறமையினால், சர்க்காரால் நடத்தப்படும் தொழிற்சாலைகள் வளருவதற்கு உதவ முடியுமே! இப்படித் தனி மனிதனுக்குத் தன் மனோதர்மத்தையும், சுய புத்தியையும் உபயோகிக்க வாய்ப்பளித்திருக்கா விட்டால், ரஷ்யா அணுகுண்டும், ஹைட்ரஜன் குண்டும் எங்களிடமும் இருக்கின்றன என்று அமெரிக்காவுக்குச் சவால் விட்டிருக்க முடியுமா!

பம்பாய்
21—9—53 எஸ். சுப்ரமணியம்

●

ராஜாஜியின் புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை நல்ல முறையில் விளக்கி 'கல்கி'யில் வெளிவருவதை எங்கள் கிராம வாசிகள் அனைவரும் போற்றுகின்றனர்.

எங்கள் கிராமத்துப் பஞ்சாயத்து மிகவும் நல்ல முறையில் நடைபெறுகிறது. ரேடியோ வைக்கப்பட்டுள்ளது. எவ்வளவு ஆவலாக 'கல்கி'யைப் படிக்கிறார்களோ அதேமாதிரி ரேடியோவும் கேட்கின்றனர். கிராம நிகழ்ச்சிகளின் மூலம் எளிய முறையில் கிராமத்தார்க்குத் தகுந்த முறையில் திருச்சி ரேடியோ நிலையத்தார்கள் அரும்பணி செய்கின்றனர். ஆனால் அது ஒலிபரப்பும் நேரம் சற்று தாமதித்து இருக்க வேண்டும்.

தோட்டத்தில் விவசாய வேலைகளை முடித்து விட்டு, ஆடு, மாடுகளைக் கவனித்துவிட்டு, வீடு திரும்ப ஏழு மணிக்குமேல் ஆகிவிடுகிறது. உணவு அருந்திவிட்டு ரேடியோ கேட்க வருவதற்குள் அந் நிகழ்ச்சியே முடிந்து விடுகிறது. எவ்வளவு முயன்றாலும் ஆரம்பிப்பதற்குள் வர முடிவதில்லை. எனவே அந்நிகழ்ச்சியை மாலை 7-15 க்கு மேல் எப்பொழுது வேண்டுமானாலும் வைத்துக் கொண்டால் மிக்க பலனுண்டாகும்.

தென்னிலை
1—9—53 வி. எஸ். சின்னசாமி

●

ஸ்ரீ ராஜாஜி அவர்களின் புதுமுறைக் கல்வி மிகவும் சிறந்தது. இத்திட்டம் அடுத்தாண்டு நகரத்திற்கும் வரவேண்டுமென்பது என்போன்ற ஆசிரியர்களின் சிறந்த நோக்கம். இதன் பொருட்டுப் பெற்றோர் சங்கம், உபாத்தியாயர் சங்கம், இவைகளில் பிரசாரம் செய்து வருகிறோம். எல்லோரும் இதற்கு ஆதரவு காட்டுகின்றனர்.

ராஜபாளையம் கே. சண்முகவேலு.
15—9—53 (தலைமை ஆசிரியர்.)

●

'சோஷலிஸம் ஏன் வேண்டும்!' என்ற நூறு ரூபாய் பரிசு பெற்ற கட்டுரையைப் படித்தேன். வாசிப்பவர்களுக்கு எளிதில் விளங்கக்கூடிய வழியிலும், நமது நாட்டுக்குத் தற்போதைய நிலைமைக்கு ஏற்றபடி அனைவரும் படித்துப் பயன்படும் வகையிலும் கட்டுரை எழுதிய ஸ்ரீ எம். சுப்புவை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

கொழும்பு
19—9—53 கே. சீதாராமன்

●

கல்கி 9—8—53, இதழில், "பொன் யுகம் பிறந்தது" என்னும் தலைப்பில் பிரசுரமாயிருந்ததை நானும் என் கழகத் தோழர்களும் படித்துப் பூரிப்படைந்தோம். தேசியத் திலகம் ஸ்ரீ விநாயக விநோபாபாவே அவர்களின் பூமிதான யக்ஞம் பாரத ஏழைப் பிரஜைகளுக்கு நல்லதோர் வரப்பிரசாதம். இதில் அதிக நிலம் கொண்டவர்கள் தாராளமாகத் தானம் செய்து பாரத நாட்டின் பெருமையைப் பாதுகாப்பார்கள் என்று நம்புகிறோம். பலாத்காரத்தால் எதையும் சாதிக்க முடியாது. அஹிம்சைக்கு என்றும் அழிவில்லை என்பதை நிரூபித்து விட்டார் ஸ்ரீ வினோபா பவே. ஆகவே எங்கள் தமிழரசுத் தொழிலாளர் கழகத்தின் சார்பில் இத்திட்டத்தை வரவேற்கிறோம்.

அந்தமான்
4—9—53 சு. ப. பொன்னுசாமி

●

திருத்தப்பட்ட ஆரம்பக் கல்வித் திட்டம் இவ்வூர் போர்டு பாடசாலையில் கடந்த மூன்று மாதமாக அமுலில் உள்ளது.

பிள்ளைகள் சேர்த்தல் சற்று அதிகரித்துள்ளது. முன்பு கவனித்ததைவிட அதிக கவனம் பிள்ளைகளிடம் செலுத்த முடிகிறது. ஏனெனில் முன்பு போல் அதிக வகுப்புகளையும், பிள்ளைகள் கூட்டத்தையும் சமாளிக்க வேண்டியதில்லை. தற்சமயம் சம்பா நடவு சமயம் ஆனபடியால், பிள்ளைகள் பெற்றோர்களுக்கு உதவியாக வயல்களுக்குச் சென்று விவசாயத்தைக் கவனித்து வருகிறார்கள். மாணவர்கள் கற்றுழைப்பைக் கொணர்ந்து, நார் கிழித்து, "கயிறு திரித்தலில்" ஈடுபட்டுள்ளார்கள்.

நெடும்பலம் ஆர். நாராயணன்.
14—9—53 போர்டு பாடசாலை—தலைமை ஆசிரியர்


இப்பொழுது...இந்த
டால்கம் பௌடர் அந்த
உஷக்காலப்
புதுமையை
நாள் முழுதும் நிலைத்
திருக்கச்செய்கிறது!
அவ்வளவு
அவ்வளவு
தவிர, அவ்வளவு
இன்றே ஒரு டின் வாங்கிக்கொள்ளுங்கள்
பாண்ட்ஸ்
டால்கம் பௌடர்



பொழுது புலர்ந்தது; புள்ளினங்கள் ஆர்த்தன. உழவர்கள் புறப்பட்டார்கள்.

வேலுசாமி தம் கழனியைப் பார்க்கப் போனார். "நிலத்தில் தண்ணீர் வழிந்தோடிப் பாய்ந்திருக்கும். அலை பாயும் குளமா யிருக்கும்" என்ற எண்ணத்தோடுதான் அவர் போனார்.

ஆனால் போன இடத்தில் என்ன ஏமாற்றம்! அவர் நிலத்துக்குத் தண்ணீர்ப் பாயவில்லை. முதல் நாள் இரவு இரண்டு மணி வரையில் கண்விழித்து, வாய்க்காலில் கொண்டைப் போட்டு, படாத சிரமமெல்லாம் பட்டு, தண்ணீரைத் தம் வயல்களுக்குத் திருப்பி யிருந்தார் அவர். "பொழுது விடிவதற்குள் நிலம் நிரம்பி விடும்" என்ற திருப்தியுடன்தான் அவர் வீடு திரும்பி யிருந்தார்.

ஆனால் அவர் போட்டிருந்த வாய்க்காலின் கொண்டம் உடைக்கப் பட்டிருந்தது. தண்ணீரும் பிரவாகமாக மேலே மேலே வாய்க்காலினூடே பாய்ந்து ஓடிக் கொண்டிருந்தது. அவருக்குக் கோபம் பற்றிக்கொண்டு வந்தது. "எந்த மோசக்காரன் செய்த வேலை இது! அந்த அயோக்கியன் யார்! அவனைச் சும்மா விடக்கூடாது. இரண்டில் ஒன்று பார்த்து விடுவது" என்று அவர் உள்ளத்தில் அடைத்து வைத்திருந்த ஆத்திரம் பொங்க, தம் திட்டத்தை இப்படிக் குலைத்துவிட்ட அந்தச் சுயநலக்காரனை ஒரு கை பார்த்து விடுவதென்று அவர் வாய்க்காலில் தண்ணீர் ஓடும் திசையாக நடக்க ஆரம்பித்தார்.

வாய்க்காலின் வேறு இடத்தில், கொஞ்ச தூரம் தள்ளி, மறு கொண்டம் போடப்பட்டிருந்தது. தண்ணீரும் மானாவாரியாக அங்கே வயல்களில் பாய்ந்து கொண்டிருந்தது. இப்பொழுது தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்த அந்த நன்செய் நிலங்கள் தங்கசாமியினுடையதுதான்.

*　　　*　　　*

தங்கசாமி வேறு யாருமல்ல. வேலுசாமியின் உயிருக்குயிரான நண்பர். இருவருக்கும் நட்பு இன்று, நேற்று ஏற்பட்டதல்ல. இருவரும் பக்கத்துப் பக்கத்து வீட்டுக்காரர்கள்தாம். தலைமுறை தலைமுறையாக, பரம்பரையாக, பாட்டன், முப்பாட்டன் காலத்திலிருந்து, இந்த இரு குடும்பங்களுக்குமே மிக்க அன்னியோன்னிய முண்டு. நல்லது கெட்டது எல்லாவற்றிற்கும் ஒருவரை ஒருவர் கலக்காமல் எதுவுமே செய்து கொள்ள மாட்டார்கள். தங்கசாமி, வேலுசாமி காலத்தில் இந்த நட்பு ஆல் போல் தழைத்து, அருகு போல் வேர் ஓடி யிருந்தது. தங்கசாமியின் வார்த்தையை வேலுசாமி மறுத்ததோ, வேலுசாமியின் பேச்சுக்குத் தங்கசாமி மறுபேச்சு பேசியதோ இது வரையிலும் கிடையாது. கொடுக்கல் வாங்குவதிலும் சரி, மற்றப்படி ஒருவரின் பொருளை மற்றவர் உரிமையோடு எடுத்துக்கொண்டு போவதிலும் சரி, அவர்கள் நட்பு மேன்மேலும் பெருகிக் கொண்டிருந்தது. ஆண்கள் மட்டும் அப்படியல்ல. பெண்களும், குழந்தைகளும், நெருங்கி, ஒட்டி, உறவாடி, ஒன்றறக் கலந்து, சொந்தம் கொண்டாடி, மனம் விட்டு, பழகிக்கொண்டிருந்தார்கள்.

வேலுசாமியின் மனைவி பார்வதி, தங்கசாமியின் மனைவி மீனாட்சியுடன் இழைந்தாள். மீனாட்சி வீட்டு வேலையை முடித்துக் கொண்டு பார்வதியிடம் வந்துவிடுவாள், பேசிப் பொழுதைக் கழிக்க. ஒருவருக் கொருவர் வீட்டு வேலைகளில் ஒத்தாசை செய்து கொள்வார்கள். சந்தைக்குக் காய்கறிகள் விற்கப் போனால், ஒன்றாகத்தான் சேர்ந்து போவார்கள். குளத்துக்குக் குளிக்கப் போனாலும், கழனிக்குக் கஞ்சி கொண்டுபோனாலும், அவர்கள் சேர்ந்தே காணப்படுவார்கள்.

தொன்று தொட்டு இவ்விரு குடும்பங்கள், உறவு முறையின்றி, உள்ளத்தில் ஒட்டி நின்று, உரமேறி வளம்பெற்ற நட்பினால் மட்டுமே பிணைக்கப்பட்டிருந்தன. இதுவரை கொள்வது, கொடுப்பதைப் பற்றி யாருமே நினைத்துப் பார்க்கவில்லை போலும்.

ஆனால் வேலுசாமி, தங்கசாமி காலத்தில் இப்படி ஒரு வழி யிருந்தது; அதற்கென மனமு மிருந்தது; வாய்ப்பு மிருந்தது.

வேலுசாமியின் மகள் கண்ணம்மாள் கண்களும் வனப்பு மிக்கவளாய், பால் வழியும் முகப் பொலிவுடன், பருவகாலத்து அழகு மங்கையாய் வளர்ந்திருந்தாள்.

தங்கசாமியின் மகன் கண்ணப்பனும் இளம் காளைப் பருவத்தினனாய், கவர்ச்சியுடன் இருபத்தைந்து வயது வாலிபனாய்த் தோற்றமளித்துக் கொண்டிருந்தான்.

இவ்விரு இளம் ஆண் பெண் உள்ளங்களை, வாழ்க்கைச் சகடத்தில் ஒன்றாக இணைத்துப் பூட்டி, தங்கள் உறவை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்ற ஆசை முதலில் பார்வதியிடமும் மீனாட்சியிடமும் அறையில் நிறைவேறிய தீர்மானமாகியது. அதுவே நாளடைவில் இடம் பெற்று, வளம் பெற்று, வேலுசாமி, தங்கசாமி இவர்கள் ஒத்துக் கொள்ளும் வரையில் வந்து, ஊரெல்லாம் அம்பலப் படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. எல்லாருமே இச் சம்பந்தத்தை ஆவலோடு எதிர்பார்த்தனர்.

பெற்றோர்களின் தீர்மானத்துக்கு முன்பே, கண்ணப்பனும், கண்ணம்மாவும் ஒருவரிடம் ஒரு

வர் உள்ளத்தைப் பறி கொடுத்திருந்தனர். அவர்களுக்குக் கிடைத்திருந்த வாய்ப்பும், சூழ்நிலையும் அவர்களிடத்தே அன்பையும் உறவையும், நேசத்தையும் வளர்த்திருந்தது. ஈருடலும் ஒருயிருமாக அவர்கள் இருந்தனர். தங்கள் மணவாழ்க்கையை விரும்பி நின்ற அவர்கள், பெற்றோர்களின் எண்ணத்தை யறிந்து, திருமண நாளை ஆவலுடன் எதிர் பார்த்திருந்ததிலும் அதிசயமில்லை.

* * *

ஆனால் இப்பொழுது வேலு சாமியின் கோபம் என்னவோ அடங்கினதாகத் தெரியவில்லை. "போனால் போகிறான். நண்பன் தங்கசாமிதானே இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறான்" என்று அவரால் எண்ண முடியவில்லை.

"தங்கசாமி, நேற்றே என்னிடம் சொல்லியிருக்கலாம். 'நான் முதலில் என் நிலத்துக்குத் தண்ணீர்ப் பாய்ச்சிக் கொள்கிறேன். பிறகு நீ கொண்டம் போட்டுக் கொள்' என்று. இதை ஏன் அவன் சொல்லவில்லை! நான் கஷ்டப்பட்டு அணைபோட்டு, வாய்க்காலின் தண்ணீரை மடக்கி விட்டபின், இந்தப் பயல் எப்படி இதைச் செய்யலாம்! நான் இளிச்ச வாயன் என்றுதானே இதற்கு அர்த்தம். அவன் நெருங்கிய தோழனாக யிருக்கலாம். என் மகளைத் தன் மகனுக்குக் கட்டி வைத்து, சம்பந்திக்காரனாக வருபவனாகக் கூட யிருக்கலாம். கேட்கக் கேள்வியில்லாமல் இப்படி செய்திருப்பதைச் சும்மா விடக் கூடாது" என்று எண்ணினார். அவர் கோபம் அதிகரித்தது. தம் ஏமாற்றத்தின் பிரதிபலிப்பாய், அவர் வாயிலிருந்து வரத் தகாத வார்த்தைகள், சொல்லக் கூடாத சொற்கள் எல்லாம் வந்தன.

அப்பொழுது தங்கசாமி அவ்விடம் வந்து விட்டார். தங்கசாமியைப் பார்த்ததுமே வேலுசாமியின் ஆங்காரம் அதிகரித்தது. வேலுசாமி, தங்கசாமியின் எதிரிலேயே அவரைக் கண்டபடி திட்ட ஆரம்பித்து விட்டார்.

தங்கசாமி தம் தவறை உணர்ந்து அடங்கிப் போகவே விரும்பினார்.

"அண்ணே! நான் செய்தது தவறுதான். மன்னித்து விடுங்கள். காற்றங்கால் தண்ணீர் இல்லாமல் காய்ந்து போய்விட்டது. வெறும் வயலுக்குத்தானே நீங்கள் தண்ணீர்ப் பாய்ச்சியிருந்தீர்கள். அதனால்தான் உங்களிடம் காலையில் சொல்லிக் கொள்ளலாம் என்று கொண்டத்தை உடைத்து, மறு கொண்டம் போட்டேன். நேற்று நான் ஊரிலில்லை. இராத்திரிதான் வந்தேன். கொஞ்சம் தூங்கி விழித்த பின், காற்றங் காலுக்குத் தண்ணீரில்லை என்று ஞாபகம் வந்தது; ஓடிவந்தேன். வந்து பார்த்தால், நீங்கள் தண்ணீரை மடக்கியிருந்தீர்கள். நம் வேலுசாமி தானே என்ற உரிமையோடு, அணையை உடைத்துத் தண்ணீரைக் கொண்டு போனேன். அண்ணே! தவறு தவறுதான். மன்னித்து விடுங்கள்" என்று சொன்னார் தங்கசாமி. கொஞ்சும் குரலில்.

தங்கசாமியின் இந்தப் பரிதாப முறையீடு வேலுசாமியின் கோபத்தை இன்னும் சற்று அதிகமாகக் கிளறி விட்டது. அவர் ருத்ரா மூர்த்தியாகக் கோப வெறியில் தொடர்ந்து பேசலானார்.

"அண்ணே! இதை இப்படியே விட்டுத் தள்ளுங்கள். நடந்தது நடந்து விட்டது. உங்களால் நான் பிழைத்ததாக யிருக்கட்டும். நமக்குள் சண்டை, சச்சரவு வேண்டாம். ஊரில் இருப்பவர்கள் நம்மை இளக்காரமாகப் பேசிக் கொள்வார்கள்; ஏளனம் செய்வார்கள்" என்று தங்கசாமி அங்கிருந்து நகர ஆரம்பித்தார்.

அதற்குள் வேலுசாமி, "என்ன. போகிறாய்! இருந்து நியாய அநியாயத்தைச் சொல்லிவிட்டு ஒரு வழி செய்து கொண்டு போ" என்று தங்கசாமியின் கையைப் பிடித்து இழுத்தார். அப்பொழுது தங்கசாமியின் கால் களிமண்ணில் வழுக்கி விட்டது. அவர் வாய்க்காலில் போய் விழுந்தார். அவர் துப்புரவாகத் தண்ணீரில் நனைந்து போனார். அவர் அணிந்திருந்த துணிகளும் சேறாகிப் போய் விட்டன.


"என் பாபத்தைக் கொட்டிக் கொண்டதற்கு உனக்கு இப்படித்தான் வேணும்" என்று வேலுசாமி ஒரு பயங்கரச் சிரிப்புச் சிரித்தார்.

வாய்க்காலில் விழுந்த இடத்திலிருந்து, சுதாரித்துக் கொண்டு எழுந்த. தங்கசாமிக்கு வேலுசாமியின் இந்த வார்த்தை, அவர் உள்ளத்தில் பதுங்கிக் கிடந்த தன்மான உணர்ச்சியைத் தட்டிவிட்டது. வெகுண்டெழுந்த சிங்கமாக, அவர் வேலுசாமியை நோக்கி வந்தார். "போனால் போகிறது என்று பார்த்தால், நீ பாட்டுக்குத் துள்ளுகிறாயே! பெரிய நியாய அநியாயத்தைக் கண்டு விட்டவன் மாதிரி பேசுகிறாயே" என்று வேலுசாமியின் கன்னத்தில் இரண்டு அறைகள் அறைந்து விட்டார். ஒன்றுக்கு ஒன்றாக, இருவரிடமும் சண்டை வலுத்து விட்டது.

வாய்க்கால் மேட்டில் நடந்த இந்த நண்பர்கள் சண்டை அத்துடன் போய் விடுவதாக இல்லை.




பலத்த கண்டனம்



தேவநகரில் விநோபா பவே கோஷ்டியினரைப் பண்டாக்கள் தாக்கியது நாடெங்கும் பலத்த கண்டனங்களை எழுப்பி யுள்ளன.

வேலுசாமி தம் மனைவியிடம், "அந்தப் பயல் தங்கசாமி, நான் போட்ட கொண்டத்தை உடைத்து, தண்ணீர்ப் பாய்ச்சிக் கொண்ட தோடு, என்னையும் அடித்துப் போட்டு விட்டான். செய்ததை யெல்லாம் மறந்து விட்டான்" என்று முறையிட்டுக் கொண்டார்.

"அந்த வேலுசாமி தோழனுச்சே என்று, சொந்தம் பாராட்டி, நம் நிலத்துக்குத் தண்ணீர் பாய்ச்சப் போக, என்னைத் திட்டாததெல்லாம் திட்டி, வாய்க்காலில் பிடித்துத் தள்ளிவிட்டான். அவனுக்கு நான் எவ்வளவு செய்திருப்பேன். எல்லாம் மறந்து விட்டான்" என்று தங்கசாமி தன் மனைவி மீனாட்சியிடம் குறைப்பட்டுக் கொண்டார்.

உடனே இந்தத் தோழிகளும் வரிந்து கட்டிக் கொண்டு கிளம்பி விட்டார்கள் சண்டைக்கு.

"உன் புருஷனுக்கு இந்தக் கோபம் கூடாது. எப்படி என் புருஷனைப் பிடித்துத் தள்ளி உதைக்கலாம்!" என்று மீனாட்சி தெருவிலிறங்கிப் பார்வதியின் வீட்டுக்கு எதிரே வந்து கத்தினாள். அவளுக்குத் துணையாக, கோபமே உருவாகக் கண்ணப்பனும் தெருவில் நின்று கொண்டிருந்தான்.

"உன் புருஷனுக்கும் இந்த ஆங்காரம் கூடாது. இல்லாவிடில் அநியாயமாய்த் தண்ணீர் கொண்டு போனது மில்லாமல், கேட்ட மனிதரைப் போய் அடிப்பாரா!" என்று பார்வதியும் வீட்டிலிருந்து வெளியே வந்து விட்டாள். கண்ணம்மாவும் இச் சண்டையில் பங்கு கொள்ள வந்து விட்டாள்.

பெண்களின் வாய்ச் சண்டையில் ஆரம்பித்த இது, மறுபடியும் ஆண்களின் கைகலப்பில் போய் முடியும் போல் தோன்றியது. அதற்குள் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் அவர்களை விலக்கிவிட்டுச் சமாதானப் படுத்தினார்கள்.

"அற்பர்கள். அவர்களோடு என்ன பேச்சு" என்று கண்ணப்பன் தன் தாய் தந்தையர்களை அழைத்துக் கொண்டு போனான்.

"அற்பப் புத்தி யுள்ளவர்கள் நாங்களில்லை. கொண்டத்தை உடைத்த நீங்கள்தான்" என்று கண்ணம்மா கூறித் தன் தந்தையையும், அன்னை அழைத்துப் போனாள்.

தண்ணீர்ச்சண்டை, பெற்றோர்களோடு மட்டுமில்லாமல், உள்ளத்தைப் பரிமாறிக் கொண்டிருந்த இளம் காதலர்களிடத்தும் விரோத மனப்பான்மையை வளர்த்து விட்டது.

இப்படியாக அன்னியோன்யமாக வசித்து வந்த இவர்கள் ஜன்ம விரோதியாக மாறினார்கள். அவர்களின் சண்டை வயற் புறத்தில் ஆண்களுடனும் சந்தை சாவடியில், தோட்டம் துறவுகளில், குளத்துமேடு, ஆற்றங் கரையில் பெண்களுடனும் மலைபோல வளர்ந்து கொண்டே இருந்தது. ஒருவரை ஒருவர் எப்படியாவது போசுக்கி ஒழித்துவிட வேண்டுமென்று விரும்பினர். அற்பச் சண்டை! பண்பில்லாத மனித உள்ளங்கள் பெரிதாக்கிக் கொண்டு விட்டன; காசு வேலையிலும் சடுபடத் தயாராகிக் கொண்டிருந்தன. கொடியில் இப்படியொரு மாறுதல்; வாழ்வின் புதிர்களில் இதுவும் ஒன்றோ!

வேலுசாமி தம் மகள் கண்ணம்மாவுக்கு வேறு எங்கெங்கோ மணமகன் பார்த்தான்.

தங்கசாமியும் கண்ணப்பனுக்கு வேறு மணப் பெண்ணைத் தேடிக் கொண்டிருந்தார்.

ஆனால் இருவருடைய முயற்சியும் கூடிவரவில்லை.

அதற்குள் தைமாதம் பிறந்தது; பொங்கல் புது நாளும் வந்து போயிற்று; அறுவடை காலமும் வந்தது. உழைப்பின் பயனை அடைவதிலேயே அவர்கள் சிந்தனை சென்றதினால், கல்யாண

விஷயத்தை வைகாசி ஆனி மாதத்துக்குத் தள்ளி வைத்து விட்டார்கள். நெல் அறுவடையில் மும்முரமாக முனைந்தார்கள்.

அந்த ஆண்டு விளைச்சலுக்கு ஒன்றும் குறைவில்லை. காலாகாலத்தில் மழை பெய்திருந்ததினாலும், "பயிர்களுக்குச் சேதம் விளைவிக்காதபடி வெள்ளம் வந்து, வண்டல் பாய்ந்திருந்ததினாலும் 'கட்டு கலம் காணும்' எனும்படி நெல் மகசூல் ஒன்றுக்குப் பத்தாக விளைந்திருந்தது.

விளைந்த நெல்லை விற்று, சிறப்பாகவே ஒருவருக்கொருவர் சளைக்காமல் கல்யாணத்தைச் செய்து காட்டிவிட வேண்டும் என்று வேலுசாமிக்கும் தங்கசாமிக்கும் ஆசை யிருந்ததிலும் வியப்பில்லை.

நிலத்தில் விளைந்து கிடந்த நெல் களத்துமேட்டுக்கும் வந்து விட்டது. வைக்கோல்போர் ஒரு புறம் மலைபோலக் காட்சி யளித்தது. குவியல் குவியலாக நெல் பட்டரையும் காட்சி யளித்தன. தங்கசாமியின் களத்திலும், வேலுசாமியின் களத்திலும் இப்படி, என்றுமில்லாதபடி விளைந்து கொட்டி யிருந்ததில் இருவருக்கும் கங்குகரையில்லாத திருப்தி. இருவருடைய களத்துமேடுகளும் கூப்பிடு தூரத்தில் தானிருந்தன.

ஒரு நாள் இரவு. இருள் எங்கும் சூழ்ந்திருந்தது. நள்ளிரவும் தாண்டி விட்டது.

நெல்லுக்குக் காவலாக, களத்துமேட்டுச் சிறு குடிசையில் படுத்திருந்த வேலுசாமியின் உள்ளத்தில் ஒரு எண்ணம் பளிச்சிட்டது. தீய எண்ணம் பழி வாங்கும் தன்மையுடையதாகத் தானிருந்தது.

"போய்த் தங்கசாமியின் வைக்கோல் போருக்குத் தீ வைத்துவிட வேண்டியது. ஒரு வத்திக்குச்சிதான் செலவு. வைக்கோல் போரோடு நெல் குவியல்களும் எரிந்து சாம்பராகிவிடும். அதோடு தங்கசாமியும் தொலைந்தான். அவன் மகளுக்கு எப்படிக் கல்யாணம் செய்கிறான் என்பதைத்தான் பார்ப்போம்" என்று எண்ணினார். எண்ணியதைக் காரியத்தில் சாதிக்க அங்கிருந்து கிளம்பி விட்டார் வேலுசாமி.

அதே சமயம் தம்முடைய களத்து மேட்டிலிருந்த தங்கசாமியும் யோசனையோடு தானிருந்தார். அவருடைய உள்ளத்திலும் இப்படி விபரீதமான, பழிக்குப் பழி வாங்கும் நினைவுதான். "வேலுசாமியைத் தலை தூக்க விடக் கூடாது. வைக்கோல் போரையும் நெல்லையும் கொளுத்தி ஆளை அழ வைக்க வேண்டும். அவன் கொட்டம் அடங்கிப் போய்விடும். மகள் கல்யாணத்தைப் பற்றி நினைக்கவே மாட்டார்" என்று நினைத்தவுடனே அவரும் அங்கிருந்து கிளம்பி விட்டார்.

இருவருக்குமே ஒருவர் களத்தை ஒருவர் அடைய அதே வாய்க்கால் கரைதான் வழி.

தீய மார்க்கத்தில் ஈடுபட்டிருந்த இந்த இரு 'மாஜி' நண்பர்களும் வழியில் சந்திக்கும்படி நேர்ந்ததை விதியின் விசித்திரம் என்றுதான் சொல்ல வேண்டும். ஒருவரைப் பார்த்து ஒருவர் வருகிறார். ஆனால் இன்னாரென்று இருட்டில் அடையாளம் தெரியவில்லை.

"யாரது!" என்றார் வேலுசாமி. அவர் குரலில் நடுக்கமும் பயமும் கலந்திருந்தன.

குரலைக் கொண்டு வேலுசாமியைத் தெரிந்து கொண்டார் தங்கசாமி.

"யாரது, கேட்கிறது!" என்றார் தங்கசாமி. வேலுசாமியும் இப்பொழுது தங்கசாமியைத் தெரிந்து கொண்டார்.

அதே சமயம் இருவர் மனத்திலும் போராட்டம். "இவன் ஏன் இப்படிக் கிளம்பி வருகிறான்! என்னைப்போலவே இவனும் தீ வைக்க வந்திருக்கிறானோ!" என்று ஒரு எண்ணம் இருவர் உள்ளத்திலும் தோன்றியது.

"என்ன காரியம் செய்ய இருந்தேன். ஆயிரம் விரோதம் இருக்கலாம். அதற்காக இப்படி எண்ணியிருக்கக்கூடாது. பிறர் கெட, நாம் வாழ நினைக்கக்கூடாது" என்ற நல்ல புத்தியும் அவர்கள் உள்ளத்தில் தனித்தனியே ஏற்பட்டது.

"என்ன தங்கசாமி! எங்கே இருட்டில் கிளம்பினாய்! தனியாக யிருப்பதில் பொழுது போகவில்லையா! பயமாக யிருந்ததா!" என்று வேலுசாமி பழைய விரோதத்தை மறந்து பேசினார்.

"ஆமாம், அண்ணே! தனியே மொட்டு மொட்டென இருந்ததில் என்னமோபோல இருந்தது. வாய்க்கால் கரையில் நடக்கலாம் என்று வந்தேன்" என்று தங்கசாமியும் மனம் விட்டுச் சிரித்துக் கொண்டே சகஜமாகப் பேசினார்.

"தங்கசாமி! போன வருஷம் இரண்டு பேரும் ஒருத்தருக்கு ஒருத்தர் துணையாக யிருந்தோம். இந்த வருஷம் அப்படியில்லை, பார்......ஆமாம் தங்கசாமி! நமக்குள் விரோதம் என்னத்துக்கு! நான்தான் தவறுதலாக நடந்து கொண்டு விட்டேன். சண்டை மூண்டது; பிரிந்து போனோம். என்னை மன்னித்துவிடு. இனிமேலும் நாம் இப்படி யிருக்கக் கூடாது. நீ என்ன சொல்கிறாய், தங்கசாமி!" என்றார் வேலுசாமி.

"ஆமாம் அண்ணே! எனக்கும் ஒரு வாரமாக இதே நினைப்புதான். நமக்குள் அப்படி என்ன நடக்காதது நடந்து விட்டது. இது சகஜம். கைவிரல் கண்ணைக் குத்தி விட்டால் யாரை நோகப் போகிறோம். எல்லாம் மறந்து விடுவோம் அண்ணே! என் தவறையும் மன்னித்து விடு!" என்று பதில் சொன்னார் தங்கசாமி.

அப்பொழுது இருவருடைய எண்ணமும், சண்டைக்கு ஒரு முடிவு கண்டு சமாதானமாகப் போக வேண்டும் என்றுதானிருந்தது. சற்று நேரத்துக்கு முன் அவ்விருவர் உள்ளத்திலும் உதித்திருந்த தீய நோக்கம்தான் இப்படி ஒரு நன்மை விளையக் காரணமாயிற்று. மறுகணமே அவர்களைப் பொசுக்க யிருந்த விரோதத் தீ தன்னாலேயே தணிந்து அணைந்தது.

வேலுசாமி தங்கசாமிக்கு வெற்றிலையும் பாக்கும் கொடுத்தார். தங்கசாமி வேலுசாமிக்குச் சுண்ணாம்பும், புகையிலையும் கொடுத்தார். அவர்கள் வாய்க்கால் மேட்டில் உட்கார்ந்து, வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டார்கள். அந்த நிமிஷத்திலிருந்து அவர்கள் விரோதிகளாக இருந்தவர்களாகத் தெரியவில்லை. எதை எதையோ பற்றி வெகுநேரம் பேசியிருந்து விட்டுப் பிறகு பிரிந்து போனார்கள்.

* * *


மறுநாள் காலை அவர்கள் சேர்ந்தே வீடு திரும்பினார்கள். இவர்கள் இருவரையும் ஒன்றாகப் பார்த்ததில் ஊரில் உள்ளவர்களுக்கெல்லாம் ஒரே அதிசயமாக யிருந்தது.

பார்வதி மீனாட்சியின் நட்பும், அன்னியோன்னியமும் அப்பொழுதே ஆரம்பமாகியது.

நடந்ததை எல்லாருமே மறந்து விட்டார்கள். சிநேகிதம்தான் மீண்டும் கொழுந்து விட்டது.

அதுமட்டுமல்ல, அடுத்த ஆனி மாதத்திலேயே கண்ணப்பன், கண்ணம்மாள் கல்யாணம் வெகு விமரிசையாக நடந்தேறியது. கல்யாணத்தில் வேலுசாமிக்கும், தங்கசாமிக்கும், ஆளுக்குப் பாதிப் பாதி செலவு. மணமக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கித் திளைத்துக் கொண்டிருந்தார்கள்.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10



நாளுக்கு நாள்

அதிக தெளிவான,

எழிலோங்கும் சருமம்



ரெக்ஸோனாவிலுள்ள **கேடில்** இந்த அற்புத
வேலையைச் செய்யட்டும்

ரெக்ஸோனாவின் கேடில் கலந்த நுரையை உங்கள் சருமத்தில் மெதுவாகத் தேய்த்து, பிறகு கழுவுங்கள். உங்கள் சருமம் நாளுக்கு நாள் அதிக மழமழப்பும் தெளிவும் பெறுவதைக் காண்பீர்கள்.





ரெக்ஸோனா

கேடில் கலந்த சோப் இது ஒன்றே

* சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.

RP 107-50 TM

ரெக்ஸோனா ப்ரொப்ரைட்டரி லிமிடெட்டுக்காக இந்தியாவில் தயாரித்தது.

REGD. NO. M. 4392

Registered as a newspaper in Ceylon



"இது சுலபம்...

லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து அதிக அழகுடன் விளங்குங்கள்"

என்று கூறுகிறார்

ருக்மணி தேவி

ருக்மணி தேவி கூறுவதாவது: "நான் வழக்கமாக லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து பெறும் சரும பாதுகாப்பை ஒருபொழுதும் தவற விடமாட்டேன். லக்ஸ் டாய்லட் சோப்பின் சருமத்திற்கு ஊட்டமளிக்கும் சக்தி என் சருமத்தில் அற்புதமாறுதலை ஏற்படுத்தியிருப்பதைக் காண்கிறேன்... சருமத்திற்கு புது சோபையும், மகிழ்ச்சிதரும் வழவழப்பும் அளித்திருக்கிறது."

லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்



LTS. 385-X30 TM